# திருக்குறளும்



ம - பாவிலுப் பிள்ளை, மா. ம தி.

பகுதி 1.

# விவிலியமும்



அன்பளிப்பு

சுப்பிரமணியம் அருள்பிரகாசம்

நினைவாக

"கோகனதை வாசம்"

சுதுமலை (மத்தி)

மானிப்பாய்.

# திருக்குறளும்

# விவிலியமும்

---

ம - பாவிலுப் பிள்ளை,

மா. ம. தி.

---

புனித விசேந்தி அச்சகம், மக்கோனை.

*Imprimatur*

\+ **N. Marcus Fernando**

Colombo.

8—7—79.

(C) பதிப்புரிமை ஆசிரியருக்கு

*1980.*

# தமிழ் வேதமாகிய

# திருக் குறளின்

# தத்துவக் கருத்துரையும்

# பொது வேதமாகிய

# விவிலியத்தின்

# பொருள் ஒப்புமையும்


ஆசிரியர் : ம. பாவிலுப்பிள்ளை, மா. ம. தி.
B. A., L. Ph., B. D.



அச்சிட்டோர் : புனித விசேந்தி அச்சகம்,
மக்கோனு.

# பொருளடக்கம்


| | |
|---|---|
| முன்னுரை | V |
| அணிந்துரை | VI |
| முகவுரை | VIII |
| அர்ப்பணம் | XXII |
| I வீடு அல்லது பாயிரம் | 1 |
| 1. கடவுள் வாழ்த்து | 2 |
| 2. வான் சிறப்பு | 29 |
| 3. நீத்தார் பெருமை | 42 |
| 4. அறன் வலியுறுத்தல் | 61 |
| II அறம் | 79 |
| அ) இல்லறம் | 80 |
| 5. இல்வாழ்க்கை | 82 |


(தொடரும்).

# முன்னுரை.

பொது வேத பனுவலாம் விவிலியத்தையும் தமிழ் தேவ நூலான திருக்குறளையும் அணுகி ஆராய அவகாசம் கடவுள் கருணையால் எமக்கும் கிடைத்தது. அவையிடையே உள்ள கருத்தொற்றுமை பற்றிப் பல கால் கேள்விப் பட்டிருக்கிறேன். அதின் உண்மை அகல வாசித்து ஆழ யோசித்தால் மட்டுமே தெளிவாகு மென்பது அனுபவ வாயிலாகப் புலப் பட்டது. படித்த சிலதைப் பலரோடும் பகிர்ந்து கொள்ளும் கருத் தோடுதான் இதை வடித்துத் தருகிறேன். பலன் பெறுவீர் எனும் நம்பிக்கையோடுதான் இந் நூல் நும்மிடம் வருகின்றது.

இதை வரையக் காரணமாயிருந்தவர் இளைப்பாறிய ஆயர் எட்மன் பீரிஸ் அவர்களே. கிடைத்த நாணயத்தைப் புதைத்து வைப்பது பிழை எனப் பல தடவை முறையிடுவார்; கரைச்சல் கொடுப்பார். அவரைச் சாந்தி செய்யு முகமாகவே இவ்வேலையைத் தொடங்கினேன்.

இதற்குமுன் பல பிரயோசனமான சரிதைகள், கட்டுரைகள், வரைந்து கொடுத்தும் பொறுப்புள்ளவர்கள் அவற்றை அச்சிட முன் வரவில்லை. சாக்குப் போக்குச் சொல்லிக் கடத்தினார்கள். அதன் காரணம் நானும் அறிந்தது. உண்மை சிலவேளை உறைக்கும். அது பலருக்குப் பிடிக்காது. அதிசயமில்லை. எனினும் கான்சருக்குக் கத்தி வைக்கத் தயங்கினால் விரைவில் மக்கரிக்க வேண்டி வரும். ஆன்ம அசமந்தம் புற்று நோயினும் பொல்லாதது. நாம் விரும்பிதையல்ல நமக்கு வேண் டியதையே தேடுவது கடமை. அதை அறியாது யதேச்சையாய் நடந்து இலட்சிய மடையலாமென நம்புவது பெரும் பேதமை, பரிதாபம், பரிகாசம்.

இதனால், எனக்கு மட்டும் படித்தால் போதும், விரும்பாதவருக்கு அறிவைப் பரப்பக் கடமையில்லை என்ற எண்ணம் என் மனத்துதித்தது. ''மதியாதார் முற்றம் மதித்தொருகால் சென்று மிதியாமை கோடி பெறும்'; ''விலையான முத்தைப் பன்றிமுன் எறியாதே'' என்பன அறிவுரை அல்லவா? ஆயினும், ஆயருடையவும் வேறு சிலருடையவும் சிபாரிசின் பேரில் பரீஸ் ''மிசன் அச்சு வெளியீடு'' தாபனத்தார் இந் நூலை வெளியிடப் பகுதிப் பண உதவி அனுப்பினார்கள். எதிர் பாராத வேறு சில வசதியீனங்களினால் அச்சிடும் வேலை தாமதமாயிற்று, உற்சாக ஊக்கமும் பொருளுதவி ஆக்கமும் தந்தவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கிறேன்.

இந்நூலின் உருவைப் பாராது அதன் பொருளை மட்டுமே கவனிக் கும்படி வாசகர்களை வேண்டுகிறேன். ''எப் பொருள் யார் யார் வாய் கேட்பினும் அப்பொருள் மெய்ப் பொருள் காண்பதறிவு'' என்று திருவள் ளுவரே சொன்னபடி மெய்ப் பொருளை அறிந்து அதை அடைந்து ஆனந்த வாழ்வு சுகிக்குமாறு இந்த எனது ஏழை உழைப்பு உதவுவதாக!

ம- பாவிலுப்பிள்ளை, மா. ம. தி.
மக்கோனை.
7. 10. 79.

# அணிந்துரை.

**வந்தனைக்குரிய எட்மன் பீரிஸ், மா. ம. இ. ஆண்டகை,**
**இளைப்பாரிய சிலாப ஆயர் அளித்தது.**

''பண்டைக் காலத்திலிருந்து இன்று வரை இயற்கையின் போக்கிலும் மனித வாழ்க்கையின் நிகழ்ச்சிகளிலும் காணப்படும் மறைந்த ஓர் ஆற்றலைப் பற்றிய உள்ளுணர்வு பல்வேறு மக்களிடையே காணக் கிடக்கிறது. சில நேரங்களில் ஒப்புயர்வற்ற ஒருவரைத் தெய்வமாகவும் ஏன் தந்தையாகவுமே அறிந்து ஏற்கின்றனர். இதனால் அவர்கள் வாழ்வு ஆழ்ந்த மறை உணர்வால் நிறைந்திருக்கிறது. முன்னேறிய பண்பாட்டோடு பிணைந்த மறைகள், நுட்பம் மிகுந்த கருத்துகளாலும் சிறப்பாய் வளர்ச்சியுற்ற மொழிகளாலும் இதே வினுக்களுக்கு விடையளிக்க வருந்தி முயன்றுள்ளன.'' **(வத். சங்: கிறித்தவமல்லாத மறைகள், 2.).**

இக் கூற்றின் உண்மைக்குச் சிறந்த சான்றாகப் புகழ் பெற்ற தமிழ்க் காவியமான திருக்குறளைச் சுட்டிக் காட்டலாம். திரு என்பது தெய்வீகம் அல்லது புனிதம். குறள் என்பது அதை யாத்த பாவினம். குறளடி நாற்சீரும் முச்சீரும் கொண்ட ஈரடியால் எதுகை மோனை இயைந்தது. திருக்குறள் ஒவ்வொன்றும் 10 செய்யுள் கொண்ட 133 அதிகாரங்களாக 1330 பாக்களாலானது. அறம் பொருள் இன்பமெனும் மூன்று உறுதிப் பொருட்களை விளக்கும். முதலாவது அறத்துப் பால் இல்லறம் துறவறமென இரு இயல் கொண்டது. இரண்டாவது பொருட்பால் அரசு அங்கம் ஒழிபு என மூவியலுடைத்து. மூன்றாவது காமத்துப்பால் களவு கற்பு என இரு இயல் மொழியும். திருக்குறள் ஒழுக்கம், அரசியல், காதல் எனப் பல பொருள் அடங்கிய பனுவல்.

புகழ் பெற்ற இந் நூலாசிரியர் திருவள்ளுவர் ஒரு சைனப் புலவராகலாம், கௌதில்யர், மனு, வத்தியாயனர் போன்றோர் நூல்களை அறிந்தவரென்பது வெளிப்படை. ''அவருடைய வாழ்க்கை பற்றிய வரலாற்றுச் சான்றுகள் சிலவே, அவருடைய நூலின் சிறப்பும் அதன் குறையாத செல்வாக்கும் அவரைப் பற்றிய பல கற்பனைக் கதைகளுக்குக் காரணமாயின. கி. பி. 450-500 குறள் உண்டான காலமெனக் கூறலாம்;' **(தென்னிந்திய வரலாறு- நீலகண்டசாஸ்திரி, பக்.350).**

சிறந்த தமிழ் அறிஞரும் 1711 முதல் 1747 மட்டும் தென்னிந்தியாவில் வேத போதகருமான யேசு சபைக் குரு கொன்ஸ்தந்தீன் பெஸ்கி திருக்குறளின் உன்னத ஒழுக்கக் கருத்துக்களையும் தெள்ளிய செய்யுள் நடையையும் மெச்சினார். அதைப் பலமுறை தனது செந்தமிழ் கொடுந்தமிழ் இலக்கணங்களில் மேற் கோள் காட்டிய தோடமையாது அதன் முதலிரு பாகங்களையும் இலத்தீனில் மொழி பெயர்த்து உரையும் வரைந்தார். மூன்றும் பகுதி உலக காதல் பற்றி விபரிப்பதால் அது கத்தோலிக்க சந்நியாசிக்குத் தகாதென்று விளக்காது விட்டார்.

போப்பையரும் சாள்ஸ் கிறவுலும் பெஸ்கி அடிகளின் இருநூல்களை யும் தங்கள் குறள் மொழி பெயர்ப்பிலே பாவித்தனர். (பெஸ்கி அடி கள்-எல். பெஸ் எழுதியது பக் 232..., திருவள்ளுவரின் குறள்-சாள்ஸ் கிற வுல் எழுதியது. முகவுரை).

குறளின் முதலதிகாரமான கடவுள் வாழ்த்து ''அகர முதல எழுத் தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு'' என்று தொடங்குகிறது. இவை ஒரு கிறித்தவன் மனதிலே திரு வெளிப்பாட்டின் வார்த்தைகளை நினைவூட்டுகின்றன. ''அகரமும் னகரமும் நானே என்கிறார் எல்லாம் வல்ல ஆண்டவராகிய கடவுள். இருக்கிறவர் இருந்தவர் இனி இருப்பவர் அவரே'' *(1. 8).* ''அகரமும் னகரமும் நானே-முதலும் இறுதியும், தொடக்கமும் முடிவும் நானே'' *(21. 6; 22. 13).* அதன் பின் கட வுளின் பெருமையைக் குறள் போற்றுகிறது; கற்றதனாலாய பயனென்ன வாலறிவன் நற்றாள் தொழாரெனின்;... மாணடி சேர்ந்தார் நிலமிசை நீடுவாழ்வார்;... அடி சேர்ந்தாருக்கு யாண்டு மிடும்பையில; இருள் சேரிரு வினையும் சேரா...; ...மனக்கவலை மாற்றலாம்; ... பிற வாழி நீந்தலாம்; கோளில் பொறியின் குணமிலவே எண் குணத்தான் தாளை வணங்காத்தலை,; இவையெல்லாம் சீராக் ஆகமத்தின் பகுதிகளுக்கு ஒத் திருப்பது தெளிவு. ''எல்லா ஞானமும் கடவுளிடமிருந்து உண்டாகி அவருடன் என்றென்றும் நித்தியமாயிருக்கிறது.'; *(1.1).* ''தெய்வ பய முள்ளவனுக்குத் தீவினை நேரிடா,; *(33.1).* ''ஞானத்தின் தொடக்கம் தெய்வ பயம்.'' *(1.16).* ''தெய்வ பயமே ஞானத்தின் நிறைவு.''*(1.20)*

திருக்குறளின் நிறைவான குறு மொழிகள் விவிலியத்தின் ஞான நூல்களின் முதுரைகள், ஒழுக்க நீதி மொழிகளை நினைவு படுத்துவது உண்மை. பெஸ்கி அடிகளின் திருக்குறள் மொழி பெயர்ப்பிலே தமிழ்க் கருத்துகளுக்குக் கிறித்தவக் கொள்கைச் சார்பு கொடுத்தாரென்பர். அஃதுண்மையாயின் அவர் செய்தவுரை ஞான நூல்களுக்கும் திருக்குற ளுக்குமிடையே உள்ள ஒப்புமையைப் பற்றிய அரிய தகவல்களைத் தரு மெனலாம். பெஸ்கியின் இரு நூல்களும் அச்சிற் கிடைக்காதது நமது துர்ப்பாக்கியமே. ஆயினும் அத்தகைய ஒப்புமையை ஆராய்வது அறிவுக் கும் வாழ்வுக்கும் ஆதாயமாகும்.

அருட்திரு, ம. பாவிலுப்பிள்ளை, மா. ம. தி. அடிகள் யாழ்பாணத் திலே பயின்ற இலண்டன் பட்டதாரி. வேத நூல்களை றோமை நகரிலே கற் றுத் தேர்ந்தவர். திருக்குறளின் முதலதிகாரங்களை ஆராய்ந்து விளக்கி விவி லிய நூலின் பொருத்தமான சில பகுதிகளைச் சுட்டிக் காட்டும், பிரயா சையான ஆனால் பயனுள்ள, வேலையை மேற்கொண்டுள்ளார். திருக் குறள் போலும் ஓர் தமிழ் இலக்கிய நூலில் இறை யொளி தேடும் இம் முதல் முயற்சி சித்தி பெறுமாயின் அவ்வேலை மறு அதிகாரங்கட்கும் தொடரும். அவருடைய நோக்கம் நிறைவுபெற வேண்டுமென்பதே நமது ஆழ்ந்த நம்பிக்கையும் விசேட வேண்டுதலுமாகும்.

**கம்பகா.** **எட்மன் பீரிஸ், மா. ம. தி.**
*21. 2. 79.* **இளைப்பாறிய சிலாப ஆயர்.**

# முகவுரை.

**பார் போற்றும் பனுவல்.**

''தமிழ் கூறும் நல்லுலகத்து'' (பனம்பரனுர்) பொன் போலப் போற்றப்படும் பனுவல் ஒன்றுண்டு. அதைத் தமிழகம் கடந்த 1800 ஆண்டுளாகக் கரிசனையுடன் கற்று அதன் போதனைகளை அனுசரிக்க முயல்கின்றது. அதனுல் அதற்குத் தமிழ் வேதம், பொய்யாமொழி, தெய்வ நூல் போன்ற புனைபெயர்களைச் சூட்டினர். முதல் ஆயிரம் ஆண்டுகளில் அதற்கு ஆக்கப்பட்ட உரைகள் அழிந்தொழிந்தன. ஆயினும் சங்கம் மருவிய நூல்களிலேதானே அதிலிருந்து மேற் கோள்கள் இடம் பெற்று விட்டன. இது அதன் செல்வாக்குக்குச் சிறந்த சான்று. பழைய உரைகள் பத்தின் மிகுதியோ பகுதியோ நமக் கெட்டியுள்ளன. இவற்றை இயற்றினேர்:

> தருமர் மணக்குடவர் தாமத்தர் நச்சர்
> பரிமேலழகர் பருதி - திருமலையர்
> மல்லர் பரிப் பெருமாள் காளிங்கர் வள்ளுவர் நூற்
> கெல்லை யுரை கண்டாரிவர்.

இவற்றைத் தருமபுர ஆதீனம் அச்சிட்டு அளித்திருப்பது நூலின் கல்விக்குப் பேருதவியாகும்.

**அறிவூறும் நூல்.**

இந்த நூற்றுண்டிலே திருக்குறள் பற்றி எழுந்த நூல்களின் அபிதானம் அநந்தம். நூற்றுக் கணக்கிலே உரைகளும் ஆராய்ச்சிக் கட்டுரைகளும் வெளிவருகின்றன. மகாநாடுகள் பட்டி மன்றங்களும் பத்திரிகை வெளியீடுகளும் வானொலி விமர்சனங்களும் பலப்பல. தமிழ் நாட்டுப் பல்கலைக் கழகங்களும் சங்கங்களும் திருக்குறள் ஆராய்ச்சிக் கென்று தனித் துறைகளை அமைத்திருப்பது இதன் அருமைப் பெருமையை உணர்ந்தென்க. இன்றைய ஆராய்ச்சி புரட்சிகரமான கொள்கைகள் சிலதையும் அளித்துள்ளது. ''தொட்டனைத் தூறு மணற் கேணி'' போன்ற திருக்குறளை நுளைந்து கற்போர் அதின் அறிவின் ஆழம் அகலம் கண்டு ஆச்சரியம் அடைகின்றனர்.

**திருக்குறள்.**

நாற்சீரும் முச்சீரும் கொண்ட ஈரடி வெண்பாவால் ஆக்கப் பெற்றதால் இது குறள் எனப்பட்டது. அறிவுச் செல்வம் நிறைந்ததால் இதற்குத் திரு என்ற அடை கிடைத்தது. ''கண்டாரால் விரும்பப்படும் நன்மை திரு'' என்பர் பேராசிரியர். இதிலே 10 குறள் வெண்பாக்கள் கொண்ட 133 அதிகாரங்களுண்டு. அதின் முதற்பா அகர உயிரிலே தொடங்கி 1330 வது செய்யுள் னகர மெய்யில் முடிகிறது. அதனுல் எழுத்திலே, பேச்சிலே, கருத்திலே உள்ள மனித வாழ்வுக்குரிய அறிவெல்லாம் இங்கு கருப்பொருளாக அடங்கியுள்ளதை அறிவிக்க ஆசிரியர் விரும்பினுர் போலும்.

**திருவள்ளுவர்**

திருக்குறளை யாத்தவர் திருவள்ளுவர் என்பது பாரம்பரியம். இவரது சரிதைபற்றி உறுதியான தகவல் ஏதுமில்லை. நூலிலே மூன்றுதரம் தன்னைப் பற்றிப் பேசுகிறார் (61, 300, 1071). அவர் அறிந்தது அறி வறிந்த மக்களின் சிறப்பு, வாய்மையின் நன்மை, கயவரின் சிறுமை. இவை தவிர அவருடைய ஒழுக்க விளக்கங்களிலே சில கருத்துக்களை ஆசிரியருக்குப் பொருந்துமென யூகிப்பது தவறாகாது. திருக்குறளின் பழைய பதிப்புகளிலே நாம் படித்த கவர்ச்சிகரமான கதையின் பெரும் பகுதி கற்பனை யென்றே கூற வேண்டும். கபிலரகவல், ஞானமிர்தம், வள்ளுவமாலை போன்ற நூல்கள் மூலம் கிடைத்த சம்பவங்கள் பெரும் பாலும் குறள்களுக்கு ஆதாரமாகவே தோன்றுகின்றன (வரதராசன்). எனினும் சிலவற்றுள் ஏதாவது சரித்திர உண்மை மறைந்து கிடந்தால் அதிசயப்பட இடமில்லை. ஆன்றகன்ற அறிவு நுட்பமுடையோர் போதிய ஆதாரங்களுடன் உண்மையை நிறுவினால் அதை ஏற்கவேண்டியதுதான். எமது இதிகாசங்கள் புராணங்களில் சில சரித்திர சம்பவங்களையும் ஒழுக்க போதனைகளையும் வைத்துக் கொண்டு நமது முன்னோரின் புலமை எத்தனை பொய்யும் புழுகும் நிறைந்த கற்பனைக் கோட்டைகளைக் கட்டி எழுப்பிவிட்டது என்பது நாமறிந்தது. எனினும் அவற்றில் உள்ள உண் மைகளைத் தள்ளிவிட முடியாது.

வள்ளுவன் என்ற சொல் முரசறைவோர், நூல்நூற்போர், அமைச் சர் ஆதியோருக்குப் பொருந்தும் பெயர். ''சோதிடம் கூறும் நிமித்திகன்'' என்பது சீவகசிந்தாமணி. ''வள்ளுவன் சாக்கை எனும் பெயர் மன்னற்கு உட்படுகருமத் தலைவற்கு ஒன்றும்'' என்பன திவாகரமும் பிங்கலந்தையும். ''வருநிமித்திகன் பேர் சாக்கை வள்ளுவன் என்றுமாகும்'' என்பது சூடாமணி நிகண்டு (2.22). இவற்றுள் ஆசிரியரின் அரசியலறிவை அவ தானித்தால் அவர் அரச கருமத்தில் அனுபவமுள்ள ஆசான் என்பதை எவரும் ஏற்பர். அதனாலவர் சாணக்கியர், சேக்கிளார் போன்ற உயர்ந்த பதவியில் உள்ளவர் என்று கொள்ளலாம். அவருடைய நுண்மாண்நுழை புலம் கருதித் திரு எனும் உரி அவர் பெயரோடு மருவியது. 5ம் நூற் றாண்டில் நாயனாரும், பின்னர் தேவர், செந்நாப்போதர் போன்ற பெயர்களும் புனையப்பட்டன. திருக்குறளின் யாப்பு நுட்பமான நெசவு வேலை என்பதைக் கற்றவர் எவரும் ஏற்றுக்கொள்வர். அதைப்பற்றிப் பண்டி தராஜோர் பல காண்டங்கள் வரையவும் நெடுநேரம் பேசவும் முடியும். இதிலே அவர் ஒழுக்க நெறியை அறிவிக்கும் முறை பறையறைந்து இடித் துரைப்பது போலவே விளங்குகிறது. ஒளிப்பு மறைப்பின்றி உண்மையை உள்ளபடி உரைப்பர். இவ்விரு கருத்தையும் உணர்த்தவே முரசறை வோர் மரபிலே பிறந்தார், நெசவு தொழிலையே செய்தார் என்ற கதைகள் உண்டானவை போலும். பிற்காலத்தில் நோக்கம்மறைந்து போக உதாரணம் உண்மையாக மாறியிருக்கலாம். பொருள் போலவே சொற் கருத்துகளும் காலத்திலுண்டாகும் பாவனையோடு மாறுவது இயல்பு. 1000 ஆண்டுகளின் பின் வந்த உரைகாரரிடமல்லத் திருக்குறளிலிருந்தே பொருள் தேடவேண்டும். வள்ளுவர் கருத்தை அறிய வள்ளுவரிடமே போகவேணும்.

**வள்ளுவர் காலம்.**

திருவள்ளுர் வாழ்ந்த காலம் பற்றிய வாத விவாதம் இன்றும் நடந்து கொண்டேயிருக்கிறது. சிலர் அவரைக் கி. மு. 1ம்-3ம் நூற்றுண்டுகளிலே வைப்பர் (மறைமலையடிகள், ஆ. பொ. விசுவநாதம், கந்தசாமிமுதலியார் போன்ருேர்).வேறு சிலர் அவரைக் கி. பி. 4ம்-5ம் நூற்றுண்டுகளுக்குத் தள்ளிவிடுவர் (நீலகண்டசாஸ்திரி, இராகவையங்கார் போன்ருேர்). கி. பி. 2ம்-3ம் நூற்றுண்டுகளில் அவர் வாழ்திருப்பார் என்ற கொள்கையே தற்போது வலுப் பெற்று வருகிறது. திருக்குறள் உக்கிரப் பெருவழுதி அவையில் அரங்கேற்றப் பட்டதென்பது மரபு. இவ்வரசன் நெடுஞ்செழியனின் பின் 4ம் தலைமுறையினன் என்பதால் 3ம் நூற்றுண்டு பொருந்துவது புலன். கடைச்சங்ககாலம் கி. பி. 1ம்-3ம் நூற்றுண்டுகளென்றும் அதன் முடிவிலேதான் சிலப்பதிகாரம், மணிமேகலை நாலடியார், திருக்குறள் ஆதியன தோன்றின எனவும் கொள்ளலாம். (வித்தியானந்தன்-தமிழர் சால்பு). சங்கநூல்கள் போர், வேட்டை, காதல் பற்றியே பேசுகின்றன. சமூக சேவையே சங்ககாலத் தமிழரின் குறிக்கோள்; அகமும் புறமுமே பாட்டுப் பொருள். சமயமும் ஒழுக்கமும் பின்னர் புகுந்தவையே. சங்ககாலச் செய்யுள்கள் அகவலிலும் வஞ்சியிலுமே யாக்கப் பட்டன. வெண்பா, விருத்தம் பிந்தியவை என்க.

இந்தக் கெடுவிலேதான் சமணர், புத்தர் செல்வாக்குப் பெருகி வளர்ந்தது. அவர்கள் பிராமணரின் வைதிக வேதத்திற்கு எதிரிகள். அவர்களுடைய கொள்கை தமிழகத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டது. பின்னர் 5ம் 6ம் நூற்றுண்டிலே பிராமணராதிக்கம் பெருகியது. அவர்கள் சமணருடன் சேர்ந்து புத்தரின் செல்வாக்கைத் தகர்த்தனர். அதன்பின் சமணரைக் கூசாமற் குலைத்தனர். சைவமும் வைணவமும் நாயன்மார் ஆள்வார் முயற்சியால் வலிமையும் செல்வாக்கும் பெற்றது 7ம் நூற்றுண்டின் பின்னரேதான் (வித்தியானந்தன்). இந்தச் சமயப் போட்டிக்கு முந்திய காலத்திலே தான் திருக்குறள் தோன்றியதென்பது அதன் பொருளிலிருந்து புலப்படும். வள்ளுவர் நூலிலே அகமும் புறமும் எடுத்தாளப் படுகின்றன. ஆனல், அழுத்தம் சமயமும் ஒழுக்கமுமாகும். பிராமணீயத்தைத் தாக்கிருலும் அதிலே கசப்பு, விரோதமில்லை.

**தமிழர் சமுதாயம்.**

1800 ஆண்டுகளின் முன் வாழ்ந்த தமிழர் சமுதாயம் கடைச் சங்க நூல்களிலே காணக்கிடக்கிறது. அச்சமுதாயம் பிறத்தி ஊடுருவல்களாலே பாதிக்கப்பட்டு விரைவாக மாறிக்கொண்டிருந்தது. கி. மு. 3ம் நூற்றுண்டில் மௌரிய பேராசின் ஆதிக்கம் தெற்கே மைசூர் மட்டும் பரந்திருந்தது. தமிழகத்திலும் ஈழத்திலும் அதின் செல்வாக்கு அதிகமிருந்ததென்பது போதரும். சந்திரகுப்தன் சமணராகி மைசூரில் மரித்தார். அசோகன் ஈழம் மட்டாகப் புத்த சமயத்தைப் பரப்ப உதவினுர். கி. மு. 1ம் நூற்றுண்டில் ருேமைப் பேரரசு இந்தியாவுடன் நேராக வியாபாரம் தொடங்கியது. கி. மு. 25ல் கல்லஸ் தளபதி ஏடெனைக் கைப்பற்றிச் செங்கடலில் ஆதிக்கத்தை நிறுவியதோடு அராபியரின் செல்வாக்கும்

குன்றியது. 7வது நூற்றூண்டின் பின்னரேதான் அது மீண்டும் தலையெடுக்கும். கி. பி. 1ம் நூற்றூண்டிலே ரூேமானர் தென்னிந்தியாவோடு கொண்ட தொடர்பு உச்ச நிலையடைந்ததென்பது புதைபெருள் ஆராய்ச்சியால் அறிந்தது.

தமிழக மக்கள் ஒற்றுமையைப் போற்றி வாழ்ந்தனர். பல சமயக் கொள்கைகள் நிலவிய போதிலும் போட்டியும் கலகமும் நாட்டைக் குழப்பவில்லை.

யாதுமூரே யாவருங் கேளிர்
தீதும் நன்றும் பிறர் தர வாரா
நோதலுந் தணிதலு மவற்றூரன்ன
சாதலும் புதுவதன்றே வாழ்தல்
இனிதென மகிழ்ந்தன்று மிலவே முனிவின்
இன்னுதென்றது மிலவே - புறநா. 192.

சாதித் திமிரில்லாது கல்விச் சிறப்பே செல்வாக்கடைந்தது.

ஒருகுடிப் பிறந்த பல்லோருள்ளும்
மூத்தோன் வருக வென்னுதவருள்
அறிவுடையோனுறரசும் செல்லும்
வேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ளும்
கீழ்ப்பாலொருவன் கற்பின்
மேற்பாலொருனு மவன் கட்படுமே - புறநா. 183.

தொழிலும் வணிகமும் நீதியும் கொடையும் பெருகின.

நீரின் வந்த நிமிர் பரிப் புரவியும்
காலின் வந்த கருங் கறி முடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமுமகிலும்
தென் கடன் முத்தும் குணகடற்றுகிரும்
கங்கை வாரியும் காவிரிப் பயனும்
ஈழத்துணவும் காழகத்தாக்கமும்
அரியவும் பெரியவும் நெரியவீண்டி
வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகின் -
பட்டினப் பாலை 185-193

அதனுல் மக்கள் அமைதியுடன் நெடுங்காலம் வாழ்ந்தனர்.

யாண்டுபலவாக நரையில வாகுதல்
யாங்காங்கியரென வினவுதிராயின்
மாண்டவென் மனைவியொடு மக்களுநிரம்பினர்
யான் கண்டனையரென்னிளையரும் வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கு மதன்றலை
ஆன்றவிந்தடங்கிய கொள்கைச்
சான்றூேர் பலர் யான் வாழுமூரே - புறநா. 191.

சான்றூேர் என்றொரு சாகியத்தினர் தொண்டைநாட்டில் வாழ்ந்தது இலக்கிய மறிந்தது.

## XII

வேழமுடைத்து மலைநாடு மேதக்க
சோழவள நாடுசோறுடைத்து - பூழியர் கோன்
தென்னாடு முத்துடைத்துத் தெண்ணீர்வயற்றொண்டை
நன்னாடு சான்றோருடைத்து — ஔவையார்.

மொய்தரத் தொண்டைநாட்டு முதுகுடிப் பிறந்த சான்றோர்
எய்திய விருந்தை யூட்டு மில்லெனப் பொலிந்த சோலை -
திருக் கழுக்குன்றப் புராணம்.

புத்தரும் சமணரும் சைவரும் வைணவரும் அந்தணரும் சான்றோரும் சேமமாக வாழ்ந்ததால் அவர்கள் தத்தம் கொள்கைளைப் பரப்ப முயன்றது இயல்பே. ''யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வுலகம்'' என்பதே சான்றோர் கொள்கை. அறிந்த உண்மையை உலகறிய உரைக்கும் உளத்தோடு வள்ளுவரும் தமது நூலை யாத்தார். அன்றைய மதப் பிரிவுகளுள்ளே சில கொள்கை வித்தியாசங்கள் விளங்கின. ஒரு கடவுளுண்டா அல்லது கடவுளர் பலரா? பிறவிச் சுழற்சியுண்டா இல்லையா? கொல்லாமை, புலாலுண்ணாமை சரியா அல்லது பிழையா?வள்ளுவரின் கூட்டத்தினர் உலகை ஆக்கிக் காக்கும் ஒரு கடவுளை ஏற்றனர். புலாலுண்ணாமையை அனுசரித்தனர். பிறவிச்சுழற்சிக் கொள்கையை மறுத்தனர். விதி, ஊழ்வினை, மறுபிறவி போன்றவற்றை புத்தர் சமணரிலும் வேறான பொருளில் ஏற்றனர். வேள்வியின் பெயரால் உயிர்க்கொலை செய்வதை வெறுத்தனர். இந்தக் கொள்கைகள் திருக்குறளில் எங்கும் பரந்து கிடப்பதைப் பார்க்கலாம்.

### இறைநூலா, அறநூலா?

திருக்குறள் ஒரு சமய நூலா அல்லது ஒழுக்க நூலா என்ற வினா பலதரம் விவாதத்துக்கு வருகிறது. இது ஒழுக்க நூலென்பது வெளிப்டை. இறை நூலுமா என்பதே ஆராய வேண்டியது. மனித சீவியத்துக்கு ஒரு நோக்கமுண்டு. மனிதன் கதியை அடையும் வழியே ஒழுக்க நெறி. மனிதன் படைத்தவனிடமிருந்து வருகிறான். அவனிடமே திரும்பவும் போகிறான். அவனோடு உள்ள தொடர்புதான் வேதம். நமக்கு ஒரு காரணமும் கதியும் உண்டு என்பதைப் பகுத்தறிவைப் பாவிக்கும் எவனுமறிவன். உலகிலே அதைப் பாவியாத மனிதர் பலர் இருக்கிறார்களென்பது விதனத்துக்குரியதே. மனநேர்மையுள்ள எவனும் நாத்திகனாயிருக்க முடியாது. நாத்திகம் பேசுவோர் வேறொன்றைக் கடவுளாகக் கொள்கின்றனர். சொற்பொருளின் சிக்கலாலேதான் இம் மாறாட்டம் சாத்தியமாகிறது. திருவள்ளுவர் தமது பாயிரத்தின் மூன்று அதிகாரங்களிலே கடவுள் பற்றியும் மனிதனின் அலுவல் பற்றியும் இறைவனின் உதவி, வழிகாட்டுதல் பற்றியும், சுருக்கமாக ஆனால் நிறைவாக, விளக்கியபின் நாலாவதில் அவர் காட்டிய அற வழியைப் பின்பற்றுமின் என்கிறார். அவ்வற வழியையே தொடரும் நூலில் விரித்துரைக்கிறார். அதனால், திருக்குறள் அறவழிகூறும் இறைநூலென்க. இதனாலேதான் திருக்குறளைத் தமிழ்வேதம, பொதுவேதம் என அழைப்பர்.

**சங்கத நூலொப்புமை.**

திருக்குறளைப் பகவத் கீதையுடன் ஒப்பிடுவது வழக்கம். அது சோர்வு கொண்ட பார்த்தனுக்குப் பகவான் புகட்டிய புத்திமதி. அது நால்வேதத்தின் சாரமான உபநிடதத்தோடு ஒத்ததெனவும் பாரதமென்னும் "பாற்குடத்திற் கடைந்தெடுத்த வெண்ணெய்" எனவும் போற்றப் படுவது. ஆயினும் அதைப் படித்தவர் அது பாரதம் போலவே சிதறுண்ட பல போதனைகளைச் சேர்த்துக் கோர்த்த தொகுப்பு நூலென்பதை அறிவர். கீதைபற்றிச் சங்கத விற்பன்னர் மொனியர் வில்லியம்ஸ் தரும் விபரம் இது: "பகவத் கீதை உள்ளபடி பீஸ்ம பருவத்துள்ளே செருகப்பட்ட பிற்காலத்தைய தத்துவபோதனைப் பாடல். பீஸ்மபருவத்தின் 25ம் அதிகாரம் அல்லது 830ம் வரியிற் தொடங்கி 1532ம் வரியில் முடிகிறது. அர்ச்சுனனுக்கும் தேர்ப்பாகனுகச் செயலாற்றிய கிருட்ணருக்குமிடையே நடந்த சல்லாபம் போல விபரிக்கப் படுகிறது. இதில், எல்லாம் இறைவனே என்ற வேதாந்த கொள்கையுடன் சிறிது சாங்கியக் கருத்தும் பிற்காலத்தில் இறைவனுக்கப்பட்ட கிருட்ண பக்தி வழிபாட்டுடன் கலந்திருக்கிறது. அதிலே உலகைத் துறக்கும் கடமையால் செயலற்றிருக்கவோ குலகடமையைக் கைவிடவோ வேண்டியதில்லையென்று அருச்சுனனுக்கு எச்சரிக்கை கிடைக்கிறது." (சங்கத அகராதி). திருக்குறளோ அங்குமிங்கும் பொறுக்கி எடுத்துச் சேர்த்த சிந்தனைத் தொகுப்பு நூலல்ல. தொடக்கமுதல் முடிவுமட்டாக "இறைவன் தந்த பொய்தீர் ஒழுக்கநெறி" காட்டும் ஒரே கருத்துடன் திரிக்கப்பட்ட தங்கநூல். அதனல், அதிலே உண்மையான முரண்பாடு காண்பதரிது. முரண்பாடாகத் தோன்றுவன (உ-ம் 396-373, 549-572, 550-326, 380-620) சந்தர்ப்பத்தோடு பொருத்தி ஆராயின் கருத்து ஒத்துத்போவது தெளிவாகும். அதிகாரமொவ்வொன்றும் தீட்டிய திட்டப்படி ஒழுக்கக் கருத்துக்களையும் நடைமுறை விளக்கங்களையும் தருகின்றது. அறிவும் செயலும் ஆற்றுநீர் போல வழிந்தோடுகின்றன.

கி. மு. 3ம் நூற்றுண்டில் சோமிய அந்தணரான சாணக்கியர் மௌரிய மன்னன் சந்திரகுப்தனுக்காகப் பொருள் நூல் செய்தார். வடமொழி அர்த்த சாஸ்திரம் தமிழ் குறளின் பொருட்பாலுக்கு ஒத்ததாகத் தோன்றினுலும் நோக்கம் வித்தியாசமானது; கௌதில்யர் போரில் வெற்றிபெறவும் பணம், பொருள் திரட்டவுமே யாவையும் வழிப் படுத்துகிருர். வள்ளுவர் சுட்டுவதோ பொதுமக்களின் சேமமும் செழிப்புமாம். அதனல், இருவருடையவும் கருத்துவேறுபாடு அவர்களுடைய இலட்சிய வேற்றுமையைக் காட்டுகிறது. கி. பி. 4ம் நூற்றுண்டில் வத்தியாயனர் இயற்றிய காமசாத்திரம் வள்ளுவரின் இன்பப்பாலோடு ஒத்துவராது. காமசாத்திரம் சிற்றின்பத்தின் கூறுகளையும் அதை அடையும் வழிகளையும் ஆராயும். வள்ளுவரோ தமிழ் மரபிலே குறையானவற்றை விலக்கிக் குடும்பவாழ்வுக்கு வழியான வழமைகளை மட்டும் விபரிக்கிருர். பரத்தையிற் பிரிவு போன்றவை இதில் இடம் பெறவில்லை.

**மரபிலே சில மாற்றங்கள்**

திருவள்ளுவர் தனித்தமிழ் நூலியற்றினர். மரபுவழுவாது எனினும் தனது தேவைக்குவேண்டிய சில திருத்தங்களோடு அதை அளித்தார். இன்பமே மனிதவாழ்வின் உயிர்நாடி. மனிதன் இன்பத்திலே உண்டாகின்றன். அதற்காகவே அவன் செயற்படுகின்றன். அதனுற்றான் தொல்காப்பியம். ''இன்பமும் பொருளுமறனுமென்றாங்கு'' எனக் களவியல் தொடங்கும். துன்பம் மனிதவாழ்வில் வந்தது கடவுள்தந்த பகுத்தறிவை மனிதன் பாவிக்க மறந்ததாலே, இன்பத்தை ஒழுங்கீனமாகத் தேடுவதாலே. வள்ளுவர் அறமும் பொருளும் பேசிய பின்னரே இன்பத்தை அணுகுகிறார். காரணம், அவர் தனது பாயிரத்திலே பேரின்பம் பேசுவதேயாம். உண்மையில் அவருடைய பாயிரம் வீட்டையே காட்டுகிறது. கடவுள், அவருடைய தன்மை, அவரை அடைவது அவசியம். இதிலே மனித வாழ்வின் இலட்சியத்தை நிறுவுகிறார். இதை அடையும் வழியைப் போதிப்பதே அவருடைய குறிக்கோள். நாம்பொருள் தேடுவது சிற்றின்பத்திற்கு. ஆனுல் இவ்விரண்டையும் தேடி அனுபவிப்பது பேரின்பத்துக்கு ஆயத்தமாகவே. எனவே, சிற்றின்பமூலம் பேரின்பம், பொருளின்மூலம் அறம் சம்பாதிக்க வேண்டியவை. அதனுல், அறம் முழுநூலிலும் இழையோடுகிறது. மேலும் இன்பத்துப்பாலிலே பக்தியையும் சேர்த்து யாத்திருக்கிறார் எனத் தோன்றுகிறது. (இரா. அருளப்பா). முத்திக்கு ஆன்மாவைத் தயாரிக்கும் பக்தி இவ்வாழ்விலேயே தொடங்குகிறது. அதற்காகவே இருபொருள் நுதலும் இன்பத்துப்பாலைக் கடைசியில் வைத்தார்.

அறத்துப்பாலில் இல்வாழ்வே தமிழ்மரபு. பார்ப்பான்தவிரத் துறவி ஆங்கில்லை. ஆயினும் துறவு தேவையானது நடைமுறையிலுள்ளது. எனவே ஏற்றுக்கொண்டார். அதன்படி சிற்றின்பத்திலே தொடங்கி, இல்லத்தில் அன்புடன் வேளாண்மை செய்து வளர்ந்து, துறவிலே அருளுடன் தவம் அனுசரித்து, முதிர்ந்து பேரின்பத்துக்குத் தயாராவதே மனித சீவியம். பிறப்பில் கிடைத்த இறையொளி மனித உடன் முயற்சியால் வளரவேண்டும்; பரம்பொருளைப் பற்றுதற்குப் பக்குவமாக வேண்டும். பொருட்பாலிற் சொல்லப்பட்டயாவும் இல்லறவாழ்வுக்கு உட்பட்டவை, உடந்தையானவையே. இவ்வாறு வேதத்தினுள்ளே அறமும் பொருளும், பொருளுள்ளே அரசியலும் சமூகமும் பொருளாதாரமும் எங்கணும் இன்பமும் பொதிந்து தந்திருக்கிறார்.

**உரைகள்.**

திருவள்ளுவர் இயற்றிதந்த இந்த ஒப்பற்ற நூல் மிகச்சில பாடபேதங்களுடன் நம்மையடைந்தது நமதுபாக்கியமே. எனினும், வள்ளுவர் புகழும் சான்றோரின் பரம்பரை அந்தணர்க்குரிய பண்பு இல்லாத பார்ப்பானர் சூட்சியால் விரைவிலே சிதைந்தது. அதனுல் வள்ளுவர் தந்த அரிய கருத்துகளும் மறைந்து திரிந்துபோயின. 1000 ஆண்டுகளின் பின்

வந்த உரைகாரர் தாமறிந்த அளவுகோல் கொண்டே திருக்குறளை விளக்க வேண்டியதாயிற்று. இவர்களிற் சிறந்தவர் பரிமேலழகர். இவர் காஞ்சிப் பிராமணர். 12ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். தமிழோடு சங்கத இலக்கிய இலக்கணமறிந்தவர். குறள்களின் சொற்கள் தவறாது பொருள் கூறி மேற்கோள்களும் காட்டி நிருபிப்பார். அவருடைய உரையே இன்றும் செல்வாக்குடையது. அதனாலேதான்;

''பாலெல்லாம் நல்லாவின் பாலாமோ பாரிலுள்ள
நூலெல்லாம் வள்ளுவர் செய்நூலாமோ --நூலிற்
பரித்த வுரையெல்லாம் பரிமேலழகன்
தெரித்தவுரையாமோ தெளி''

என்ற புகழுரை எழுந்தது. பரிதியாருரையோ பலகாலும் பொருத்தமற்றதாகவே தோன்றுகிறது.

இடைக்காலத்திலேற்பட்ட சமுதாயமாற்றங்கள், அரசியற்புரட்சிகள் கருத்துவேறுபாடுகளுக்கு வழிதிறந்தன. சாதிவேற்றுமை, சமயத் தடிப்பு, ஆசிரியர் செல்வாக்காலெழுந்த புராணங்கள் போன்றவை தமிழ் மரபாகிவிட்டன. இதனாற் பரிமேலழகர் வள்ளுவர் நுதலியதை அறியாது பொருந்தாத கருத்துகளையும் அளிப்பாராயினர். அவற்றையே மரபுவழியென்று யாவருமேற்றுக் கற்றனர். 18ம் நூற்றாண்டுமட்டில் இந்தச் செம்மறியாட்டுப் பண்பிலோர் மாற்றமேற்பட்டது. வேதம் போதிக்க விரும்பி வியாபாரிகளின் பின்னே வந்த ஐரோப்பிய குருமார் திருக்குறளைக் கண்டதும் தமக்கு அதோடு ஏதோ உறவு உண்டென்பதை உணர்ந்தனர். அதைத் தமது மொழிகளிலே மொழிபெயர்த்து அதன் புகழைப் பரப்பினர். எனினும் அந்த உறவின் அடிப்படைக் காரணம் முழுதும் மறைந்துவிட்டதால் அதைத் தேடி எடுத்துரைக்க முடியவில்லை. இந்த நூற்றாண்டிலேதான் அறிவியல் முறையிலே உரைகள் பலபக்கமிருந்தும் எழுந்தன. (உ-ம். கா. அப்பாத்துரை, மு. செய்வநாயகம், போன்றோர் வரைந்த நூல்கள்). திருக்குறளின் சொல்நயம், பொருள்வளம், ஆசிரியரின் சமயக்கொள்கைகள் வெளியாக வழிபிறந்தது. அதனால் நூலும் ஆசிரியரும் அவரை அளித்த தமிழ்நாடுமே புகழ்பெற்றது.

''வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான் புகழ் கொண்ட தமிழ்நாடு'' (சு. பாரதி).

திருவள்ளுவர் திருந்திய தமிழிலே யாப்பு நுட்பம் அணி அலங்காரம் நிறையத் தாய்மரபு தழுவி நூல் செய்தாராயினும் அதைத் தமிழருக்கென்று மட்டும் இயற்றவில்லை. தனிஆளோ, அரசோ, ஊரோ, நாடோ, குழுவோ, மொழியோ, இந்த நூலிலே பெயர் பெறவில்லை. இந்திரன் என்பதும் பொதுப்பெயரே. மனித ஒழுக்கம் மனுஇன மீட்பே அவருடைய குறிக்கோள். அதனாலே மனிதஒற்றுமை உண்டாகும் என அறிந்திருந்தார். எனவே தமிழ் ஒழுக்கம் கடந்து பொது ஒழுக்கம் போதிக்கிறார்.

**பொருள் வைப்பு.**

திருக்குறளின் பொருள் வைப்பு நான்கு பகுதிகள் கொண்டது. அவை வீடு, அறம், பொருள், இன்பமாம். வீடு அல்லது பாயிரம் கடவுளை அடைய வழிகாட்டுவதே இந்நூலின் நோக்கம் என நவிலும். அறம் இல்லிலும் துறவிலும் எவ்வாறு வாழ்வதென வழுத்தும். அதனாலடைவது ஊழ் அல்லது பெறுபேறு. அதுவே பாக்கியமடையத் தகுதி யென்க. பொருள் அறவாழ்வின் சமூக அலுவல்களை ஆராயும். அவை அரசு, அமைச்சு, அரண், கூழ், படை, நட்பு, குடி எனும் ஏழுதலைப்பின் கீழ் விளக்கப்படுகின்றன. இன்பம் சிற்றின்பம் பேரின்பமென இருவகைத்து; இயற்கைக்கவர்ச்சியாலேற்படுவது. மிருக கவர்ச்சி காமம், மனிதகவர்ச்சி காதல், உடலிலே உயிர் இயங்குவதுபோலக் காமத்தின் வழியாகவே காதல் உருவாகிறது. மனிதபற்று மூலமே இறைப்பற்று வளர்கிறது. ஆண் பெண் உறவு இறைவன் ஆன்மா உறவுக்கு உருவகமாகிறது. ஆண் பெண்ணை விரும்புவதாகப் பெண் உணரும்படி செய்தல் ஆணின் பங்கு. உணர்ந்ததும் பெண் ஆணை விரும்புவதாக அத்தாட்சிப்படுத்தல் பெண்ணின் பங்கு. அதனாலேதான் உண்மையான உறவு, ஒன்றிப்பு உண்டாகும். அதுவே பயன்தரும்வாழ்வு. ஆண் பெண் கடமை உரிமை வித்தியாசமானாலும் சமமானவை. ஒன்றுகூடினால் மற்றது குறையும். ஆனால், இறைவனுக்கும் ஆன்மாவுக்கும் ஒப்பனையில்லை. கொடுத்துவாங்கும் சமத்துவமில்லை. மனிதன் கடவுளுடைய சொந்தப் பொருள். இருப்பதும் இயங்குவதும் அவன் கருணையாலேதான். வாழ்வு முதற்கொடை, அதைப்பண்போடு பாவித்தால் அடையப்போகும் நெடுவாழ்வு மேலான கொடை; தன்னையேதரும் அருள். அதனால் உரிமை முழுவதும் கடவுள் பக்கம், கடமைமுழுவதும் மனித ஆன்மாவின் பக்கமே. இந்நிலையில் கிடைத்ததை எடுத்துச் சுகிப்பதே பாக்கியம். கடவுளின் பெருமை, கருணையைக் கண்டு களிப்பதே பேரின்பம். அதை நாமும் அனுபவிக்கலாம் ''கூடிமுயங்கப்பெறின்'; அருவானதை உருவில் விளக்கவே இதில் ஆண், பெண், இருவர் என முப்பிரிவு உண்டு.

திருவள்ளுவமாலை தரும் பழைய மரபான பொருளடக்கம் இதுவாகும்:

i. வீடு ஒன்று பாயிர நான்கு. *1--4.*

ii *1.* இல்லறம் இருபான். *5--24.*
*2.* பன்மூன்றே தூய துறவறம். *25--37.*
*3.* ஒன்று ஊழ் ஆக. *38.*

iii *1.* அரசியல் ஐயைந்து. *39--63.*
*2.* i அமைச்சு இயல் ஈரைந்து. *64--73.*
ii உருவல் அரண் இரண்டு. *74--75.*
iii ஒன்றெண் கூழ். *76.*
iv இருவியல் திண் படை. *77--78.*
v நட்புப் பதினேழ். *79--95.*
vi குடி பதின்மூன்று. *96--108.*

iv 1. ஆண்பால் ஏழு. 109--115.
2. ஆறிரண்டு பெண்பால். 116--127.
3. அடுத்தன்பு பூண்பால் இருபால் ஓராறு. 128--133.

**புராதன பண்பாடு.**

மனிதன் இப்பூமியிலே பல்லாயிரம் வருடங்கள் வாழ்ந்திருகிறுன் என்று பழம் பொருளாராய்ச்சி பிதற்றினுலும் புதைபொருளாராய்வு 5000 ஆண்டுகளுக்கு முந்திய ஒன்றையும் கண்டெடுக்கவில்லை. இந்த நூற்ருண்டிலே சிந்துநதிப்பிரதேசத்திலும் பஞ்சாப்பிலும் செய்த ஆய்வுகள் 4000 ஆண்டுகளுக்கே போகின்றன. (மோட்டிமர் உவீலர்). மொகெஞ்சடாரோ, கரப்பாவில் வாழ்ந்த மக்கள் இன்றைய தமிழரின் முன்னேர் என்பது கேராஸ் அடிகள் போன்றவரின் கருத்து. ஆரியரின் படையெடுப்புக்குமுன்னர் செழித்து வளர்ந்த சீர்திருத்தங்கள் மத்தியதரைக் கடல்முதல் இந்தியாமட்டாகப் பரந்திருந்ததற்குச் சான்றுகளுண்டு. மொகெஞ்சடாரோவில் அகப்பட்ட முத்திரைகளிலிருந்து அங்கு வாழ்ந்தோருடைய சமயவழிபாடு ஒழுக்கநெறிகள் பல தமிழர் மரபுக்கு ஒத்ததாக இருக்கிறதென்பர். இவர்களுக்கும் மத்தியகிழக்குக்குமிடையே வியாபார, பண்பாட்டுத்தொடர்பு வெகுகாலமாக இருந்துவந்தது. இவர்களுடைய வாழ்க்கை பபிலேனியர், சீரியர், கிறேத்தர் முதலிய புராதன நாகரீகங்களிற்போலவே காணப்படுகிறது.

சமுதாயங்கள், நாகரிகங்கள் தோன்றி, வளர்ந்து இழிந்து, அழியலாம். ஆனுல் மனிதனுடைய பழக்கவழக்கங்கள் அதிகம் மாறுவதில்லை. நாமறிந்த சரித்திரப்படி மனிதன் ''கண் இழந்தவன் வழியைத் தேடுவது'' போலவே தோன்றுகிறுன். இலக்கை அடையமுடியாது தடவித் தவிக்கிறுன். பொருளாதாரத்தில் முன்னேறும்போதெல்லாம் மதஆசாரத்திலே இழிந்துபோகிறுன். இடைக்கிடைமட்டுமே புத்திதெளிந்தவன் போற் காட்சியளிக்கிறுன். எகிப்து, பலஸ்தீனு. சீரியா, அசீரியா, பபிலோனியா, இந்தியா எங்கும் ஏறக்குறைய ஒரேசோக சரிதைதான். ஒரு கடவுட்கொள்கை அழியாவிடினும் அருகியேகாணப்படுகிறது. எப்லாவில் அண்மையில் அகழ்ந்துசெய்த ஆராய்ச்சியின்மூலம் விவிலியத்தில் உள்ளது போன்ற புராதன கொள்கைகளின் தகவல்கள் கிடைத்திருக்கின்றன. அதுவே நமக்குக்கிடைத்துள்ள ஆகமுந்திய சான்று என்பர். மனிதர் தங்கள் பண்புகளைக் கடவுளுட்புகுத்துவர். பின்னர் மனிதரையே கடவுளாக்குவர். அதன்பின் பூதங்கள், மிருகங்கள், மரங்கள், இயற்கைச் சக்திகள்தானும் வழிபாட்டுப்பொருட்களாகின்றன.

**இறையறிவு குறைவு.**

வள்ளுவர் வாழ்ந்த சமுதாயம் சீர்திருத்தமுற்றிருந்தாலும் அதில் எல்லாம் ஆக்கிக்காக்கும் ஒருபரம்பொருள் வழிபாடு செல்வாக்கடைய

வில்லை. பலதெய்வ வழிபாடே சிறப்புற்றிருந்தது. இருபொருட்கொள்கை சடத்தைச்சித்தோடு சமமாக்கியது. ஒருபொருட்கொள்கை எல்லாம்சித்து, சடமோ மாயம் என்றது. இன்மையிலிருந்து சிருட்டிப்பு என்றது சிந்தனைக்கெட்டாததாயிருந்தது. மனிதன் படைத்தவரைப் பிரிந்து மறந்துபோன உண்மைகளை நினைவூட்டவே, செய்தவற்றைத் திருத்தும் வழிகாட்டவே இறைவன் மனிதனாக வரவேண்டிய அவசியமிருந்தது. நமது புராணங்களிலே தோன்றும் மீட்பர்கள் தனிநபர்கள், தனிச்சமூகங்களுக்கு உதவும் மனிதராகவே காட்சியளிக்கின்றனர். அவர்கள் காட்டும் ஒழுக்க நெறிகளிலே குறைகள் நிறையவுள்ளன. எனினும், வள்ளுவர் ஏதோ வழியாக வாலறிவன் ஈந்துவித்துத்தந்த பொய்தீர் ஒழுக்கநெறியை அறிந்துவிட்டார். அதையே திருக்குறளில் நமக்கு அளித்தார்.

**விவிலியம்.**

வள்ளுவர் காட்டும் ஒழுக்கநெறி விவிலியநூலிலும் காணப்படுகிறது. இவ்விருநூல்களுக்குமிடையே சரித்திரத்தொடர்பு ஏதேனுமுண்டா என அறிஞர் ஆராய்கின்றனர். ஓரளவு சித்தியுமெய்திவிட்டனர். சுமேரிய சீர்திருத்தப் பிரதேசமான ஊருக்கும் இந்திய கேந்திரமான மொகெஞ்சதாரோவுக்குமிடையிலுள்ள வியாபார கலாச்சாரத் தொடர்புகளிருந்து இவர்கள் எல்லோரும் ஒருகால் ஒருசனராகவே வாழ்ந்தனர் என யூகிக்கின்றனர். இந்த ஊர் நகரிலிருந்து குடிகிளம்பி மேற்கேசென்ற அபிராமின் சந்ததியாரே இஸ்ரயேல் சனம். ஆபிரகாம் கி. மு. 2000 அளவில் வாழ்ந்த கம்முராபிமன்னன் காலத்தவர் என்பர். கி. மு. 1300 அளவில் இச்சனத்தை வழிநடத்திய மோசே என்பவர் சட்டதிட்டங்களைக் கொடுத்து இவர்களைப் பலஸ்தீனாவிலே குடியேற்றினார். இவர்களுடைய சரித்திரம், ஒழுங்குகள் வழிபாடுகள் கொண்ட தொகுப்புநூலே விவிலியத்தின் பெரும்பகுதி. இதின் முதற்பகுதியிலே உலகமும் மனிதனும் உண்டான கதை சிறப்பானமுறையிலே காப்பாற்றப்பட்டிருக்கிறது. மனிதரின் ஆதிபரம்பரையின் வரலாறு மிகச்சுருக்கமாக விரைகிறது. ஆபிரகாம் தொடங்கி அதிக விபரமுண்டு.

**கடவுள் மீட்பராக வருவார்.**

இவர் பலதேவர் வணக்கத்தைவிட்டு மூவராகத் தோன்றிய ஒரு தேவனை வழிபட்டார். அவருடைய கட்டளைக்கமைந்தார். அதனால் ஆசிபெற்றார். அந்த ஆதிமுதல்வனை ஏற்று அமைந்ததால் அவருடைய சந்ததி கணக்கின்றிப் பெருகுமென்றும் அவருடைய வித்திலே உலகமீட்பர் தோன்றுவார் என்றும் வாக்குக் கிடைத்தது. ''சகல சனரும் உன்னிலே ஆசிபெறுவர்'' (ஆதி. 12,3.) இஸ்ரயேல்சனம் கடவுளுக்குப் பிரமாணிக்கமில்லாது பல தேவர் வழிபாட்டில்லீடுபட்டதால் இழிந்து கைதிகளாகவும் அடிமைகளாகவும் அந்நியநாட்டில் உத்தரித்தனர். அவ்வேளை இறைவாக்கினர் தோன்றி மீட்பரின் வருகையை அறிவித்து அவர்களைத்

தேற்றினர். 13 குலங்களில் 3 மட்டுமே தாய்நாடு திரும்பி யூதசனமாயினர். மற்ற 10ம் சிதறுண்டு மறுசனரோடு கலந்துவிட்டனர். யூதர் விவிலியநூலின் ஒழுங்குப் படியே வாழமுயன்றனர். ரோமைப்பேரரசின் பிரசைகளானபோது மீட்பர் வருங்காலம் அண்மியதென்றனர். இந்த எதிர்பார்ப்பு இந்தியாவிலும் பிரதிபலித்தது. அது தென்னிந்தியாவுடன் நடந்த வியாபாரத்தொடர்பாலோ அல்லது கலாச்சார உறவாலோமட்டும் ஏற்பட்டதெனமுடியாது. அகுஸ்துஸ் சேசாரின் ஆட்சிக்காலத்தில் இக்கருத்து எங்கும் பரபரப்பை உண்டாக்கியது.

**காலக் கணிப்பு**

இந்தியாவிலே ரிஷிகளின் காலக்கணிப்பு மீட்பரின் வருகையைச் சுட்டிக் காட்டியது. ஒருயுகம் 1000 வருடங்களென்பதே முதற் கணிப்பு. பின்னர் 4 யுகங்கள் தோன்றின. மனுஸ்மிருதி, மகாபாரதம் (வனபருவம் 149) போன்றவை அவற்றைப் 10,000த்தில் அடக்குவன. திறேத்த(நாலு) யுகம் 4,000 வருடங்கள் கொண்டது. அதில் நீதி சமாதானம் செழித்து வளரும் விட்டுனுவெள்ளையாய் வருவார். திரித்த (மூன்று) யுகத்துக்கு 3,000ஆண்டுகள். அதிலே புண்ணியம் குறையும். எனினும் பலிகள் நடைபெறும். நாராயணன் சிவப்பாகத்தோன்றுவார். துவிப்பாற (இரண்டின் பின்) யுகம் 2,000ஆண்டுகள். அறவாழ்வு அரைவாசியாகும். வேதம் நான்கு பிரிவுகளாகும். ஆசையோடு தவமும் அதிகரிக்கும். விட்டுணு மஞ்சள்நிறமெடுப்பார். கலி (ஒன்று) யுகம் 1,000 வருடங்கள். அதில் அறம் காலளவாகும். வேதம் பலி, புண்ணியம் குறைந்து துன்பங்கள் அதிகரிக்கும். கேசவன் கரிநிறமாவார்.

கலியுகம் கி. மு. 1177--6ல் தொடங்கியது (கோபால ஐயர்). அதுமுடிந்து கி. மு. 177ல் கிரேத்தயுக பொற்காலம் தொடங்கவேண்டியது. ஆனால் வரவில்லை. மீட்பரின் வருகைபற்றி ரிஷிகள் சொன்ன வாக்கைக் காப்பாற்றச் சந்தி காலமென்று 200வருடம் கலியுகத்துக்குக் கூட்டினர். கி. பி. 24ல் அதுவும் முடிந்தது. வைதிக ஆதிக்கம் இன்னும் ஏறக்காணோம். புத்தர், சமணர் செல்வாக்கே வளர்ந்தது. இது கண்ட பிராமணர் இன்னும் காலந்தாழ்த்த வேண்டியதாயிற்று. 1200வருடம் மனிதருடைய கணக்கல்லத் தேவர் கணக்குப்படி என்றனர். வடதுருவத்திலேதான் மேருமலை, அங்குதான் கைலாயம், தேவருக்கு 6மாதம் பகல் 6மாதம் இரவு. அவர்களுடைய ஒருநாள் மனிதருக்கு 360. எனவே, $1200 \times 360 = 432,000$ வருடங்கள்தான் கலியுகம் எனமுடிவுகட்டி விட்டனர். அதிலேதான் நாம் இன்றும் உருண்டுகொண்டிருகிறோம். கி. பி. 5ம் நூற்றண்டிலே பிராமணவேதம் செல்வாக்குப்பெற்று வளரத்தொடங்கியது. எனினும் கலியுகக் கணிப்பை அவர்கள் மாற்றத்துணியவில்லை.

**மீட்பர்.**

இவர்கள் சுட்டிக்காட்டிய கெடுவில் கி. பி. 27ல் ஒரு கலிலேய தொழிலாளி கடவுளின் அரசுபற்றிப் போதிக்கத்தொடங்கினுர். அவர் தான் எதிர்பார்க்கப்பட்டவரோ என எண்ணி பலர் அவரைப்பின்சென் றனர். இந்தியாவிலும் கல்கிவிஷ்ணுகாஸ் வந்து மீட்பளிப்பார் என்றே பிராமணரும் காத்திருந்தனர். ஆனுல் அவர் தோன்றவில்லே. யேசுக்கிறித்து ரோமானரைத் துரத்திவிட்டு, அலச்சாந்தர் செய்தது போல, யூதசன ரைத் திக்குவிசயத்துக்கு அழைத்துச் செல்வார் என்று எண்ணினர். ஆனுல் அவரோ கடவுளேயும் ஒழுக்கத்தையும் பற்றியே கவலேயாயிருந் தார். ஆதலால் யூதகுருக்களும் மூப்பரும் அவரைப்பிடித்துக்கட்டி, அடித்து வதைத்து, ரோமரிடம் கொடுத்துக் குறுக்குமரத்தில் அறைந்து கொன்றனர். சீடர்களும் ஏமாற்றமடைந்து ஓடிஒளிந்தனர்.

ஆனுல், அவர் முன் சென்னபடி மூன்ரும்நாள் உயித்தெழுந்து சீடருக்குத்தோன்றினுர் இவர்கள் பல திக்குகளிலும் போய் இச்செய் தியை அறிவித்தனர். பயந்து ஓடியவர்கள் அதிகாரிகளேத்தானும்துணிந்து எதிர்த்தனர். அத்தாட்சியாக அதிசயங்களேச் செய்தனர். தங்கள் உயி ரையே சாட்சியாகத் தியாகஞ்செய்தனர். தாங்கள் மீட்பரின் உயிர்ப் புக்குச்சான்று, அதனுற் சான்ருேர் என்றுகூறினர். பலர் அவர்களுடைய போதனேயை ஏற்றனர். யேசுக்கிறித்து ஒரு புது வேதத்தை உண்டாக்கவில்லே. ஆதிவேதத்தையேதான் நிறைவுசெய்வதாகச் சொன்னுர். பாவத்தின் பயனே சாவும் நோவும். மனம்மாறி நோவையும் சாவையும் ஏற்பதனுல் மன்னிப்பைப்பெறலாம் என்று சொல்லாலும் செயலாலும் அறிவித்தார். அதையே சீடரும் நாற்றிசையும் சென்று அறிவித்தனர். சீடரிலொருவ ரான தோமையார் கந்தாரம், கேரளம், தொண்டைமண்டலம் மட்டாக வந்து மயிலாப்பூரிலே சான்றுகூறிக் கொலேயுண்டார். (இரா. அருளப்பா-- இந்தியாவின் அப்போஸ்தலர் புனித தோமையார்).

**விவிலிய நூலின் விபரம்,**

விவிலியத்தில் இருபகுதிகளுண்டு. மீட்பரின் போதனே பரப்பிவர்கள் தங்கள் கொள்கையே பொது வேதமென வற்புறுத்தினர். எல்லாமனிதரும் அதை ஏற்கவேண்டுமென வாதாடினர். மீட்பர் எதையும் எழுதித்தர வில்லே. அவருடைய சீடரிற் சிலர் பொதுமக்களின் பாவனேக்காக அவ ருடைய வாழ்க்கைக் குறிப்புகளே வரைந்தனர். ஆதித்திருச்சபையின் பணிபற்றிய நூல்களுமெழுந்தன. சீடர்கள் எழுதிய கடிதங்களும் சேர்க் கப்பட்டன. 2ம் 3ம் நூற்ருண்டிலே பொதுவேத அதிகாரிகள் இவற்றிற் சிலதைத்தெரிந்து புதிய ஏற்பாடு என அழைத்தனர். இதிலே நற்செய்திகள் 4, பணி 1, நிருபங்கள் 21, காட்சி 1 ஆக 27 பகுதிகள் உண்டு.

பொதுவேதத்தின் முதற்சான்ருேர் யூதராவர். அவர்கள் மீட்பரே எதிர்பார்த்த பூசிதர் என்று தங்களுடைய நூற் களஞ்சியத்திலிருந்தே நிரூபித்தனர். இறைவாக்கினர் அறிவித்தவர், யூதசனமும் ஏன்

எல்லாச்சனமும் எதிர்பார்த்தவர் யேசுக்கிறித்துவே என வாதாடினர். பொதுவேதம் கிரேக்க, இலத்தீன் உலகிலே அதிகம் பரவியதால் அவர்கள் எபிரேய விவிலியத்தையல்ல அதின் கிரேக்கமொழிபெயர்ப்பையே அதிகம் பாவித்தனர். அதிலே முதல் நூல்கள் 5, சரித்திர நூல்கள் 16, போதனை நூல்கள் 7, இறைவாக்குகள் 18, ஆகப் பழைய ஏற்பாட்டிலே 46நூல்கள் உண்டு. இந்த யூதரின் வேதாகமம் பொதுவேதத்தின் ஆதாரநூலாகும்.

**இந்தியாவில் பொதுவேதம்.**

முதல் நற்செய்தியின் பிரதிபலிப்பை இந்தியாவிலே இன்று காண வில்லை. கேரளத்திலே தோமையாரின் சீடர் தொடர்பாக வாழ்ந்தனர் என்ற கொள்கையுண்டு. தொண்டைநாட்டிலும் ஈழத்திலும் அவர்கள் வாழ்ந்ததற்குப் புதைபொருட் சான்றுகளுண்டு. 6ம் நூற்றுண்டின் பின் தென்னிந்தியாவிலேற்பட்ட பிராமணரின் ஆதிக்கத்தோடும் 7ம் நூற்றுண்டின்பின் மத்திய கிழக்கிலுண்டான மகமதிய எழுச்சியோடும் அவர்கள் இடந்தெரியாமல் மறைந்துபோயினர். பொதுவேதம் நமக்கு மீண்டும்கிடைத்தது 16ம் நூற்றுண்டிலேதான், அதுவும் கலப்படப் பொருளாகவே வந்தது. எனினும் திருக்குறள் எனும் நூல் கலப்படமில்லாத பொதுவேதம் உரைப்பது போலத்தெரிகிறது. அதற்கு அந்நியர் போர்த்திய ஆடைகளைக் களைந்துவிட்டால் அது தனது ஆதிஎழிலுடன் ஐந்தவித்த நீத்தார் தந்த பொய்தீர் ஒழுக்கநெறிகூறக் காணலாம். பொதுவேதம் சொல்வதையே தமிழ்வேதமும் கூறுகிறது. அது நாமறிந்த தமிழரின் வேதமல்ல; மனிதர் எல்லாருக்கும் பொதுவான ஒருவேதம்.

இந்த ஒற்றுமையை அணுகி ஆராய்வதே இந்நூலின் நோக்கம். திருக்குறளை நம்மவர் கற்றுப்பயன் பெறுமாறு பொருளும் கருத்தும் அளிக்கிறேன். திருவள்ளுவரின் குறிக்கோள் அறவழிநடந்து இறைவீடு அடைவது. அதுவே பொதுவேத படிப்பினையும். அது அந்நிய சரக்கல்ல, மனிதனாய்ப்பிறந்த ஒவ்வொருவருடையவும் உரிமைச்சொத்து. அறியாமையால் அதைப்புறக்கணிப்பது பரிதாபம். வள்ளுவர் வழிகாட்ட அவர் பின்னே நடந்து அதை அறிந்துகொள்ளவே விவிலியத்திலிருந்து பொருத்தமான சில பகுதிகளை தெரிந்து சேர்த்திருக்கிறேன்.

நூலின் கிரயம் பெரிதாயின் நம்மவர் அதைப்பெற்றுப் படிக்க முடியாது. அடக்கமான விலைக்கு அதை அளிக்குமாறு ஒருசிறு பகுதியையே இப்போது அச்சிடுகிறோம். நூல்தொடர்வது தமிழ் பேசும் மக்கள் நமக்களிக்கும் ஆதரவைப் பொறுத்தது. இந்நூலிலே பிழைகள் பலவும் குறைகள் சிலவும் கட்டாயம் உண்டு. அவற்றை அவதானிக்கும் அன்பர் தயவுசெய்து எனக்கு அறிவித்தால் இனித்தொடரும் பகுதிகளிலும் அடுத்த பதிப்பிலும் திருத்தம்செய்ய உதவியாகும். நன்றி!

மக்கோனு
25. 3. 79.

ம. பாவிலுப்பிள்ளை, மா. ம. இ.
BA., LPh., B. D.

## அர்ப்பணம்

முன் அறிந்த தெய்வமான
என் அருமைப் பெற்றோர்க்கு
அன்பின் அருச்சனையாக
இந்நூலை அளிக்கின்றேன்.

★ ★ ★ ★ ★ ★

## I வீடு அல்லது பாயிரம்

* * * * * *

ஆளுக்கு முகம் போன்று நூலுக்குப் பாயிரம்.

''ஆயிரமுகத்தான் அகன்றதாயினும்
பாயிரமில்லது பனுவலன்றே'' -- பவணந்தி.

''பருப்பொருட்டாகிய பாயிரங்கேட்டார்க்கு
நுண்பொருட்டாகிய நூல் விளங்கும்'' -- நச்சினுர்க்கினியர்.

''அப்பாயிரந்தான் தலையமைந்த யானைக்கு வினையமைந்த பாகன் போலவும் அளப்பரிய ஆகாயத்துக்கு விளக்கமாகிய திங்களும் ஞாயிறும் போலவும் நூற்கு இன்றியமையாத சிறப்பிற்றுயிருத்தலின் அது கேளாக்காற் குன்று முட்டிய குருஇ போலவும் குறிச்சிபுக்க மான் போலவும் மாணுக்கன் இடர்ப்படுமென்க''. இது பரிமேலழகரின் விரிவுரை. இதில் ''நுதலியபொருளும் கேட்போர்பயனும்'' கூறப்படுவதால் இது சிறப்புப் பாயிரமென்க.

சிறப்புப்பாயிரம் வேருெருவர் செய்வதே மரபாயினும் இங்கு வள்ளுவரே அதைச்செய்திருக்கிறுர். காரணம்? இங்கு நுதலியபொருள் மரபுப்படியானதல்ல. மறு நூல்களிலெல்லாம் வழிபடுதெய்வத்தை வணங்கி உதவி கேட்பதே கடவுள் வணக்கமாகும். வள்ளுவர் அவ்வாறன்றி இறைவனின் பண்பையும் தொழிலையும் எடுத்துக்காட்டுகிறுர். நூற்பயனும் தமிழகத்தெழுந்த மறுநூல்களெதிலும் மேலான இலக்கைக் கொண்டுள்ளது. இவற்றை விளங்கி விரும்பி மெச்சக்கூடியவர் கிடைப்பதரிதாகவும் கூடும். ''தான் தற்புகழ்தல் தகுதியன்றே'' என்றகுற்றம் இங்கு இல்லை. ஏனெனில் ''தன்னுடையாற்றல் உணராரிடையினும்... தன்னைப்புகழ்தலும் தகும் புலவோர்க்கே'' (பவணந்தி).

கடவுள் வாழ்த்துக்கும் செயப்படு பொருளுக்கும் நடுவிலே வேறிரு விடயங்களை வள்ளுவர் புகுத்துகிறுர். வேறெந்தப் பழைய தமிழ்நூல்களிலும் இவ்வித வைப்புஇல்லை. இது மாணவர்க்குப் புரியாத புதிராக இருந்துவருகிறது. இதற்காதாரம் தொல்காப்பியத்திலிருப்பது உண்மையே.

''கொடிநிலை கந்தழி வள்ளி என்ற
வடுநீங்கு சிறப்பின் முதலனமூன்றும்
கடவுள் வாழ்த்தொடு கண்ணியவருமே'' -- 3. 2. 27.

ஆனுல் இதன் கருத்தென்ன? அதிசயம், நமது தமிழ் அகராதிகளில் இச்சொற்களுக்குப் பொருத்தமான பொருளையே காணேம். கொடிநிலை கம்பத்திலே பறக்கும் கொடிபோல ஆகாயத்திலே உலாவும் மேகம். **கந்தழி** கந்து+அழி=பற்றழிவு=துறவு. **வள்ளி**=வண்மை=அறம். இவை மூன்றும் ''வடுநீங்குசிறப்பின் முதலன''; ''கண்ணிய'', கண்போன்று

அருமையானவை என்கிறார் தொல்காப்பியர். இவ்வாறு இவற்றைப் புகழக்காரணமென்ன? இதிலே மனுப்புத்திக்கெட்டாத மர்மப்பொருள் அடங்கியிருப்பதை அவரும் அறிந்தாரோ! அறிஞர் ஆராய்ந்து அறிவிக் கட்டும்.

''வீடொன்று பாயிரம் நான்கு'' என்பது திருவள்ளுவமாலை. பாயி ரத்திலே வீட்டைப் பொருத்திச்சொல்லுகிறார். வீடென்பது மனிதனு டைய உலக வாழ்வின் முடிவிலே கிடைப்பது. அதை அறிவதவசியம். குறியறியாது அம்பு எய்ய முடியாதல்லவா? ஆயினும் அதுபற்றிய விரி வானவிளக்கம் இவ்வாழ்வில் அவசியமில்லை. ''கடவுள் தன்னை நேசிப் போர்க்குத் தயார் செய்யும் மகத்தான காரியங்களைக் கண்காணவுமில்லை காதுகேட்கவுமில்லை மனம் சிந்திக்கவுமில்லை''. (புனித சின்னப்பர்). அவை மறுவாழ்வில் அனுபவிக்க வேண்டியவை. அதை அடைய இவ் வாழ்வில் ஒழுக்கம் அல்லது அறம் அனுசரிக்கவேண்டிது. ஒழுக்கமே பாயிரத்தில், ஏன் முழுநூலிலும் ஓடும்இழை. கடவுள் ஒழுக்கநெறி தந்தார் (6). வான் ஒழுக்கத்துக்கு அவசியம் (20) நீத்தார் ஒழுக்கம் காட்டினார்(21). அறத்தால் வருவது இன்பம் (39). இறைவன் தந்த அறிவுப்படியே வாழ்வதுதான் அறம். அறிவின் ஒளியே மனச்சாட்சி. அந்த ஒளியைப் பார்க்கவேணும். அதன் குரலைக்கேட்கவேணும். இங்கு குருடர் செவிடராய்த் துயில்வோரைத் தட்டியெழுப்பி வீட்டுக்கழைத் துச் செல்வதே திருவள்ளுவரின் நோக்கம்.

## அதிகாரம் 1. கடவுள் வாழ்த்து

* * * * * *

வீட்டை அறிமுகம் செய்வதற்கு முதலில் அது எங்கு, எப்படி என் றியம்பவேண்டும். அங்குநாம் செய்வதேது, போகும்வழியேது என அறி விக்கவேண்டும். கடவுள்வாழ்த்து அதைச் சுருக்கமாகச் சொல்கிறது. உல கைப் படைத்தவர் கடவுள். அதற்கு அவரே முதலில் இருக்கவேணும். யாவையும் காப்பவரும் அவரே. உலகின் சிகரமான மனிதனின் கதி அவரைச் சிந்தனை, சொல், செயலால் வாழ்துவதே. அதுவே நித்திய வாழ்வு.

படைத்த கடவுளை (1) அறியவேண்டும் (2), அவரை இதயத்திலேற் கவேணும் (3); அவரைப்பற்றவேணும் (4), அவரைப்புகழவேணும் (5); அவருடைய விருப்பின்படி ஒழுகவேணும் (6). அதனாற் கவலை தவிர்த்து (7) கதிசேரலாம் (8). தவறினால் வாழ்வு வீணாகும் (9). கடவுளே ஏக கதி (10). செய்யுட்களில் சான்றோர் சீவியத்தின் கருப்பொருளைத் தருகி றார்.

கடவுள் ஒருவர்என வற்புறுத்தவே அவருடைய பெயர்கள் ஒருமையிலும் உயிர்களோ பல என்பதாற் பன்மையிலும் வருகின்றன. கடவுள் ஆள்பவர் ஆதலாற்தான், அடியென்றும் படைப்புகள் பணியவேண்டியவராதலால் தலைவணங்கல், தொழல் என்றும் உரைத்தார். கடவுளை அடைவதே வாழ்க்கையின் குறிக்கோள், அதற்கு எப்போதும் அவனைச் சார்ந்து நிற்றலவசியம். கடவுளைப் பிரிவது நிர்ப்பாக்கியம், அழிவு. நீந்த மறுப்பவர் மாண்டு அழிவது நிசம் என எச்சரித்து முடிக்கிறார்.

**1. அகர முதல வெழுத்தெல்லா மாதி**
**பகவன் முதற்றே யுலகு.**

உலகு ஆதிபகவன் முதற்று -- உலகம் கடவுளைக் காரணராகக் கொண்டது. எழுத்தெல்லாம் அகரமுதல -- எழுத்துக்கள் எல்லாம் அகரத்தையே முதலாகக் கொண்டவை என்பது அதற்கோர் எடுத்துக்காட்டு.

உலகு -- உயிர்களையே சிறப்பாகக் குறிக்கும்.
ஏ -- தேற்றேகாரம். எழுத்து -- ஒலிக்கு ஆகுபெயர்.

மனிதன் அறிவினாலேதான் மிருகத்திலும் மேலாய் விளங்குகிறான். அறிவு கல்வியால்வருவது. கல்விக்குச் சொல் அவசியம். சொல் ஒலிகளால் உண்டாவது. ஒலிகளை எழுத்தாற் பதிவுசெய்கிறோம். அகரம் வாய் திறந்தவுடன் எழும்ஒலி. அ உயிரின் முதல், க மெய்யின் முதல், அக என்பதே பின்னர் அகரம், அக்கரம் என எழுத்துக்கு வழங்கலானது. அகரத்தைத் தொடர்ந்து நா, மிடறு, அண்ணம், பல், உதடுகளின் உதவியோடு மற்ற ஒலிகள் எழுகின்றன. தமிழில் மட்டுமல்ல எல்லா மொழிகளிலும் இதுவே இயற்கை. எனினும் காலம், இடம், சுவாத்தியம் போன்ற சூழலாலேற்படும் விகற்பங்களுண்டு. வடதுருவத்து வாழ்ந்த மக்கள் முன்வாயிலுமதிகம் மிடற்றையே பாவித்தனர். அதின்பலன் சங்கதம், ஜேர்மன் மொழிகளில் வெளிப்படை. உட்டண வலயத்தில் வாழ்ந்தமக்கள் நாக்கையும் உதட்டையும் அதிகம் அசைத்துப்பேசினர். தமிழில் கசடதபவுக்கு ஒருவர்க்கம் மாத்திரமேயுண்டு. சங்கதத்திலும் அதின் வழிமொழிகளிலும் 4 வர்க்கங்களுண்டு. தொண்டையாலுண்டாகும் கனத்த ஒலிகள் தமிழுக்கு இயற்கையல்ல. ஒலிபோலவே சொற்பொருளும் திரிபடைந்தது. எனினும், அடிப்படைச்சொற்கள் பலமொழிகளிலும் ஒரே பொருளைக்குறிப்பது ஆச்சரியமே. மனிதகுல ஒற்றுமையை அவை காட்டுவதாக மொழி ஒப்பியல் வல்லுநர் கருதுகின்றனர். எல், இல் எனும் ஒளியின் பெயர்கள் அடைந்த மாற்றங்களை ஆராய்வது ஆனந்தம் அளிக்கும்.

முதல் என்பது இருப்பிலோ இடத்திலோ காலத்திலோ ஆகலாம். அகரம் ஒலிகளுக்குத் தொடக்கம், ஆதாரமானாலும் காரணம் என முடியாது. எவற்றிலும் பகுத்தறிவு தேடுவது காரணத்தையே. அசைவன,

மாறுவன யாவும் எங்காவது தொடங்க வேணும். காலத்திலும் இடத்திலும் மட்டுமல்ல அவற்றின் இருப்புக்கும் அது அவசியம். ஆற்றுக்கு ஊற்று, கோழிக்கு முட்டை என்பன இடைக்காரணங்களே. அவற்றைத் தாண்டிப் பகுத்தறிவு முதற்காரணத்தை வேண்டுகிறது.

ஆன்மாக்களெல்லாம் இறைவனின் அம்சம், அநாதியானவை என்ற கொள்கை நம்மவரிடையே ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஒரு பரம்பொருள் தன்னையே காட்டுவதும் மறைப்பதும் போன்ற மிக்கிமவுஸ் திருவிளையாடலில் ஈடுபடுவதாகவே கற்பனைசெய்தனர். துவித்திகரும் அத்வைத்தியரும் சிருட்டிப்பின் அவசியத்தை உணரவில்லை. முதற்காரணத்தைத் தேடாது இடைக்காரணங்களோடு நின்றுவிட்டனர். சிருட்டிகர் என்றால் தன்னைத் தவிர உள்ள யாவையும் உண்டாக்கியவர் என்பதே. ஒருகால் அவர் தவிர வேறொன்றுமிருக்கவில்லை. மற்றவை இன்மையினின்று அவன் சக்தியாலே உண்டானவை. காலமும் இடமும் சடப்படைப்போடுதான் தொடங்கின. படைப்புகள் அவனல்ல, அவனுடையவை. அவனுக்குப் புறம்பானவை அல்ல ஆனால் வேறானவை. ஒவ்வொன்றுக்கும் ஒரு தனித்தன்மையைக் கொடுத்து அவனே காப்பாற்றி வருகிறான்.

படைப்பின் சிகரமான மனிதன் அற்ப அறிவு என்பதை நாம் மறக்கப்படாது. காலம், இடம் கடந்த ஒன்றை நாம் கருதலாமேயொழியக் கிரகிக்கமுடியாது. சடப்பொருட்களின் உதாரணங்களைக் கொண்டே எங்கள் அறிவு வளர்கிறது. ஆனால் நாம் ஒப்பிடும் பொருட்கள் குறை நிறைந்தவை. சடப்பொருள் சித்து ஆனதைச்சுட்டும்போது ஒரு சிறு பகுதியையே காட்டும். அதனாற்தான் வள்ளுவர் இச்செய்யுளிலே உவமையுருபைப் பாவிக்கவில்லை. ஒருசிறு உதாரணத்தைமட்டுமே தருகிறார். காரணர் எனும் கருத்தைவிளக்க அநேக உவமைகளின் உதவிவேண்டும், கற்பனையும் சிந்தனையும் முயலவேண்டுமன்றோ!

நியாய புத்தியுள்ள மனிதன் தன்னையும் தன்னைச்சூழவுள்ள இயற்கையையும் அவதானிக்கும்போது உற்பத்தியையும் அழிவையும் காண்கிறான். ஒன்றின்பின் மற்றொன்று மட்டுமல்ல ஒன்றிலிருந்து மற்றொன்று தொடர்வதையும் அறிகிறான். மாறும் பொருட்களின் காரணத்தை ஆராய்ந்துகொண்டுபோனால் ஒரு முதற் காரணத்திலே வந்துசேரவேண்டும். நீரோ முகிலோ, முட்டையோ கோழியோ முதல் வந்ததென்பதல்ல வினா. இதிலொன்று கட்டாயமிருக்கவேண்டும். அது எங்கிருந்து வந்ததென்பதே கேள்வி. இயற்கை, தற்செயல் என்ற பதங்களும் ஆதிகாரணத்தைக் காட்டினால் மட்டுமே புத்திக்குப்புரியும். இயற்கையாயுண்டானது, சும்மா வளர்ந்தது என முடிக்கப்பார்ப்பது வீண் குதர்க்கம். ஏனெனில், இந்த இயற்கைக்கோ பரிணாமத்துக்கோதான் மனிதபுத்தி போதிய காரணத்தைத் தேடுகிறது. இயற்கையிலும் மேலான, அதை ஆக்கிக்காக்கும்

எசமானைத்தான் நாம் கடவுள் என்கிறோம். அவர் தாமாயிருக்கவேணும். அந்த அசைவில்லாத, அழிவில்லாத பரம்பொருள் உண்டென்பதைப் பகுத்தறிவைப்பாவிக்கும் எவரும் ஏற்கவேண்டும். இயற்கையின் அதிசயங்களைக் கிளறிக்காணும் இன்றைய விஞ்ஞானம் அவனுடைய அறிவையும் ஆற்றலையும் கண்டு பிரமிக்கிறது. மேலும், அவனில்லையென்றால் நானுமில்லை யென்பதே முடிவு. நானும் கனவு, உலகும் கனவு என்ற பைத்தியத்தை ஏற்கவேண்டிவருமே!

காலத்தையும் பரப்பையும் கடந்தவராய்ப் படைப்புண்டயாவையும் உள்ளிருந்து இயக்கும் இந்த இயற்கையின் எசமானுக்குக் கடவுள் என்ற பெயர் மிகப்பொருத்தமானதாகத் தோன்றுகிறது. எல்லாம் கடந்தவர், எல்லாத்துக்கும் உள்ளானவர். இவ்வளவு பொருள்வளம் நிறைந்த சொல் வேறெந்த மொழியிலும் காண்பதற்கில்லை. அவரைச் சருவேசுரன் என அழைப்பதும் தகும். சருவ+ஈ+சுரன் -- எல்லாந்தரும்மேலோன் அவனல்லவா?

இன்னும் வேறு பல பொருத்தமான பெயர்களிருப்பினும் வள்ளுவர் ஆதிபகவன் என அவரை அழைக்கிறார். இப்பெயரில் ஒட்டிக்கட்டப்பட்ட வள்ளுவரின் பெற்றோர் பற்றிய கற்பனைக்கதையைச் சுத்த அபத்தமென்க. வள்ளுவர் காலத்திலே தமிழிலும் சங்கதத்திலும் முழுமுதற் கடவுளைக்குறிக்கும் பெயர் ஒன்று இருக்கவில்லை. பலதெய்வங்களை வணங்கிய நம் முன்னோர் தமது குலதெய்வத்துக்கு முதலிடம்கொடுத்து மகிழ்ந்தனர். ஆனால் அவரில் எவரும் உண்மையான கடவுளின் இலட்சணமுடையவராயிருக்கவில்லை. எனவேதான் ஆக்குவோன், காப்போன் என்பதை வற்புறுத்த ஆதியன், பகவன் (அப்பன், அம்மை) என இரண்டையும் சேர்த்துரைத்தனர். அழிப்பது கடவுளின் தொழிலல்ல. அது மாற்றத்தாலேற்படுவது. இயற்கையில் ஏதும் அழிவதில்லை என்பது விஞ்ஞானமுடிவு. படைத்தவன் சூக்காவிட்டாற் சடப்பொருள் இயற்கையாயழியும். நமது திரி மூர்த்திகள் சத்துவ, இராசச, தமோ குணங்களுடையவராக விபரிக்கப் படுவதால் அவர்களிலெவருக்கும் உலக காரணராகும் உரிமை பொருந்தாது (பரிமேலழகர்). அவர்களைக் கடந்த ஒருவரைக் காணவேணும்.

அப்படியான ஒருவர் இருக்கிறார் என்பதே திருவள்ளுவரின் கொள்கை. அவர் வாழ்பவர். அவரிலே நாமும் வாழ்கிறோம். அவரை வாழ்க என்று வாழ்த்துவதால் நாமும் வாழலாம். வாயால் மட்டுமல்ல வாழ்க்கையாலும் வாழ்த்துவது எப்படி என்று காட்டவே ஒழுக்கநூல் அளிக்கிறேன் என்கிறார்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

2. கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்.

வாலறிவன் நற்தாள் தொழார் எனின்--தெளிந்த அறிவுடைய கடவுளின் நன்மையான அடிகளை வணங்காவிடின். கற்றதனால் ஆயபயன் என்--மனிதர் பலநூல்களைப் படித்தும் பயன் என்ன.

கொல்--ஐயக்குறிப்பு, பயனிலை என்பதால்,
வாலறிவு--முக்கால உணர்வு.
தொழல்--தொடல்--உறவாடல்.

கல்வி கேள்வியாலுண்டாவது. எனினும், கேள்வியிலும் அதிகம் காட்சியே அறிவுக்குரியதாகையால் உருவகத்தை மாற்றித் தாள் என்றார். தாள் தொழல்--பாதம் பணிந்து வணங்கல். இறைவனை அறிவதே அறிவின் பயன். அறிவு கல்வியால் வருவது. எனவே, உண்மையான கடவுளை அறிவதே கல்வியின் நோக்கம். சருவஞானமான கடவுளே எல்லாத்துக்கும் காரணமும் கதியும் என்பதை அது காட்டவேணும். படைப்புகளின் மூலம் படைத்தவரின் பண்பை அறிந்து அவரைவிரும்பி, வாழ்த்தி அவரை அடைவதே மனிதவாழ்வின் இலட்சியமாகும். படித்தும் அதனாற் பயன்பெறாதார் கயவரே (1076).

அறிவு இயற்கையாக வழிபாட்டுக்கு இட்டுச்செல்ல வேண்டும். சித்தான கடவுளையும் சடவுருவங்களின் மூலம் ஞாபகப்படுத்தி வணங்குவது மனிதரின் மரபு. பாதந்தொட்டு பணிவு காண்பிப்பதையே தொழுகை என்பர். இது ஆன்ம உறவுக்கும் பணிவுக்கும் அடையாளமாகும். ஆயினும் வெளியடையாளங்களாற் தடங்கலடையாது புலனறிவுக்கு அப்பாற்பட்ட பரம்பொருளை அறிவினாற் சிந்தித்து வந்திக்க முயல வேண்டும்.

''முகத்திற்கண்கொண்டு பார்க்கின்ற மூடர்காள்
அகத்திற்கண் கொண்டு பார்ப்பதே ஆனந்தம்''--திருமூலர்.

புலனொளியும் புத்தியொளியும் நம்மைக் கடவுளிடம் அழைத்துச் செல்வன. கடவுளைக் காண்பது அவனுடைய ஒளியாலாகும். அக்கொடையையே விசுவாசமென்கிறோம். அதனால், ''அவனருளாலே அவன் தாள் வணங்கி'' என்பர் மாணிக்கவாசகர்.

3. மலர்மிசை யேகினான் மாணடிசேர்ந்தார்
நிலமிசை நீடு வாழ்வார்.

மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார் — இதயக்கமலத்து வாழும் இறைவனின் மாட்சிமையான அடிகளைஅடைந்தோர். நிலமிசை நீடுவாழ்வார்— உலகிலே நெடுங்காலம் வாழ்வர்.

அடிசேர்தல் — அடைக்கலம் பெறல். நிலம் — இகமும் பரமும். இங்கு சிந்தையால், அங்கு பொருளால் முடிவிலா வாழ்வு அடையலாம்.

மனத்தை மலராக உருவகஞ் செய்வது மரபு. நினைந்து ஆசிக்குமடியாரின் உள்ளத்தில் உவந்து உறையும் இறைவனின் என்றும், உம்பரினுலகில் நித்தியம் வாழ்வார் என்றும் பொருள்கொள்ளலாம்.

நம்மவர் நூல்களிலே கைலாயம், சுவர்க்கம், வைகுந்தம், இந்திரலோகம் போன்ற மறுமையின் போகதலங்கள், மறுமையில் வாழும் ஆன்மாக்கள் சந்தர்ப்பமேற்படும்போது இந்த உலகிலேயே குதித்துப்பிறந்து சமராடுதற்கு எதிர்பார்த்திருக்கும் பாசறைகள் போலவே விபரிக்கப்படுகின்றன. மாறிமாறிப்பிறக்கும் நியதிக்கு ஒருவரும் விலக்கில்லை. அதனுல் அங்கு வாழும் தேவர் எனப்படுவோர் உண்மையாகவே உயர்த்தப்பட்ட மனிதர், ஆன்றோர் என்றே சொல்ல வேண்டும். அங்கு நித்தியபாக்கியமென்று சொல்லக் கூடியதொன்றுமில்லை. மோட்சம் மேல்மண்டலமென்பது உயர்வைக்குறிக்கவே. இடத்திலே மேல்கீழ் என்பது ஒப்பிடுவதாலென்க. மறுவாழ்விலே இடமென்ற தடையே கிடையாது. கடவுளை அடைவதே, கண்டுகளிப்பதே நித்தியபாக்கியம். நாமவனடி நோக்கிச் செல்ல அவன் நம்மைநோக்கி வருவான். சிந்தையிலும் புந்தியிலும் உறைவான், அதுவே ஆனந்தம், வாழ்வு, மனிதன் கதி.

ஆலயம் எனும் வெளிவீட்டையல்லக் கடவுள் விரும்புவது. ஆயினும் மனிதர் அதையே கொடுக்கின்றனர். இதயகோயிலையே அர்ப்பணிக்க வேணும். நீடுவாழ்வு இல்லை எனவாதிப்பது ஆபத்தானது. அது நிரய வாழ்வை நிச்சயிப்பதாக முடியலாம்.

**4. வேண்டுதல் வேண்டாமையிலானடி சேர்ந்தார்க்<br>கியாண்டு மிடும்பையில.**

வேண்டுதல் வேண்டாமை இலான் அடிசேர்ந்தார்க்கு--விருப்பு வெறுப்பிலாத கடவுளை அண்டினேர்க்கு. யாண்டும் இடும்பை இல — ஒருபோதும் துன்பம் வராது.

அடிசேர்தல்--பின்பற்றுவதனுல்.

ஆசையே துன்பத்தின் காரணம். அது யாவரும் ஏற்கும் உண்மை. ஆதலால், அதையறுப்பதே அமைதிக்குவழியென்பது புத்தர் சமணரின் பிரதான போதனை. துறவினுலே நான் எனது எனும் பற்றை அறுக்க முயன்றனர்.

கடவுள் குறையில்லாதவர். அவருக்கு ஆசையுமில்லைத் துன்பமுமில்லை. மனிதனே சிருட்டி, குறையானவன். குறையில்லாத சீவிய ஊற்ருன கடவுளை அடைவதே துன்பந்தீரும் ஒரேவழி. கடவுள் பற்றிய அறிவுவளர அருள் அதிகரிக்கும். மறுபிறவிகள் மட்டில் அருள்கூட இறை அன்பு முதிரும். அன்பினுற் காமம் வெகுளிமயக்கம் நீங்கும், அமைதியுண்டாகும்.

ஆயினும், நம்மைப்போல விருப்புக்கும் வெறுப்புக்கும் உள்ளான பெரியோரைக் கொழுகொம்பாகக் கொண்டு ஈடேற முயல்கின்றனர் பலர். அவர்கள் எப்படி அமைதி அடைய முடியுமென்பததிசயம். கடவுளே இல்லையென்று வாதிப்பவர்கள் உலகை வெறுப்பதாலோ அல்லது சுய பெலன் கொண்டு அன்புசெய்யமுயல்வதாலோ எவ்வாறுதான் பற்றறுக்க இயலும். குருடர் குருடருக்கு வழிகாட்டிப் படுகுழியில் விழுந்த பாடாகவே முடியும்.

**5. இருள் சேரிருவினையுஞ் சேரா விறைவன்**
**பொருள் சேர் புகழ் புரிந்தார் மாட்டு.**

இறைவன் புகழ்சேர் புகழ் புரிந்தார் மாட்டு--கடவுளின் மெய்யான புகழை விரும்பினரிடம். இருள்சேர் இருவினையும் சேரா -- மயக்கந்தரும் இருவித கருமப்பயனும் வந்து கூடாது.

''இறைமைக் குணங்களிலராயினரை உடையரெனக் கருதி அறிவிலார் கூறுகின்ற புகழ்கள் பொருள்சேராவாகலின் அவை முற்றவுடைய இறைவன் புகழே பொருள் சேர்புகழ் எனப்பட்டது'' (பரிமேலழகர்). ஆள்மாருட்டம் ஆபத்தானது. ஏனெனில் இறுதியிலே குறிதவறிய அம்பு போல அந்தரிக்க நேரிடும்.

உண்மையானதே நன்மையுமாகும். உண்மையான கடவுளை வாழ்த்தி வாழ்வார் நன்மையிலே நிலைபெறுவர். தீமை அவர்களைத் தீண்டமுடியாது. இறைபுகழ், வாயால் வாழ்த்துவதல்ல நற்செயல்கள் செய்வதே என்று காட்டப் புரிந்தார் என்றார்.

வினைப் பயனால் மாறிமாறி இறந்து பிறந்து உழல்வது இயல்பு என நம் முன்னோர் நம்பினர். அதன் காரணம் நல்வினை தீவினைக் கலப்பே என்றனர். சுயாதீன புத்தியுள்ள மனிதன் நன்மையை மாத்திரம் நாட வேண்டும். தின்மையை எண்ணவும் கூடாது. தின்மை என்பது இருள் போல இன்மைப்பொருள், எதிர் மறையாலேற்படுவது. கண்கிடைத்தது ஒளியைக்காண, இருளுக்கல்ல. சுதந்திரம் நன்மையைத் தெரிய, தின்மைக் கல்ல. கடவுளை மறப்பது, கடவுளைப் பிரிவது, கடவுளை எதிர்ப்பது போன்ற பேதைமையே தீமை, பாவம். கடவுளைத் தேடினால், கடவுளை விரும்பினால், கடவுளை அண்டினால் அதுவே நன்மை, புண்ணியம், பாக்கியம். நல்வினையில் இருள்சேர முடியாது. இருள்சேர் இருவினை என்பது எம்மைப்பாதிக்கும் இருவித அவிச்சையாம். முன்னோர் தவறால் எம்மிலே குறையுண்டு. நமதுதவறாலும் நம்மிலே குறையுண்டு. இவை நம்மை அலைத்து நன்மையினின்று தவறவும் பிரியவும் ஏதுவாகின்றன. இவற்றைத் திருத்த முயல்வது தனி அளவிலும் பொது அளவிலும் எமது கடமையாகிறது.

இறைவன் எனும் பதம் இவ்வதிகாரத்தில் இருதரம் வருகிறது. கடவுள் என்ற சொல்லே இல்லை. அதனால் அதிகாரப் பெயரிள்ளுள கடவுள் திருவள்ளுவர் வைத்ததா அல்லது வேறொருவர் வரைந்ததா எனச் சிலர் ஐயுறுகின்றனர் (சுப மாணிக்கம்). அது எவ்வாறாயினும் இறைவன் என்ற சொல் அரசனையே நேராகக் குறிக்கும். அதோடு கணவன், தலைவன், ஆண்டவன் போன்ற மேலான எவர்க்கும் பொருந்தும். ''இறை சிவன் கடன் வேந்தன் கையிறை இறுப்பிறை சிறந்தோன், சிறுமை யுள்ளிறகு தங்கல் சென்னி கூளிறப்பீராறே'' என்கிறது நிகண்டு (மண்டலவன்). இதிலுள்ள தங்கல் எனும் பொருளைக்கொண்டு சகலத்துக்கும் ஆதிகாரணரான பரம் பொருளுக்கு உகந்தபெயர் இது என வாதிப்பது வாய்ப்பாகத் தோன்ற வில்லை. எமது புராணங்களில் வரும் கடவுளர் இறந்துபோன மூதாதையர், அரசர், வீரரில் நின்று உருவானவர்களாகையால் இறைவர் எனப் பட்டனர். இவ்வாறே சுவாமி, ஆண்டவன், அந்தணன், தேவன் வேதன் போன்றவை முழுமுதற் கடவுளுக்கும் பொருந்துவன. இறை அல்லது திறைபெறுகிறவனே இறைவன். வள்ளுவர் அதை நிறை பொருளிலே தான் பாவிக்கிறார்.

அதிகாரத் தலைப்பிலேயுள்ள கடவுள் என்ற பெயர் கவனிக்கத்தக்கது. கடவுள் என்ற பதத்தின் மூலப்பொருள் பெரியவர் என்பது. கடோல் (எபிரேயம்) கடல் (தமிழ்) என்பன அதே கருத்துடையவை. இருப்பவர் அவரே. மற்றயாவும் அவரிலே தங்குவன. கடந்தவர் உள்ளானவர் எனப் பிரித்துப் பொருள் கொள்வது கிடையாத சிறப்புடைத்து.

புகழ் கடவுள் ஒருவருக்கே உரியது. மற்றவர்களுக்கு அவர் வழியாக மாத்திரம் வரும். நன்மையைச் சொல்லாலும் செயலாலும் பரப்புவது பொருள் சேர்புகழ், இறைவனின் புகழ்.

6. **பொறிவாயிலைந்தவித்தான் பொய்தீரொழுக்க**
**நெறிநின்றார் நீடுவாழ்வார்.**

பொறிவாயில் ஐந்து அவித்தான் -- சின்னத்திலே ஐம்புலன்களையும் பலியாக்கிய கடவுள். பொய்தீர் ஒழுக்கநெறி நின்றார் நீடுவாழ்வார் -- அறிவித்த மெய்யான ஒழுக்க வழியில் நடப்பவர் நெடுவாழ்வு அடைவர்.

பொறி -- உறுப்பு, சின்னம், இயந்திரம்.
அவி -- சமை, மாற்று, பக்குவமாக்கு, பலியாக்கு.

கடவுள் சுத்த சித்தாகையால் அரூபி, உடலில்லாதவர். எனவே ஐம்பொறிகளும் அவைமூலமியங்கும் புலன்களும் அவற்றினாலேற்படும் அவாவும் அவருக்குப் பொருந்தா. கடவுள் மனிதனாகிப் புலன் வாழ்விலே கலந்துதான் மனிதருக்கு மெய்யான ஒழுக்கநெறியைப் போதிக்கமுடியும். உடல்வாழ்விலேதான் ஐம்புலன்களை அடக்கி ஆண்டு உயிர்வாழ்வை நிலைப்

படுத்தும் வழிகாட்டமுடியும். அதனுற்தான் எமது புராணங்களிலே வரும் தேவர்கள் எடுத்ததற்கும் விளையாட்டுப்போல உடல் உடுத்து உலகிலே உதிப்பதைக் காண்கிறோம். இவற்றில் உண்மையான அவதாரமெது மெய்யான ஒழுக்கநெறியெ என அறிவதுதான் சிக்கலான பிரச்சினை.

அவியென்பது பலியிடப்படுவது, வேள்விப்பொருள், ''தொல்லுயிர் வழங்கிய அவிப்பலியாலும்'' (தொல்காப். 3. 2. 17.) குற்றவாளிக்குப் பதிலாகக் குற்றமற்ற உயிரைப் பலியாக்கல் பரிகாரப்பலி. அது தன்னையே பலியாக்கச் சம்மதம் தெரிவிப்பதாகும். கடவுள் மனிதனுகிப் பலியாவார் என்ற கருத்து இருக்குவேதத்திலுமுண்டு (10. 31. 6; 8. 32. 2.) இரத்தம் உயிருக்கு அடையாளம். இரத்தம் சிந்துவது உயிரைக் கொடுப்பதற்குச் சமன். இது மனித சரிதையில் நடந்திருக்கிறதா? எப்போது? எங்கு என ஆராய்வது அவசியம். நித்திய வாழ்வு அதிலல்லவா தங்கியிருக்கிறது.

**7 தனக்குவமையில்லாதான் தாள்சேர்ந்தார்க்கல்லால்**
**மனக்கவலை மாற்றலரிது.**

தனக்கு உவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க்கு அல்லால்--தனக்கு நிகரில்லாத கடவுளின் பாதம் அடையாதோர். மனக்கவலை மாற்றல் அரிது--மனதிலெழும் கவலைகளைத் தீர்ப்பது மிகக்கடினம்.

தாள், அடி என்பன அபயம், அடைக்கலத்தைக் குறிப்பன. கவலைக் கடலில் அலைந்தாடுவோர் கடவுள் அடியெனும் புணையைப்பற்றியே அமைதிக்கரை சேரலாம்.

கடவுள் பெரியவர் எல்லாம் கடந்தவர் யாவுக்கும் உள்ளானவர். அவருக்கு உவமை அவர்மாத்திரமே. பல கடவுளரை நியமிப்பது நியாய புத்திக்கு ஒத்துவராது. இட்டதேவதைகளும் குலதெய்வங்களும் போட்டி போட இடமே இல்லை.

கடவுளுக்குச் சொந்தமான மனிதன் கடவுளுக்குக் காணிக்கையாக வாழவேணும். தவறுசெய்தவனே பலியாக வாழவேணும். அதைவிட்டுப் பேதை மனிதர் நான், என்னுல், எனது எனும் அகந்தையில் வாழ்கின்றனர். அது பொய்யொழுக்கம். அதனுல் மனக்கவலை சூழ்கிறது. தவறை ஏற்காவிடில் நிம்மதி கிடையாது. மன்னிப்பை ஏற்காத குற்றவாளிக்கு விடுதலை கிடைப்பதெப்படி?

மாறும் சிருட்டிகளின் மனத்திலெழும் கவலைகள் நீங்கவேண்டுமானுல் மாருத கடவுளைத் தேடி வணங்கவேணும், நினைந்து வாழ்த்தவேணும். கடவுளோடு ஒன்றித்தால் மும்மலம் நீங்கும். கவலையின் காரணம் கழியவே நிறையமைதி நிலவும்.

கடவுள் மனிதனுகி நமது கடனைத் தானே பிராயச்சித்தம் செய்ய முன்வந்தது தனக்குவமையில்லாத செயல் அப்படியான பரிகாரம் வேறெங்கும் நடந்ததில்லை. ஆயினும் அவர் பின் ஒவ்வொரு மனிதனும் அச் செயலைச் செய்யவேண்டிய தென்பதே அடிதொடர்ந்து தாள் சேர்தலாகும்.

8. அற வாழியந்தணன் ருள் சேர்ந்தார்க்கல்லாற்
பிறவாழி நீந்தலரிது.

அற ஆழி அந்தணன் தாள் சேர்ந்தார்க்கு அல்லால் -- புண்ணியக் கடலான கருணைக்கடவுளின் பாதம் அடையாதவர். பிற ஆழி நீந்தல் அரிது -- மறக்கடலைக் கடப்பது மிகவும் கடினம்.

பிறஆழி -- மனிதசீவிய மெனும் கடல், இதிற் தேடும் இன்பமும் பொருளும், இதனுல் ஏற்படும் மறம். அறத்தினுல் இன்பமும் மறத்தினுற் துன்பமும் உலகிலே வருவதைக் காண்கிறோம். மனிதனின் இவ்வுலக வாழ்வு பாவக்கடலாகவே தோன்றுகிறது. சிற்றின்பம் நுகரவும் அதற்குதவும் பொருள் தேடவுமே மனிதர் உழைக்கின்றனர். கருணைகொண்டு அந்தணனய் வந்தவனைப் பின்செல்லாது சீவியத்தின் இலக்கை அடைவது பிரயாசையானது.

அந்தணன்--தண்ணளியுடையோன். பிறப்பிலே பெருமைகொள்ளும் பிராமணர் அல்லர் அந்தணர். பண்பிலே உயர்ந்த தண்ணளியுடையோரே அந்தணர். கடவுள் அந்தணனய் வந்து குறையிலா அறவழி காட்டிவிட்டார். மனிதர் அவ்வழியிலே நடவாது தவறக்காரணம் இன்பமும் பொருளுமாம். ஆனுல் இவை மனித இலட்சியமடைய ஆண்டவன் தந்த உதவிகள். இவற்றையே கதியெனப் பலர் நம்பி மயங்கிமாழ்வதால் ஆழி என்றுர். மீட்பரின் சுவட்டிலே நடந்து அவரடியை அடைவதே உயிர் காக்க, கரை சேரப் பொதுவான வழி.

அரிது என்பதால் அடிசேர்ந்தார்க்கு இலகு, மற்றவர்க்கோ மிகக் கஷ்டமென அறிமின்.

9. கோளில் பொறியிற் குணமிலவே யெண்குணத்தான்
தாளை வணங்காத் தலை.

எண்குணத்தான் தாளை வணங்காத்தலை -- எட்டுக் குணங்களையுமுடைய இறைவனை வணங்காத தலைகள். கோள் இல் பொறியின் குணம் இல. -- கருத்தை அறிவியாத அடையாளம் போலப் பயனில்லாதவை.

ஏ -- தேற்றேகாரம். பொறி -- அடையாளம், சின்னம். சின்னம் எச்சரிக்க அல்லது ஞாபகப்படுத்த உதவுவது. அது அக்கருத்தை நிறைவேற்ருவிடில் வீண் பொருளாகும்.

தலை -- மனிதரை, சிறப்பாக அவர்களுடைய பகுத்தறிவைச்சுட்டும். ஐம் பொறிகள் தலையுள் அடங்குவன. கண் பார்க்க என்பதுபோலவே தலை வணங்க நா வாழ்த்த எனக்கொளல் வேண்டும். ''வந்திக்கச் சென்னி வாய்வாழ்த்த நன்னெஞ்சம் சிந்திக்கக் கேட்கச் செவி'' (வள்ளுவமாலை 4). தலைகுனிவதும் கைகுவிவதும் நாபேசுவதும் வழிபாட்டின் வெளி அடையாளம். புத்தியால் அறிந்து சித்தத்தால் அமைவதே மனித வணக்கமாகும்.

எண்குணங்களையும் வள்ளுவர் முந்திய 8 குறள்களிலும் சுட்டியிருப்பது சிறப்பே. இக்குணங்களை ஒருங்குடையவர் உண்மையான கடவுள். அவரை அச்சமின்றி வணங்கலாம், பரகதி அடைய வணங்கவேண்டுமென்பதே அவர் கருத்து. இறைவன் இயற்கையின் ஆதிகாரணர் (1 ஆதி பகவன்) எல்லாமறிந்தவர் (2 வாலறிவன்) நிறையாற்றலுடையவர் (3 மாணடி) சம்பூரணர் (4 வேண்டுல் வேண்டாமையிலான்) நிறை பாக்கியர் (5 பொருள் சேர்புகழ்) மீட்பர் (6 ஐந்தவித்தான்) நிறை இன்பர் (7 கவலை மாற்றல்) அருள் அளிப்பவர் (8 ஆழி நீந்தல்). இன்னும் பல குணங்களைச் சேர்க்கலாம். எனினும் கடவுளை முற்றுக நினைக்க மனித புத்தியால் முடியாது. நினைத்ததை வெளியிட மொழியால் இயலாது. ஆயினும் பிரதானமானவற்றில் எட்டை மரபுப்படி அளிக்கிருர். வள்ளுவர் இங்கு தரும் பட்டியல் சிவன் அருகன் போன்றவர்க்கு மண்டலவன் நிகண்டிலளிக்கும் எண்குணங்களின் வேறுயிருப்பது குறிப்பிடற்பாலது.

கடவுளுக்கு நாமளிக்கும் குணப்பெயரெல்லாம் மூன்றிலடங்கும். **இருப்பவர்** என்பதிலே ஆதியந்தமின்மை, வரையறையின்மை, அழிவின்மை, குறைவின்மை, நாமமின்மை, சுயம்பு, காரணர், சம்பூரணர், நித்தியர், தூயவர் போன்றவை அடங்கும். **உண்மையர்** என்பதிலே அறிவு, ஞானம், நீதி, உணர்வு, காட்சி போன்றவை உடையவர் என்பவை அடங்கும். **நன்மையர்** என்பதில் ஆற்றல், வல்லமை, நேசம், இரக்கம், இன்பம், அழகு, அருள், வீரம் போன்றவை உடையவர் என்பவை அடங்கும்.

கடவுள் இருக்கிருர் என்பதுமட்டுமல்ல அவர் எப்படியானவர் என்றும் மனிதன் அறியவேண்டும். படைப்புகளிலுள்ள நிறைவுகளை நிறைத்தும் குறைவுகளை மறுத்தும் நியாயபுத்தி கடவுளின் குணங்களை ஓரளவு அறிகிறது. காரியத்தின் பண்புகள் காரணத்திலிருக்கவேணும். முதற் காரணத்திலே அவை பரிபூரணமாயிருக்க வேண்டும். மாற்றம் அழிவு போன்ற குறைகள் அவனிலிருக்க முடியாது.

இக்குணங்களை அறிந்து அனுசரித்து அனுபவிப்பதே இம்மையிலும் மறுமையிலும் மனிதனின் இலக்கு. கடவுளைக்கண்டு களிப்பதே நித்திய பாக்கியம்.

### 10. பிறவிப் பெருங்கடலீந்துவர் நீந்தார் இறைவனடி சேராதார்.

இறைவன் அடிசேராதார் -- கடவுளின் உதவியைப் பெருதவர். பிறவிக்கடல் நீந்தார் -- சீவியமென்னும் சமுத்திரத்தைக் கடவார். (சேர்ந்தவர்) நீந்துவர் -- உதவி பெற்றவர் கரைசேர்வார்.

பரம்பரையாகத் தொடரும் பாவமும் பல ஆபத்துகளும் நிறைந்ததுபற்றி மனித பிறவியைப் பெருங்கடலென்ருர். உலகு, உடல், உறவுகளின் கவர்ச்சியால் அணுப்புண்டு மயங்காது காரணகதியான கடவுளைக் கருத்திருத்தி வாழ்வதே அவனை அடையும் நேர் நெறியாகும். கடவுளோடு இருப்பதே மோட்சபாக்கியம். தேவையான யாவையும் தரக்கூடிய தாயோடிருப்பதல்லவா குழந்தைக்குப் பாக்கியம். நீந்தார் என்பதாற் கதிகெட்டு மாழ்வார் என்க. அந்தணன் அடிசேராதார் நீந்தலரிது, மாற்றலரிது என்றவர் இறைவனடிசேராதார் நீந்தார் என முடிவு கட்டுகிருர்.

கடவுளை இழப்பதே நரகவேதனையாகும். படைத்தவர் படியளக்கிருர். அதைக்கேட்டு வாங்கிப் பாவிப்பது புத்தியுள்ள மனிதனின் வேலை. அடிசேர்தலை அருகில் நிற்றல் எனலாம். எட்டப்போனுல், அவரை மறந்தால் உதவிபெற முடியாது. பாக்கியம் நிறைந்த பரமனை நினைந்து வாழ்த்தி வழிபடும்போது அவரே நமது மிதவைபோல் வந்து எமைத் தாங்கிப் பேரின்ப கதி சேர்ப்பார்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

கடவுளை ஏற்று வழிபடுவதால் இவ்வுலகில் நன்மை அடையலாம், தின்மை தவிர்க்கலாம் என்பதே முதலதிகாரத்தின் கருப்பொருள். தனக்குவமையில்லாதான், பொய்தீரொழுக்கநெறி, பிறவிப்பெருங்கடல், நீடுவாழ்வார் போன்ற சொற்றெடர்கட்குப் பல விதமாகப் பொருள் கூற முடியும். உரையாசிரியர் தமது கொள்கைகளைப் புகுத்திப்பயன் சொல்வது சாதாரணம். எனினும் காலம் இடம் பண்பாடு போன்ற சந்தர்ப்பம் சூழலுக்கேற்ப அவற்றை ஆராய்வதே சிறந்தது. நூலாசிரியர் கருதாத பொருளைப் பனுவலிலே காண்பது படிப்பவரின் அறிவைப் பொறுத்தது. அபிப்பிராயத்துக்கு ஆதாரம் காண்பதே பண்பு.

பண்டைத் தமிழகத்தின் பழக்கவழக்கங்களையும் கொள்கைகளையும் ஆசிரியரின் அறிவு, அனுபவத்தினூடாக வடித்துத் தொகுத்துத் தருவது

திருக்குறள். வள்ளுவரின் அடிப்படைக் கொள்கைகள் தெளிவாகத் தெரி கின்றன. எல்லாம் படைத்த ஏக கடவுள் இருக்கிறார். அவரை வணங் குதல் மனிதனின் வேலை. அவருடைய விதியை அறிந்து அமைவது அவன் கடமை. கடவுளை அடைவதே மனிதனுடைய கதியான நெடுவாழ்வு. எனினும் அன்றைய சமுதாயத்திலே நிலவிய எந்தத்தெய்வம், சாகியம், நெறியைப் பின்பற்ற வேண்டுமென்ற வரையறையை அவர் கூறவில்லை. மனிதன் சுதந்திரத்தைப் பாவிக்க வேண்டியவன். அவனுக்கு வழி காட் டலாம். ஆனால் வலோற்காரம் செய்யப்படாது. அதன்படியே, மெய்ப் பொருளை வேண்டியளவு விபரித்தபின் அதனைக்காணும் கடமையை வாச கற்கே விடுகிறார். ஒழுக்கத்தை நூலிலே விளக்குகிறவர் அதன்கதி கட வுள் என்பதை முதலதிகாரத்திலேயே கூறிவிடுகிறார்.

விதியை நாம் இருவிதமாக விளங்கலாம். இயற்கையின் எசமான் வைத்த ஒழுங்கு தடைபடாது நடைபெறவேணும். அதனாற்தான் படைப் புகளெல்லாம் நெறிதவறாது இயங்குகின்றன. ஆனாற் சடப்படைப்பின் முடியான மனிதன் சுயநிர்ணய சக்தியுடையவனாக விளங்குகிறான். நன் மையை மட்டுமல்லத் தின்மையையும் தெரிந்து செய்யக்கூடியவனாயிருக் கிறான். இந்த விபரீத சக்தியால் அவன் தனக்கு வாழ்வையோ தாழ் வையோ மாழ்வையோ தேடுகிறான். தனக்குக்கிடைத்த அரிய வல்லமை யைப் பிழையாகப் பாவித்தபின் தனது தவறைக் கடவுளின் விதியென் கிறான். மிருகம் அறிந்து தவறு செய்யாது. மனிதன் மட்டுமே அறிந்து கொண்டு தவறுகிறான். அதனால் மிருகத்தின் விதிவேறு மனிதனின்விதி வேறு. மனிதனுக்குப்பொறுப்புண்டு. நாம் நன்மையை அறிந்து அதை விரும்பி (விதித்து)ச் செய்வதே கடவுளின் விருப்பம் (விதி). சுதந்திரத் தின் சிறப்பும் பொறுப்பும் அதுவே. இதன்படி, மனச்சாட்சி சுட்டிக் காட்டும் கடவுளின் விருப்பத்தைப் பின்பற்றுவதே சரியான விதியென்க. அதனாலன்றோ ''விதியை மதியால் வெல்க'' என்பர்.

நீடுவாழ்தல், இடும்பையின்மை, இருவினை சேராமை, மனக்கவலை மாற்றல், பிறவாழி நீந்தல் போன்ற நன்மைகளின் தன்மை எது என் பது கடவுளுக்கு அளிக்கப்படும் கருத்திலேயே தங்கியிருக்கிறது. மனிதத் தன்மையுடைய இறைவர் தம்மளவான கொடைகளையே அளிக்கமுடியும். தனிமுதற் கடவுளின் குணங்களோடு சாதாரண மனிதரின் பெலவீனங் களைக் கலந்து அணிந்துகொள்ளும் நமது முன்னோரின் தேவர் நித்திய பாக்கியம் போன்ற நன்மைகளைத்தர முடியுமா என்பது பெரிய வினா.

இற்றைக்கு 1800 ஆண்டுகளுக்கு முன்னே நாமறிந்த மனித சமுதா யங்களிலே கடவுள் பற்றிய மெய்யறிவு துலாம்பரமாயிருக்கவில்லை. ஒரே கடவுள் என்றகொள்கையிலே ஊன்றியிருந்த எபிரேய மக்கள் தானும் தங்களுடைய யாவே மற்றவர்களுக்கு உரியவரல்லர் என்ற பாணியில்

எல்லாரையும் ஆக்கிக்காக்கும் ஏக கடவுளையே ஒருகுல தெய்வமாக்கி விட்டனர். அதனாலவர்கள் இழிந்து விக்கிரக ஆராதனைக்காரராகிவிட்டனர். இதை இறைவாக்கினரின் கண்டனங்கள் மூலம் விவிலியநூலிலே காணமுடியும். கடவுள் பற்றிய உண்மைப் பண்புகள் மனிதர் அறியாமையாற் கற்பித்த தப்பிதங்களுடன் கலந்ததால் அவை பரம் பொருளுக்குப் பொருந்தாமற் போகின்றன. உண்மையினின்று தவறுதலால் ஆள் மாறாட்டமுண்டாகி மனிதர் தமது இலட்சியத்தை அடையத்தடையுண்டாகிறது. பெறவேண்டிய நிறைவாழ்வு கிடையாது போகிறது. ஏமாந்தவர் ஏமாற்றும் நாடகம் தொடர்கிறது. பரிதாபம்!

கடவுள் உலகுக்கும் இயற்கைக்கும் தொடக்கம் மட்டுமல்ல ஆதிகாரணமாகவுமிருக்கிறார். ஒன்றுமில்லாமையிலிருந்து உண்டாக்குவதே சிருட்டிப்பு. அது எப்படி நடக்கலாம், சிருட்டிகர் எப்படி இருக்கலாம் என்று அற்ப மனிதபுத்தி அறிய முடியாவிடினும் உலகுக்குக் காரணமான ஒருவர் இருக்கவேணுமென்பதைக் கட்டாயம் வேண்டுகிறது. இது விவிலியம் வெளிப்படையெனக் காட்டுகிறது. படைப்பின் விதம்பற்றி வினா எழலாம், படைப்புப்பற்றி வினாவே இடையாது. உலகத்தைப் படைத்தார்; மனிதனை விசேடவிதமாகப் படைத்துச் சடலோகத்துக்கு அதிபதியாக வைத்தார்.

ஆதியாகமம் 1.1. ஆதியிலே கடவுள் விண்ணையும் மண்ணையும் படைத்தார் ... 3. அப்பொழுது கடவுள் ஒளி உண்டாகுக என்றுரைத்தார். உரைக்கவே ஒளி உண்டாயிற்று ... 26. பின்னர் கடவுள்; நமது சாயலாகவும் பாவனையாகவும் மனிதனைப்படைப்போமாக. அவன் கடல் மீன்களையும் வானத்துப்பறவைகளையும் மிருகங்களையும் பூமிமுழுவதையும் பூமியின்மீது அசைவன ஊர்வன யாவற்றையும் ஆளக்கடவன் என்றார். 27. இவ்வாறு கடவுள் மனிதனைத் தனது சாயலாகப்படைத்தார். தெய்வசாயலாகவே அவனைப்படைத்தார் ... 31. அப்போது கடவுள் தாம் படைத்த எல்லாவற்றையும் நோக்கினார். அவை எல்லாமே மிகவும் நன்றாயிருந்தன.

2. மக்கபேயர் 7. 27. என் மகனே, உன்னை ஒன்பது மாதம் என் வயிற்றில் சுமந்தேன்; மூன்றுண்டு உனக்குப் பாலூட்டிவளர்த்தேன்; இந்த வயது வரைக்கும் உன்னைக்காப்பாற்றினேன். ஆதலால் நீ என்மீது இரக்கமாயிரு. 28. மகனே, விண்ணையும் மண்ணையும் அவற்றிலுள்ள அனைத்தையும் பார். இவை யாவற்றையும் மனிதகுலத்தையும் கடவுள் ஒன்றுமில்லாமையிலிருந்து உண்டாக்கினுர் என்று கண்டறிவாய். 29. இவ்வண்ணம் இக் கொலைகாரனுக்கு நீ அஞ்சாதிருப்பாய். ஆனுல், உன் சகோதரரோடு கடவுள் இரக்கத்தில் நானுன்னை ஏற்றுக்கொள்ளும்படி நீ மரணத்தை ஏற்றுக்கொள்வாய் என்று கூறினுள்.

அருளப்பர் 1.1 ஆதியிலே வார்த்தை இருந்தார். அவ்வார்த்தை கடவுளோடு இருந்தார். அவ்வார்த்தை கடவுளாயுமிருந்தார். 2. அவர் ஆதியிலே கடவுளோடு இருந்தார். 3. அவர் வழியாகவே அனைத்துமுண்டாயின; உண்டான தெதுவும் அவராலேயன்றி உண்டாக்கப்படவில்லை.

வெளிப்பாடு, 1.8 அகரமும் னகரமும் நானே என்கிருர் எல்லாம் வல்ல ஆண்டவராகிய கடவுள். இருக்கிறவர், இருந்தவர், இனி வருபவர் அவரே.

4.9. என்றென்றும் வாழ்பவர்க்கு, அரியணையில் வீற்றிருப்பவர்க்கு அவ்வுயிர்கள் மகிமையும் மாட்சியும் நன்றியும் செலுத்தும் போதெல்லாம், 10. இருபத்துநான்கு மூப்பர்களும் அரியணையில் வீற்றிருப்பவர்முன் அடிபணிந்து என்றென்றும் வாழ்கின்ற அவரைத் தொழுகின்றனர். 11. அவர்கள் தங்கள் பொன்முடிகளை எடுத்து அரியணைமுன்வைத்து "எங்களாண்டவரே! எங்கள் இறைவனே! மகிமையும் மாட்சியும் வல்லமையும் பெறத்தக்கவர் நீரே, ஏனெனில் அனைத்தையும் படைத்தவர் நீரே! அனைத்தும் உண்டானது உம்விருப்பத்தாலே, உம்விருப்பத்தாலே எல்லாம் படைக்கப்பட்டன" என்று பாடுகின்றனர்.

பணி 17. 24. உலகையும் அதிலுள்ள அனைத்தையும் படைத்த கடவுள், விண்ணுக்கும் மண்ணுக்கும் ஆண்டவராம் அவர் மனிதனின் கையால் உருவான கோயில்களில் வாழ்வதில்லை. 25. அனைத்திற்கும் மூச்சு, உயிர் எல்லாமே அளிக்கும் அவர் மக்களின் கையாற் பணிவிடைபெறுவது தமக்கு ஏதோ தேவைப்படுவதாலன்று. 36. ஒரே மூலத்திலிருந்து மனுக்குலம் முழுவதையும் உண்டுபண்ணி, அதை மாநிலத்தில் வாழச் செய்தார். அவர்களுக்குக் குறிப்பிட்ட காலப்பகுதிகளையும், அவர்கள் குடியிருக்கவேண்டிய எல்லைகளையும் அவர்களுக்கு வரையறுத்துக்கொடுத்தார். 27. அவர்கள் தம்மைத் தேடவேண்டுமென்பதற்காக இவ்வாறு செய்தார். இருட்டிற் தடவித்தேடுவது போலாவது ஒருவேளை அவர்கள் தம்மைத் தேடிக் கண்டுபிடிக்கக் கூடுமென்றே இங்ஙனம் கடவுள் செய்தார். ஏனெனில் அவர் நம் ஒவ்வொருவருக்கும் அருகிலேயே உள்ளார். 28. நாம் வாழ்வதும் இயங்குவதும் இருப்பதும்

அவரிலேதான். உங்கள் புலவர்களில் ஒருவர் கூறுமாப்போல, நாமும் அவரினமே 29. நாம் கடவுளின் இனத்தவராதலால் பொன், வெள்ளி, கல் இவற்றைக்கொண்டு மனிதனின் கலைத்திறனும் அறிவும் அமைத்த வேலைப்பாட்டிற்குத் தெய்வீகம் ஒப்பானதென்று எண்ணலாகாது. 30. மக்கள் அறியாமையால் வாழ்ந்த காலத்தில் நிகழ்ந்ததைக் கடவுள் பொருட்படுத்தாமல், இப்போது உலகெங்கும் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென மனிதர்களுக்குக் கட்டளையிடுகிறார். 31. ஏனெனில் அவர் ஒரு நாளைக் குறித்துள்ளார். அந்நாளிற் தான் நியமித்த மனிதனைக்கொண்டு உலகை நீதியோடு தீர்ப்பிடுவார். இதை அனைவருக்கும் எண்பிக்க, இறந்தோரிடமிருந்து அவரை உயிர்ப்பித்தார், என்றார்.

சங்கீதம் 32. 6. ஆண்டவருடைய வார்த்தையால் வானங்களுண்டாயின.

13. 1. கடவுள் இல்லை யென்று அறிவிலி தனக்குள்ளே சொன்னான்.

101. 25. ஆதியிலே நீர் பூவுலகுக்கு அடித்தளமிட்டீர். வானங்கள் உம் கைவேலை. இவையெல்லாமழிந்துவிடும். நீரோ நிலைநிற்பீர். அனைத்துமே ஆடையைப்போல் பழமையடையும். துணிமணிபோல் நீர் அவற்றை மாற்றுகிறீர், அவையும் மாறிப்போம். 26. நீரோவெனில் ஒரே நிலையாய் உள்ளீர்: உம் காலத்துக்கு முடிவேயில்லை. 185. 5 ஞானமுடன் வானங்களை அமைத்தவர் அவரே, அவரைப் போற்றுங்கள். 25. உயிரினம் அனைத்திற்கும் உணவூட்டுபவர் அவரே, அவரைப் போற்றுங்கள். ஏனெனில் அவர் இரக்கம் என்றென்றும் நிலைத்துள்ளது.

சிராக். 18. 1. என்றும் வாழ்பவர் எல்லாவற்றையும் உண்டாக்கினார், கடவுள் ஒருவரே முற்றிலும் நீதியுள்ளவர். வெல்லப்படாத அரசரான அவரே என்றும் நிலைத்திருக்கிறார். 2. அவருடைய படைப்புகளை வருணிக்க வல்லவர் யார்? 3. அவருடைய மகத்துவங்களைக் கண்டுபிடிப்பவன் யார்? 4. அவருடைய மாட்சியின் மகிமையைச் சொல்லிக்காண்பிப்பவன் யார்? அவருடைய இரக்கத்தை விபரித்துச் சொல்லுகிறவன் யார்? 5. குறைக்கவும் கூட்டவும் முடியாத கடவுளுடைய மகத்துவங்களைக் கண்டுபிடிப்பவர் ஒருவருமில்லை.

24. 5. ஞானம் சொல்வதாவது: உந்நத கடவுள் வாயினின்று நான் புறப்பட்டேன். நானே படைப்புகளுக்கெல்லாம் முன்பே படைக்கப்பட்டேன். 6. வானங்களில் மங்காத ஒளி உதிக்கும்படி செய்தது நானே.

சங்கத் திருவுரை 12. 7. மண்ணால் ஆனது தான் தோன்றிய பூமிக்கே மறுபடியும் போகுமுன்னும், ஆவி அதனை அளித்த கடவுளிடம் திரும்பிச்

சேருமுன்னும் நீ உன்னைப்படைத்தவரை நினைக்கக்கடவாய்.

இசையாஸ் 40. 28. உனக்குத்தெரியாதா? நீ கேட்டதில்லையோ? ஆண்டவர்தான் முடிவில்லாத கடவுள்; பூமியின் எல்லைகளைப் படைத்தவர் அவரே, அவர் சோர்ந்துபோவாரல்லர், களைப்படைவாரல்லர்; அவருடைய ஞானமோ புத்திக்கு எட்டாதது. 29. அவரே களைத்தவனுக்குப் பலம் தருகிறார். வலிமையும் சக்தியும் அற்றவர்க்கு அவற்றை ஊட்டுகிறார்.

ஞானமும் வல்லமையும் நிறைந்த கடவுளை அறிந்து வழிபடுவதே அறிவுள்ள மனிதனின் முதலான வேலை.

றோமர். 1. 19. கடவுளைப்பற்றி அறியக்கூடியதெல்லாம் அவர்களுக்குத் தெளிவாய் விளங்கிற்று. அதைக்கடவுளே அவர்களுக்குக் காட்டித் தெளிவுறுத்தினார். 20. ஏனெனில், கட்புலனாகாத அவருடைய பண்புகளும் அவருடைய முடிவில்லா வல்லமையும் கடவுள்தன்மையும் உலகமுண்டானது முதல் அவருடைய படைப்புகளிலேயே அறிவுக்குப் புலனாகின்றன, ஆகவே அவர்கள் சாக்குச் சொல்வதற்கு வழியில்லை. 21. ஏனெனில், அவர்கள் கடவுளை அறிந்திருந்தும், கடவுளுக்குரிய மகிமையை அவருக்கு அளிக்கவுமில்லை; நன்றிசெலுத்தவுமில்லை. மாறாக, தங்கள் வீணான சிந்தனைகளில் அறிவிழந்தனர். 22. அவர்களுடைய உணர்விலா உள்ளம் இருண்டு போயிற்று. தங்களை ஞானிகள் எனப் பிதற்றும் அவர்கள் வெறும் மடயர் ஆயினர். 23. அளவிலாக் கடவுளின் மாட்சிமையை விடுத்து, அதற்குப் பதிலாக அழிந்து போகும் மனிதர், பறவைகள், விலங்குகள், ஊர்வன ஆகியவற்றின் சாயலான உருவங்களை ஏற்று வழிபட்டனர். 24. ஆகவே, அவர்களுடைய உள்ளத்து இச்சைகளின்படி அவர்களைக் கடவுள் அசுத்தத்துக்குக் கையளித்து அவர்கள் ஒருவரோடொருவர் தங்கள் உடல்களை அழிவுபடுத்த விட்டுவிட்டார். 25. ஏனெனில், அவர்கள் கடவுளின் உண்மையைப் பொய்யாக மாற்றினர்; படைப்புப்பொருள்களுக்கு வழிபாடும் ஊழியமும் செய்தனர்; படைத்தவரை மறந்தனர்; அவரே என்றென்றும் போற்றுதற்குரியவர்.

அருளப்பர் 4. 23. நேரம்வருகின்றது, ஏன் வந்தேவிட்டது, அப்போது மெய்யடியார்கள் ஆவியிலும் உண்மையிலும் பரமதந்தையைத் தொழுவார்கள். ஏனெனில், தம்மைத் தொழும்படி தந்தை இத்தகையோரைத் தேடுகிறார். 24. கடவுள் ஆவியானவர். ஆதலால், அவரைத் தொழுபவர்கள் ஆவியிலும் உண்மையிலும்தான் அவரைத் தொழுதல் வேண்டும்.

ஞானாகமம். 13. 1. ஆம், கடவுளை அறியாத மனிதர் அனைவரும் இயல்பிலேயே மடயர்கள்; கண்ணுக்குப் புலனாகும் நன்மைகளைக் கண்டு

இருக்கின்றவரை அறிந்துகொள்ள இயலாதவராயினர்; கைவினைகளில் கவனம் செலுத்தி கைவினைஞரை அறிந்துகொள்ளாமற் போயினர். 2. அதற்கு மாறாக, தீயோ காற்றோ சூறாவளியோ, விண்மீன் கூட்டமோ அலைமோதும் வெள்ளமோ, சூரியனோ சந்திரனோ உலகத்தை ஆளுகின்ற தெய்வங்கள் என்று எண்ணிக்கொண்டிருந்தார்கள். 3. இந்தப் பொருட்களின் அழகில் மயங்கி இவற்றைத் தெய்வங்களென எண்ணினார்களாயின் இவற்றையெல்லாம் ஆளுகிறவர் இவற்றிலும் எவ்வளவோ மேலானவர் என்பதை அறிந்துகொள்ளட்டும்; ஏனெனில் அழகின் ஊற்றே அவற்றை உண்டாக்கினார். 4. அவற்றின் வல்லமையையும் ஆற்றலையும் கண்டு மனிதர் வியப்பில் ஆழ்கின்றார்கள் எனில், அவற்றையெல்லாம் ஆக்கியவர் அவற்றிலும் எவ்வளவோ வல்லமையுள்ளவர் என்பதை அவற்றால் அறியட்டும். 5. ஏனெனில் படைப்புகளின் பெருமையையும் அழகையும் கண்டு அவற்றைப் படைத்தவரைக் கண்டறியலாம். . . . 8. இருப்பினும் இவர்களும் சாக்குப்போக்குச் சொல்ல இடமில்லை. 9. ஏனெனில் உலகத்தைப்பற்றி ஆராய்ந்தறியும் அளவுக்கு அவர்களுக்கு அறிவாற்றல் இருக்கும்போது, இவற்றுக்கெல்லாம ஆண்டவரை எளிதில் கண்டறிய அவர்கள் தவறிவிட்டதெப்படி? 10. ஆனால் பொன் வெள்ளியாற் திறமையாய் உருவாக்கப்பட்டு மனிதரின் கைகளாற் செய்யப்பட்ட வேலைப்பாடுகளுக்கும், மிருகங்களின் சாயலான உருவங்களுக்கும், அல்லது பண்டைநாளில் கையால் செதுக்கப்பட்ட பயனற்றதொரு கல்லுக்கும் ''தெய்வங்கள்'' எனப்பெயரிட்டு உயிரற்ற பொருட்கள் மீது தங்கள் நம்பிக்கையை வைக்கிற மனிதர்கள் மிகவும் இரங்கத்தக்கவர்கள்!

சீராக் 23. 27. ஆனால், அவருடைய கண் அனைத்தையும் பார்க்கிறதென்று அவன் சிந்திப்பதில்லை. மனிதனுக்குமட்டும் அஞ்சுவதும் மனிதனுடைய பார்வைக்கு அஞ்சி நடப்பதும் தெய்வபயத்தைத் தன்னிடத்தினின்று ஓட்டிவிடுவதாமென்று அவன் அறியான். 28. ஆண்டவருடைய கண்கள் கதிரவனைக்காட்டிலும் மிக்க ஒளியோடு இருக்கின்றனவென்றும் மனிதருடைய எல்லா வழிகளையும் பாதாழத்தின் ஆழத்தையும் பார்க்கின்றனவென்றும் மனிதருடைய இதயங்களையும் இரகசியங்களையுமாராய்ந்து அறிகின்றனவென்றும் அவன் கண்டுபிடிப்பதில்லை. 29. ஏனெனில், அனைத்தும் படைக்கப்படுவதற்கு முன்பே ஆண்டவரான கடவுள் அவைகளை அறிந்திருக்கிறார். அது போலவே படைத்த பிறகும் அனைத்தையும் பார்க்கிறார்.

வெளிப்பாடு. 20. 11. பின் வெண்மையான பெரியதோர் அரியணையையும் அதில் வீற்றிருப்பவரையும் கண்டேன். அவருடைய முன்னிலையில் மண்ணகமும் விண்ணகமும் இருந்த இடந்தெரியாமல் மறைந்து போயின. 12. இறந்திருந்த சிறியோர் பெரியோர் அனைவரும் அரியணை முன் நிற்கக் கண்டேன். அப்போது ஏட்டுச்சுருள்கள் பிரிக்கப்பட்டன. வேறொரு சுருளும் பிரிக்கப்பட்டது. அது வாழ்வு நூல். இறந்தவர்களின்

செயல்கள் அச்சுருள்களில் குறித்திருந்தன. அச்செயல்களுக்கேற்ப அவர்களுக்குத் தீர்ப்புக் கூறப்பட்டது.

**யோபு** 19. 25. என்னை மீட்பவர் உயிரோடிருக்கிறார் என்றும் இறுதியில் அவர் புவிமீது எழுந்தருளுவார் என்றும் அறிந்திருக்கிறேன்.

28. 28. இதோ ஆண்டவரைப்பற்றிய அச்சமே ஞானம். தீமையை விட்டுவிடுவதே அறிவு.

**பழமொழி.** 1. 7. தெய்வபயமே ஞானத்தின் தொடக்கம். மதியீனரே ஞானத்தையும் போதனையையும் புறக்கணிக்கின்றனர்.

சங்கீதம் 45. 10. அமைதியுடனிருந்து நான் கடவுளென்று அறிந்து கொள்ளுங்கள். புறவினத்தாரிடையிலும் மானில மீதும் உந்நதர் நானேயென்று அறிந்து கொள்ளுங்கள்.

80. 9. வேறு தேவன் எவரும் உனக்கு இருத்தலாகாது. அந்நிய தேவன் யாரையும் நீ வணங்கலாகாது.

**நீடுவாழ்வில் நிலையான இன்பமடைவதே** அறிவுள்ள மனிதனின் தணியாத ஆசை. அதைத்தேடியே அவன் அலைந்து உலைந்து முயலுகிறான்.

மாற்கு. 10. 28. அப்பொழுது இராயப்பர் அவரிடம்: இதோ நாங்கள் எல்லாவற்றையும் விட்டுவிட்டு உம்மைப் பின்சென்றோமே, என்று சொன்னார். 29. அதற்கு யேசு: தன் வீட்டையோ சகோதரசகோதரியையோ தாய்தந்தையையோ மக்களையோ நிலபுலங்களையோ என் பொருட்டும் நற்செய்தியின் பொருட்டும் துறந்துவிடும் எவனும், 30. இம்மையில் இன்னல்களோடுகூட வீடு, சகோதர சகோதரி, தாய், பிள்ளை, நிலபுலங்களை நூறுமடங்காகவும் மறுமையில் முடிவில்லா வாழ்வையும் பெறாமல் போகான் என்று உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன். 31. முதலானோர் பலர் கடைசியாவர், கடைசியானோர் பலர் முதலாவர், என்றார்.

அருளப்பர் 17. 3. முடிவில்லா வாழ்வு என்பது உண்மையான ஒரே கடவுளாகிய உம்மையும் நீர் அனுப்பிய யேசுக்கிறிஸ்துவையும் அறிவதே.

**றோமர்** 2. 7. நற்செயல் செய்வதில் உறுதி தளராமல் மகிமையும் மாண்பும் அழியாமையும் தேடுவோருக்கு முடிவில்லாத வாழ்வை வழங்குவார்.

**யோபு** *14. 14.* ஆனால், செத்தவன் எங்கே மறுபடியும் உயிர் பெறுவான், எனக்கு விடுதலை எப்போ வருமோவென்று என் போராட்ட நாட்களிலெல்லாம் நான் காத்திருப்பேன். *15.* அப்போது நீர் என்னைக் கூப்பிடுவீர், நான் பதில் கொடுப்பேன்,

**ஆதியாகமம்.** *4. 26.* ஏனெஸ் ஆண்டவருடைய பெயரைச் சொல்லி வழிபடத் தொடங்கினான்.

*5. 24.* ஏனோக் கடவுளுக்கு உகந்தவிதமாய் நடந்து இவ்வுலகினின்று மறைந்தான். ஏனெனில் கடவுள் அவனை எடுத்துக்கொண்டார்.

**சங்கத்திருவுரை** *12. 13.* கடவுளுக்குப் பயந்து அவருடைய கட்டளைகளைக் கடைப்பிடித்து வருவதே மனிதர் யாவர் மேலும் சுமந்த கடமை. *14.* மனிதர் செய்துவருகிற புண்ணியமோ பாவமோ தவறோ எவ்விதமானாலும் அவைகளையெல்லாம் கடவுள் நீதி நியாயத்தின்படி தீர்ப்புச்செய்வார்.

**சீராக்** *33. 1.* தெய்வபயமுள்ளவனுக்குத் தீமைகள் நேரிடா. ஆனால் சோதனையில் கடவுள் அவனைக்காத்துத் தீமையினின்று மீட்பார்

**பழமொழி.** *3. 5.* நீ உன் விவேகத்திலே ஊன்றி நில்லாமல் உன் முழு இருதயத்துடனே ஆண்டவர்மேல் நமபிக்கை வை .... *6.* அவர் உன்னை வழி நடத்துவார் .... *10.* உன் களஞ்சியங்கள் தானியத்தால் நிறையும், உன் கொடிமுந்திரிப்பழ ஆலைகளும் சாற்றினால் நிரம்பும்.

*8. 35.* ஞானத்தைக் கண்டுபிடிப்பவன் வாழ்வடைவான்; ஆண்டவரிடமிருந்து மீட்பையும் பெறுவான்.

**சங்கீதம்** *15. 1.* இறைவா என்னைப் பாதுகாத்தருளும். உம்மிடம் நான் அடைக்கலம் புகுந்தேன். *10.* என் ஆன்மாவைப் பாதாளத்தில் விட்டுவிடமாட்டீர். *11.* வாழ்வுக்குச் செல்லும் வழியை நீர் எனக்குக் காண்பிப்பீர். உம்திருமுன் என் நிறை மகிழ்ச்சியையும் உம்வலக்கையில் இடைவிடா இன்பத்தையும் நீர் காட்டுவீர். *16. 5.* நீர் காட்டிய வழியில் என் காலடிகள் உறுதியாய் நிற்கின்றன. அவ்வழியில் என் நடை பிறழவில்லை. *8.* கண்ணின் மணியைப் போல என்னைக்காத்தருளும்; உம் சிறகுகளின் நிழலில் என்னை மறைத்துக்கொள்ளும். *15.* நானோவெனில் நீதியில் நிலைத்திருந்து உம் திருமுகத்தைக் காணவே விரும்புகிறேன். உமது பிரசன்னத்தால் நிறைவுறுவதொன்றையே நான் விழைகின்றேன்.

*90. 1.* உந்நதரின் அடைக்கலத்திலிருப்பவனே ... *16.* நீடியவாழ்வினால் அவனுக்கு மனநிறைவு தருவேன். என் மீட்பினை அவனுக்குக் காட்டுவேன்.

அழியாத இன்பத்தை விழையும் ஆன்மா நிலையான வாழ்விலே நித்தியமும் இறைவனைக் கண்டுமகிழும். இடும்பைகளேதும் அதைத் தீண்ட முடியாது.

ரோமர் 8. 28. கடவுளிடம் அன்புகூர்பவர்களோடு, அதாவது அவரது திட்டத்திற்கேற்ப அழைக்கப்பட்டவர்களோடு ஆவியானவர் அவர்கள் நன்மைக்காக அனைத்திலும் ஒத்துழைக்கிறார் என்பது நமக்குத்தெரியும். 29. ஏனெனில் கடவுள் யாரைமுன்பே தேர்ந்துகொண்டாரோ அவர்கள் தம் மகனின் சாயலுக்கேற்ற உருவைத்தாங்கும்படி முன்குறித்திருக்கிறார். சகோதரர் பலருள் தம்மகன் தலைப்பேறானவராய் இருக்க வேண்டுமென்றே இப்படிக்குறித்தார். 30. யாரை முன்குறித்தாரோ அவர்களை அழைத்திருக்கிறார்; யாரை அழைத்தாரோ அவர்களைத் தமக்கு ஏற்புடையவர்களாக்கினார்; யாரைத்தமக்கு ஏற்புடையவர்களாக்கினாரோ அவர்களுக்குத் தம் மாட்சிமையில் பங்குதந்தார்.

பழமொழி. 10. 3. நீதிமானின் ஆன்மாவை ஆண்டவர் பசியால் வருத்தார். தீயோரின் கண்ணிகளை அவர் அழித்துவிடுவார்.

சங்கீதம் 54. 22. ஆண்டவர்மீது உன் கவலையைப் போட்டுவிடு, அவர் உன்னை ஆதரிப்பார்; நீதிமான் என்றும் கலங்கவிடமாட்டார்.

55. 10 இறைவனின் வாக்குறுதியை நான் புகழ்ந்தேத்துகிறேன், ஆண்டவருடைய வார்த்தையைப் புகழுகிறேன். 11. இறைவன்மீது நம்பிக்கை வைக்கிறேன், அச்சமெனக்கில்லை; மனிதனெனக்கென்ன செய்வான். 13. சாவினின்றென்னைக் காத்தீர்; சறுக்கிவிழாதபடி என் அடிகளைக் காத்தீர்: வாழ்வோரின் ஒளியிலே இறைவனின் முன்னிலையில் நான் நடக்கச் செய்தீர்.

மனிதனை வருத்தும் இருவினை நீங்கப் படைத்த கடவுளின் அடைக்கலம் அடைவதே மருந்து.

இசையா 45. 21. ... நம்மையல்லால் வேறு தெய்வமில்லை. நீதியுள்ளவரும் மீட்கிறவருமாகிய கடவுள் நம்மையல்லால் வேறு யாருமில்லை. 22. உலகத்தின் எல்லைகளில் வாழும் மக்களே நீங்களனைவரும் நம்மிடம் திரும்பி வாருங்கள், நீங்கள் மீட்பு அடைவீர்கள். ஏனெனில் நாமே கடவுள். வேறு எவருமில்லை. 23. ··· நம் வாயிலிருந்து புறப்படுவது உண்மையே, பொய்யாமொழியே. 24. எல்லா முழந்தாளும் நமக்கு மண்டியிடும்; எல்லா நாவும் நம் பெயரால் ஆணையிடும். 25. நம்மைப் பற்றி மக்கள் சொல்வது இதுவே: ஆண்டவர் ஒருவரிடம் மட்டுமே நீதியும் வல்லமையுமிருக்கின்றன; அவருக்கெதிராய் எழுந்தவரனைவரும் வெட்கத்தோடு அவர் முன் வருவர்.

52. 10. மக்களினங்கள் அனைத்தின் கண்களுக்கும் ஆண்டவர் தம் பரிசுத்த கைவன்மையைக் காட்டினார். உலகின் கடைகோடி நாடுகளெல்லாம் நம் கடவுள்தரும் மீட்பைக் காணப் போகின்றன.

ஆதியாகமம் 3. 4. பாம்பு பெண்ணை நோக்கி: நீங்கள் உண்மையில் சாகவேமாட்டீர்கள். 5. நீங்கள் எப்போது அக் கனியைத் தின்பீர்களோ அந்நேரமே உங்கள் கண்கள் திறக்கப்படும். அதனால் நீங்கள் தெய்வம் போலாகி நன்மையையும் தீமையையும் அறிவீர்கள். இது கடவுளுக்குத் தெரியுமென்று சொல்லிற்று. 6. அப்பொழுது பெண் அந்த மரத்தின் கனி தின்பதற்கு நல்லது, பார்வைக்கு இனியது அறிவைப் பெறுவதற்கு விரும்பத்தக்கது எனக்கண்டு அதைப் பறித்துத் தானும் உண்டாள்; தன் கணவனுக்கும் கொடுத்தாள். அவனும் அதைத் தின்றான். 7. உடனே அவ்விருவருடைய கண்களும் திறக்கப்பட்டன. தாங்கள் நிர்வாணமாயிருந்ததை அவர்கள் கண்டு அத்தி இலைகளைத் தைத்து இடுப்பில் உடுத்திக் கொண்டார்கள்.

அருளப்பர் 5. 41. மனிதர் தரும் மகிமை எனக்குத் தேவையில்லை. 42. உங்களைப்பற்றி எனக்கு நல்லாய்த் தெரியும். கடவுளன்பு உங்களிடமில்லை. 43. நானென் தந்தையின் பெயரால் வந்துள்ளேன். நீங்களோ என்னை ஏற்றுக்கொள்வதில்லை. ஆனால் இன்னொருவன் தன் பெயராலே வருவானாகில் அவனை ஏற்றுக்கொள்வீர்கள். 44. ஒரே கடவுள் தரும் மகிமையை நாடாது ஒருவருக்கொருவர் தரும் மகிமையைத் தேடிக் கொள்கிறீர்களே. நீங்கள் எப்படி விசுவசிக்கக் கூடும்?

யாத்திரை யாகமம் 3. 13 மோயீசன் கடவுளை நோக்கி: இதோ நான் இஸ்ரயேல் மக்களிடம் போய்: உங்கள் முன்னோரின் கடவுள் என்னை உங்களிடம் அனுப்பியிருக்கிறார் என்று நான் சொல்லும் போது அவர்கள்: அவருடைய பெயர் என்ன என்று கேட்டால் நான் அவர்களுக்கு என்ன பதில் சொல்வேன் என்றான். 14. கடவுள் மோயிசனை நோக்கி: இருக்கிறவர் நாமே. (அதனால்) நீ இஸ்ரயேல் மக்களிடம் போய்: இருக்கிறவர் என்னை உங்களிடம் அனுப்பினார் என்று சொல்லுவாய் என்றார்.

கடவுளைப் பிரிந்த மனிதனைக் கடவுள் கை விடவில்லை. அவனுக்கு ஒழுக்க நெறியை அடிக்கடி நினைவூட்டினார். தானே வந்து வழிகாட்டினார்.

எபிரேயர் 1. 1. பற்பல முறையிலும் பல்வேறு வகையிலும் முற்காலத்தில் இறைவாக்கினர் வழியாக நம் முன்னோரிடம் பேசிய கடவுள் 2. நாம் வாழும் இவ்விறுதிநாட்களில் நம்மிடம் தம் மகனின் வாயிலாகவே பேசியுள்ளார். இவரை எல்லாவற்றிற்கும் உரிமையாளராக்கினார். இவர்

வழியாகவே உலகங்களையெல்லாம் படைத்தார். 3. கடவுளுடைய மாட்சியின் சுடரொளியாகவும் அவருடைய உள்ளியல்பின் சாயலாகவும் விளங்குமிவர் தம்முடைய வல்லமைமிக்க வார்த்தையால் எல்லாவற்றையும் தாங்கிவருகிறார், மக்களைப்பாவத்தினின்று தூய்மைப்படுத்திய பின்னர் உன்னதங்களில் மகத்துவமிக்கவரின் வலப்புறத்தில் அமர்ந்துள்ளார்.

ஆதி. 17. 1. ஆண்டவர் அபிராமுக்குத் தோன்றி! நாம் எல்லாம் வல்ல கடவுள். நீ நமக்குமுன் நடந்து உத்தமனாயிரு, 2. நாம் நமக்குமுனக்குமிடையே ஓர் உடன்படிக்கை செய்து உன்னை மிகுதியாய்ப் பெருகச் செய்வோமென்றார். 3. அபிராம் முகம்குப்புற விழுந்து தொழுதான். 4. அப்பொழுது கடவுள் அவனைப் பார்த்து; நாம் சுயம்பு. இதோ நம் உடன்படிக்கை உன்னுடனிருக்கும். நீ திரளான மக்களுக்குத் தந்தையாவாய். இன்றுமுதலுன்பெயர் அபிராம் அன்று. ஆபிரகாம் என்றே அழைக்கப்படுவாய், ஏனென்றால் அநேகமக்களுக்கு உன்னைத்தந்தையாக ஏற்படுத்தினோம்.

யாத்திரை. 20. 2. எகிப்து நாட்டிலிருந்தும் அடிமை வாழ்வினின்றும் உன்னை விடுவித்த ஆண்டவராகிய நாமே உன் கடவுள். 3. நமக்குமுன்பாக வேறே தேவர்களை நீ கொண்டிராதிருப்பாயாக, மேலேவானத்திலும் கீழே பூமியிலும், பூமியின் கீழுள்ள தண்ணீரிலும் உள்ளவைகளுக்கு ஒப்பான ஒரு உருவத்தையேனும் யாதொரு விக்கிரகத்தையேனும் உனக்கு நீ உண்டாக்கிக்கொள்ள வேண்டாம். 5. அவைகளை வணங்கித் தொழவும் வேண்டாம். உன் கடவுளாகிய ஆண்டவராய்இருக்கிற நாம் வல்லவரும் எரிச்சல் உள்ளவருமாய் இருக்கிறோம்; நம்மைப் பகைக்கிறவர்களைக் குறித்து, தந்தையரின் அக்கிரமத்தைப் பிள்ளைகளிடம் மூன்றும் நான்காம் தலைமுறைவரை விசாரித்து வருகிறவராய் இருக்கிறோம். 6. நம்மிடம் அன்புகூர்ந்து நம் கட்டளைகளைக் கைக்கொண்டு ஒழுகி வருகிறவர்களுக்கோ ஆயிரமாயிரந்தடவையும் தயவு காட்டுவோம்.

7. உன் கடவுளாகிய ஆண்டவரின் திருப்பெயரை வீணாய்ச் சொல்ல வேண்டாம். ஏனெனில், ஆண்டவர் தம்முடைய பெயரை வீணில் சொல்பவனைத் தண்டியாமல் விடமாட்டார்.

8. ஓய்வுநாளைப் பரிசுத்தமாய்க் கொண்டாட நினைவு கூர்வாயாக. 9. ஆறு நாளும் நீ வேலை செய்து உன் தொழிலுக்கடுத்த காரியங்களை எல்லாம் நடத்துவாயாக. 10. ஏழாம் நாளோ உன் கடவுளாகிய ஆண்டவரின் ஓய்வு நாளாயிருப்பதனால் அன்று நீயாவது உன் மகன் மகளாவது உன்வேலைக்காரன் வேலைக்காரியாவது உன் மிருகங்களாவது அல்லது உன் வாயில்களில் இருக்கிற அந்நியனாவது யாதொருவேலையும் செய்ய வேண்டாம். 11. ஏனெனில் ஆண்டவர் ஆறு நாளில் விண்ணையும் மண்ணையும் அவற்றிலுள்ள அனைத்தையும் படைத்து, ஏழாம் நாளிலே ஓய்வு கொண்டமையால் ஆண்டவர் ஓய்வுநாளை ஆசீர்வதித்துப் பரிசுத்தமாக்கினார்.

*12.* உன் கடவுளாகிய ஆண்டவர் உனக்குக் கொடுக்கப் போகிற நாட்டிலே நீ நெடுநாள் வாழும் பொருட்டு உன் தந்தையையும் தாயை யும் மதித்து நடப்பாயாக.

*13.* கொலை செய்யாதிருப்பாயாக.

*14.* விபசாரம் செய்யாதிருப்பாயாக.

*15.* களவு செய்யாதிருப்பாயாக.

*16.* உன் அயலானுக்கு விரோதமாய் பொய்ச்சாட்சி சொல்லா திருப்பாயாக.

*17.* உன் அயலான் வீட்டை விரும்பாதே. அவனுடைய மனை வியையாவது வேலைக்காரனையாவது வேலைக்காரியையாவது மாட்டையா வது கழுதையையாவது மேலும் அவனுக்குக்கிடைத்த யாதொன்றையா வது விரும்பாதிருப்பாயாக.

மாற்கு. *10. 33.* இதோ! யெருசலேமுக்குப் போகிறோம். மனுமகன் தலைமைக் குருக்களிடமும் மறைநூலறிஞரிடமும் கையளிக்கப்படுவார். அவர்கள் அவருக்குத் கொலைத்தீர்ப்பிட்டு, அவரைப் புறவினத்தாரிடம் கையளிப்பர். *34.* அவர்கள் அவரை எள்ளிநகையாடி, துப்பி, சாட்டை யால் அடித்து, கொல்லுவார்கள். அவரோ மூன்று நாளுக்குப்பின் உயிர்த் தெழுவார்.

*16. 15.* உலகெங்கும் போய் படைப்பிற்கெல்லாம் நற்செய்தியினை அறிவியுங்கள். *16.* விசுவசித்து ஞானஸ்நானம் பெறுபவன் மீட்புப் பெறுவான். விசுவசியாதவனுக்குத் தண்டனை கிடைக்கும்.

அருளப்பர். *6. 15.* நானே வானின்று இறங்கிவந்த உயிருள்ள உணவு. இதை யாராவது உண்டால் அவன் என்றுமே வாழ்வான்.

கடவுளுக்குச் சமன் எவருமில்லை. நாமறிந்த மற்றயாவும் அவரு டைய சிருட்டிகளே. ஆதலால் எல்லாவற்றிலும் அவருக்கே முதலிடம் உரியது.

சங்கீதம் *8. 1.* ஆண்டவரே, எம் ஆண்டவரே, உமது பெயர் உல கெங்கும் எவ்வளவு வியப்புக்குரியது! நீர் உம் மகிமையை வானங்களுக்கு மேலாக விளங்கச் செய்தீர். *2.* உம் எதிரிகள் பின்னடையுமாறு சிறுவர் களின் வாயும் உம்மைப் புகழ்ந்தேத்தச் செய்தீர். எதிரியையும் பகைவ னையும் ஒடுக்கவே இங்ஙனம் செய்தீர். *3.* உம்முடைய வானங்களை, உம் படைப்புகளை, நீர் அமைத்த நிலவை, விண்மீன்களைக் காணும் போது, *4.* மனிதனை நீர் ஒரு பொருட்டாக நினைக்க அவன் யார்? அவனைப் பற்றி அக்கறை கொள்ள அவன் யார் என்று சொல்லத் தோன்றுகிறது! *5.* வானதூதரைவிட அவனைச் சிறிது தாழ்ந்தவனாகப் படைத்தீர். மாண்பையும் பெருமையையும் அவனுக்கு முடியாகச் சூட்டினீர். *6.* உம்

படைப்புகள் அனைத்தின்மீதும் அவனுக்கு அதிகாரம் தந்தீர்; அனைத்தையும் அவனுக்குக் கீழ்ப்படுத்தினீர். 7. ஆடு மாடுகள், வயல்வெளியில் உலவும் விலங்குகளனைத்தும், அவனுக்குப் பணியச் செய்தீர்; 8. வானத்துப்பறவைகள், கடலில் வாழும் மீன்கள், அதில் நீந்தும் அனைத்தையும் அவனுக்குக் கீழ்ப்படுத்தினீர். 9. ஆண்டவரே, உலகெங்கும் உமது பெயர் எவ்வளவு வியப்புக்குரியது.

யாத்திரை 15. 11 ஆண்டவரே வல்லவர்களில் உமக்கு நிகரானவர் யார்? பரிசுத்ததனத்தில் உம்மைப்போல இருக்கிறவர் யார்? மகத்துவமுள்ளவரும் பயங்கரத்துக்குரியவரும் புகழ்ச்சிக்குரியவரும் அற்புதங்களைச் செய்கிறவருமான உமக்கு ஒப்பானவர் எவருமுண்டோ?

33. 18. மோயீசன்: உம்முடைய மாட்சியை எனக்குக் காண்பித்தருளுமென்றார். 19. அப்பொழுது அவர்: நாம் உனக்கு முழுநன்மையைக் காண்பிப்போம். அன்றியும் நாம் உனக்குமுன் ஆண்டவருடைய (திருப்) பெயரைக் கூறுவோம். எவனிடம் பிரசன்னமாயிருப்போமோ அவன் மட்டிரங்குவோம். எவன்மீது இரக்கமாயிருக்கத் திருவுளங்கொள்வோமோ அவன் மேலிரக்கம்வைப்போம் என்றருளினர். 20. மீளவும்: ஆனால் ஒரு மனிதனும் நம்மைக் கண்டபின் உயிரோடிருக்க இயலாதாகையால் நீ நம்முடைய முகத்தைப் பார்க்கமாட்டாய் என்றார். 34. 6. மோயீசன் அவரை நோக்கி: எல்லா அதிகாரமும் கொண்டுள்ள ஆண்டவராகிய கடவுளே! அருள் நோக்கும் தயவும் பொறுமையும் அளவில்லாத இரக்கமும் பொருந்திய கடவுளே, 7. ஆயிரம் படைப்புகளுக்கும் இரக்கம் புரிகிறவரே, அக்கிரமங்களையும் பாதகங்களையும் பாவங்களையும் போக்குபவரே, உமது முன்னிலையில் தனது சுபாவ இயல்பினால் மாசில்லாதவன் ஒருவனுமில்லை. தந்தையர் செய்த அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்திலும் மூன்றும் நாலாந் தலைமுறைவரை தண்டிக்கிறவரே, என்று கூறி 8. மோயீசன் விரைந்து பணிந்து குப்புறவிழுந்து தொழுது: 9. ஆண்டவரே உமது முன்னிலையில் அடியேனுக்கு அருள் கிடைத்ததாயின் (இம் மக்கள் வணங்காக் கழுத்துடையவர்களாகையால்) நீர் எங்களுடன் எழுந்தருளவும் எங்களக்கிரமங்களையும் பாவங்களையும் போக்கவும் அடியோர்களையுரிமையாக்கிக் கொள்ளவும் வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறேன் என்றார்.

யோபு 11. 7. கடவுளின் ஆழ்ந்த பொருட்களை உம்மாலறியக்கூடுமோ! எல்லாம் வல்லவரின் எல்லையைக்காண உம்மாலாகுமோ! 8. அது வானத்தைவிட உயர்ந்தது. - நீர் என்ன செய்வீர்? பாதாளத்திலும் ஆழமானது. - நீர் எவ்வாறு அறியமுடியும்? 9. அதனளவு மானிலத்தைவிட நீளமானது; கடற்பரப்பிலுமகா அகலமானது. 10. அவர் கடந்துபோனாலும் சிறையிலடைத்தாலும் நீதிமன்றத்துக்கழைத்தாலும் அவரைத்தடுப்பவன் யார்? 11. ஏனென்றால் மனிதர் அற்பமென அவரறிவார்; அவனுடைய அக்கிரமத்தைக் கண்டும் அவர் கவனியாதிருப்பாரோ? 12.

அறிவிலி மனிதன் தன் அகந்தையில் நிமிர்கிறான். காட்டுக்கழுதையின் குட்டிபோல யதேச்சைப் பிறப்பென நினைக்கிறான்.

வாழ்வெனும் கடலைக் கடவுள் துணையெனும் புணை கொண்டேகடக்கவேணும்.

சங்கீதம் 22. 1. என் ஆயன் ஆண்டவர் எனக்கென்ன குறைவு. 6. கருணையும் அருளும் என்னைத் தொடரும். ஆண்டவர் தம்மில்லத்தில் நான் குடியிருப்பேன் ஊழி ஊழிக்காலம் குடியிருப்பேன்.

32. 11 ஆண்டவருடைய திட்டங்கள் என்றென்றும் நிலைத்திருக்கும்; அவருடைய எண்ணங்கள் தலைமுறை தலைமுறையாய் நீடித்திருக்கும். 12. ஆண்டவரைத் தம் கடவுளாகக்கொள்ளும் மக்களின்ம் பேறுபெற்றது. தமது உரிமைப்பொருளாக அவர் தேர்ந்தெடுத்த மக்கள் பேறுபெற்றவர்கள்.

ஆதி 2. 15. ஆண்டவராகிய கடவுள் மனிதனை அழைத்து அவ்வின்ப வனத்தை உழுது பேணும்படி அவனை அங்கு விட்டுவைத்தார். 16. அன்றியுமவனை நோக்கிக் கட்டளையிட்டு, இவ்வின்பவனத்திலுள்ள எல்லாவித மரங்களின் கனிகளையும் நீ உண்ணலாம்; 17. ஆனால் நன்மை தீமை அறியும் மரத்தின் கனியை உண்ணாதே; ஏனெனில் அதை நீ உண்ணும் நாளிலே சாகவே சாவாய் என்று சொன்னார்.

பொறியை நிறுவுவது கோளை நினைவுக்குக் கொணரவே. மனித அறிவு இறைவனை வணங்க இயற்கையே அவனுக்கு ஞாபகமாகிறது.

1 கொரிந்தியர் 11. 23. ... ஆண்டவராகிய யேசு தாம் காட்டிக் கொடுக்கப்பட்ட அந்த இரவில் அப்பத்தை எடுத்து நன்றிகூறி அதைப் பிட்டு; 24. இது உங்களுக்காக அளிக்கப்படும் எனது உடல். இதை என் நினைவாகச் செய்யுங்கள் என்றார். 25. அவ்வாறே உணவு அருந்தியபின் கிண்ணத்தையுமெடுத்து: இக்கிண்ணம் எனது இரத்தத்தினாலாகும் புதிய உடன்படிக்கை. இதைப்பருகும் போதெல்லாம் என் நினைவாகச் செய்யுங்கள் என்றார். 26. எனவே நீங்கள் இந்த அப்பத்தை உண்டு கிண்ணத்திற் பருகும் போதெல்லாம் ஆண்டவர் வரும் வரையில் அவரது மரணத்தை அறிக்கையிடுகிறீர்கள்.

யோசுவா 24. 27. பின்னர் எல்லா மக்களையும் பார்த்து: இதோ இக்கல் ஆண்டவர் உங்களுக்குச் சொல்லியிருக்கிற எல்லாவார்த்தைகளையும் கேட்டிருக்கின்றது. நீங்கள் எப்போதாவது அவற்றை மறுத்து உங்கள் ஆண்டவராகிய கடவுளுக்கு எதிராகப் பொய் சொல்லத் துணிவீர்களேயானால் இக்கல் உங்கள் நடுவில் உண்மைக்குச் சான்றாக விளங்கும் என்றார்.

லூக்கா. 6. 36. உங்கள் தந்தை இரக்கமுள்ளவராய் இருப்பதுபோல் நீங்களும் இரக்கமுள்ளவராய் இருங்கள். 37. தீர்ப்பிடாதீர்கள், நீங்களும் தீர்ப்புக்கு உள்ளாகமாட்டீர்கள். கண்டனம் செய்யாதீர்கள், கண்டனம் பெறமாட்டீர்கள். 38. மன்னியுங்கள், மன்னிக்கப்படுவீர்கள். கொடுங்கள் உங்களுக்குக் கொடுக்கப்படும். அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்ருய் அளந்து உங்கள் மடியில் போடுவார்கள். ஏனெனில் எந்த அளவையால் அளப்பீர்களோ அதே அளவையால் உங்களுக்கும் அளக்கப்படும்.

சிராக். 15. 14. கடவுள் ஆதியில் மனிதனைப் படைத்து அவன் தன் விருப்பத்தின்படியே நடக்க உரிமை கொடுத்தார். 15. ஆனுல், தம் கட்டளைகளையும் சட்டங்களையும் கொடுத்தார். 16. கட்டளைகளைக் கடைப்பிடிக்கவும் அவருக்கு நித்தியத்துக்கும் விருப்பமாய் நடக்கவும் உனக்கு மனமுண்டானுல் அவைகள் உன்னைக் காப்பாற்றும். 17. அவர் நீரும் நெருப்பும் உன் முன்பாக வைத்தார். எதுவேண்டுமோ உன்கையை நீட்டு. 18. மனிதனுக்கு முன்பாக வாழ்வும் சாவும், நன்மையும் தீமையுமுண்டு. அவன் எதைத் தேர்ந்து கொள்வானே அதை அடைவான். 19. ஏனென்ருல், கடவுளுடைய ஞானம் மகத்தானது. அதிகாரத்தில் வல்லமையுள்ளது. அவர் இடைவிடாமல் அனைவரையும் கண்டறிகிருர். 20. ஆண்டவருடைய கண்கள் அவருக்கு அஞ்சி நடப்பவர்கள்மீது இருக்கின்றன. மனிதனுடைய எல்லாச் செயல்களையும் அவர் அறிகிருர். 21. அக்கிரமமாய் நடக்க அவர் எவனுக்கும் கற்பித்ததில்லை; பாவம் செய்யும்படி எவருக்கும் உத்தரவு கொடுத்ததில்லை. 22. ஏனென்ருல், பிரமாணிக்கமற்றவர்களும் பயனற்றவர்களுமான பிள்ளைகளின் கூட்டத்தை அவர் விரும்புவதில்லை.

## அதிகாரம் 2. வான் சிறப்பு.

* * * * * * * * *

பிறவிப் பெருங் கடல் நீந்தியவர் அடைவது வீடு. அதுவே வான். வான் என்ருற் சிறப்பு. அறம் சிறப்பீனும் (31) சிறப் பெனும் செம் பொருள் (358) என்பதை விளக்குகையிற் பரிமேலழகர் எல்லாப் பேற்றிலும் சிறந்ததாகையால், எல்லாப் பொருளிலும் சிறந்ததாதலால் வீடு சிறப்பெனப் பட்டதென்று படிப்பிக்கிருர். எனவே, வீடுநான் வான், அதாவது உயர்ந்தது. சிறப்பு அதாவது ஒப்பிலாச் சிறப்புடையது. அச் சிறப்பின் காரணம் கடவுள். ஏனெனில் கடவுள் வாழும் இடமே வீடு. அதுவே நாமும் வாழப் போகும் வீடு. அங்கு யார் உளர், அவர் எப்படிப்பட்டவர் என்று முதலதிகாரத்தில் விளக்கினுர். அதின்பின் என்ன உதவியால் அவரை அடைவதென்று சொல்ல முயலுகிருர்.

கடவுளைக் கருணைக் கடலென்கிருேம். நீர் அவருடைய அருளுக்கு அடையாளம், ஒப்பனை என்பது மரபு. மனிதன் உயிர்வாழக் கடவுள் தந்த பிரதான உதவிகளைப் பஞ்ச பூதிய மென்கிருேம். வான் இங்கு கருத்திலேதான் உதவுகிறது. மற்றநான்கும் பொருளிலே உணவாகின்றன. மண் இவற்றிலே பிரதானமானது. எங்கள் உறை விடமும் தாபரமும் அதுதான். அனல் அடுத்து வருகிறது. சூடும் வெளிச்சமும் இல்லையேல் உயிர் என்றபேச்சேகிடையாது. இவற்றைத் தரும் கதிரவன் அதனுலேதான் அருணன் என்று, ஏன் கடவுளே என்று பலரால் வணங்கப்படுகிருன். இதுவே ருத்ர-சிவ உருவிற் பெரும்பகுதியாகும். அதன்பின், அனிலம் இன்றி வெகுநேரம் வாழமுடியாது. உயிர் என்றபதமே காற்றைச் சுவாசிப்பதென்று பொருள்படும். கடைசியானதே நீர். ஆயினும் மனிதனின் அற்ப அறிவின் காரணமாகப்போலும் நீரே நமக்கு அதிக கவற்சியான பொருள். அதனுலன்றே நாராயணனுக்கு திருமாலவதாரமென்று இந்துக்களிடையே பெரிய செல்வாக்கு.

இதன் காரணம் நீரின் குறும்புத்தனமென்றே சொல்லவேணும். கண்ணன் கதையைக் கவனிக்கவும். வான் அதாவது கடவுள் வாழுமிடம் நமது பொறிபுலன்களால் அல்லப் புத்தியாலேதான் கிரகிக்க வேண்டியது. நாம் வழமையாக வான் என்பது வெறுமையான மேல் வெளியையே, அதிலேதான் கோள்கள் கிரகங்கள் வெள்ளிகள் உலாவிவருகின்றன. அதின் கீழ்ப்பகுதியான வானம் காற்றும் மேகமும் உலாவுமிடம். மண் எமக்கு எங்கும் எப்போதும் கிடைக்கிறது. ஒளியும் அனலும் போதியளவு இலவசமாக அருணன் அளிக்கிருன். காற்றுக்கும் ஒருபோதும் குறையில்லை. அளவுக்குமிஞ்சி அடித்தால் மட்டுமே நாமதைக் கவனிக்கிருேம். நீரின் கதையோ வேறு. அது சிறுபிள்ளைபோல மனிதர் கவனத்தை வலிந்து கொண்டேயிருக்கிறது. அதுவும் இன்றியமையாததுதான். ஆனுல் அதிகம் விலையையுயர்த்துவது. வரும் வராது, கூடக்குறைய வரும், நல்லதாய்ப் பொல்லாததாய் வரும். எனவே மனிதர் பயம், அதனுற் கவனம் பெரிது. குழந்தை தன்தாய் தினமும் கொடுக்கும் பாலையோ உணவையோ உதவியையோ பற்றிப் பேசாது. அந்நிய

ரொருவரோ ஒருநாளளித்த இனிப்பைப்பற்றிப் பலகாலும் பிரஸ்தாபிக்கும். அது போலவே மனிதரின் போக்கும்.

எனவேதான் கடவுளின் கருணைக்கு உவமையாக வள்ளுவர் நீரைத் தெரிந்தார். எங்கள் அளவுக்கு இறங்கிவந்து உபதேசம் செய்வதல்லவா அவருடைய குறிக்கோள். சடஉலகிலே நீர் உதவுகிற சில உதாரணங்களைக் காட்டி இது போல இன்னுமதிகம் கடவுள்கிருபை உதவுகிறது, அதற்குத்தக மனிதா நீயும் ஒழுகுவதே வாழும்விதம் என்று வற்புறுத்துகிறார்.

அதிகாரத் தலைப்பிற்போலவே 11ம் 20ம் குறள்களில் வான் என்பது மேல்மண்டலம் அல்லது கடவுள் வாழும் வீட்டைக்குறிக்கும். மற்றைய வானம், விண், புயல், எழிலி, துளி, மழை எல்லாம் ஆகுபெயராக நீரைக் குறிக்கின்றன. இரண்டாமதிகாரத்தின் சாரமிது:-

11. வான் (வீடு) நித்திய பேரின்ப மென்றறிக.
12. மழை (நீர்) துப்பாயதுப்பு.
13. விண் (நீர்) பொய்ப்பின் பசி.
14. புயல் (நீர்) குன்றின் உழார்.
15. மழை (நீர்) கொடுக்கும் எடுக்கும்.
16. துளி (நீர்) அல்லால் புல் அரிது.
17. எழிலி (நீர்) நல்காது கடல் குன்றும்.
18. வானம் (நீர்) வறக்கின் பூசனை செல்லாது;
19. வானம் (நீர்) வழங்காது தானந்தவந்தங்கா.
20. வான் (வீடு) இன்றி ஒழுக்கம் அமையாது.

இயற்கை ஒழுங்குக்கு நீர் ஆக்கமாவதுபோல மனித ஒழுக்க சீவியத்துக்கு வான் அருள் உதவுகிறது. ஒழுக்கம் அல்லது அறத்தின் மூலமே வான் அமிழ்தம் அதாவது நித்திய பேரின்பம் அடையவேண்டுமென்று விரித்துரைக்கிறார்.

11. வானின் றுலகம் வழங்கி வருதலாற்
றானமிழ்த மென்றுணரற் பாற்று.

வான் நின்று உலகம் வழங்கிவருதலால் -- மேல் மண்டலங்களில் வாழ்கின்ற கடவுளின் சக்தியாலே உலக இயக்கமும் வாழ்வும் நிலைபெற்று வருதலால். தான் அமிழ்தம் என்று உணரல் பாற்று -- அந்த மேலுலகமே அழியாத இன்பம் தருவதென அறிவது கடமை.

வான் -- மேலேயுள்ளது. கடவுளின் உறைவிடம் மேல் மண்டலங்கள் என்பது இலக்கியமரபு. மேல் என்பது உயர்வையும்; பன்மை மரியாதையையும் காட்டும்.

நின்று -- கடவுள் மாறுத குறையாத அறிவு ஆற்றல் உடையவர். அவருடைய சக்தியே யாவையும் இயக்கிவருகிறதென்று காட்டுகிறது.

உலகம் -- படைப்பெல்லாவற்றையும் குறிப்பாக நாம் வாழும் பூவுலகையும் சுட்டும். உலகம் உலாவுதலிலிருந்துவரும் சொல். இயற்கையையும் சிறப்பாக உயிர்வாழ்வதையும் கருதும்.

வழங்கு -- வாழ்+இயங்கு. நடைபெறுதல்

வருதல் -- அசைவைக் குறிப்பது. இயற்கையில் யாவும் வட்டமாகச் சுழன்றுவருகின்றன. பருவகாலச் சுழற்சி, தலைமுறைச் சுழற்சி வெளிப்படையானவை. நின்று என்ற வானின் மாறுத நிலைக்கு எதிராக உலகம் யாவும் மாறிவருவது கவனத்துக்குரியது.

தான் -- வான்தான் என்று வற்புறுத்துவது.

அமிழ்தம் -- அம்+இழ் -- அழகும் இனிமையுமுடையது.

அ+ம்ருத்த -- சாவு இல்லாதது. அதனுலிது தேவருணவென்று புராணங்களிலே புகழப்படுகிறது. நித்திய வாழ்வும் பேரின்பமும் தருவது. வீடு பெறும் சாவாமூவா மருந்து.

பாற்று -- பாத்து, பகுத்து -- நியாய புத்தியால் அறியவேண்டிய உண்மை. பங்கு என்பதுமதுவே.

வான் என்ற பதத்தை ஆகுபெயராக்கி மழைக்கு ஒதுக்குவது வழமை. அது சிறப்பில்லை. மேலிருந்துவரும் ஒளியும் கனலும், காற்றும் மழையும் பூமியில் உயிர்வாழ்வுக்கு இன்றியமையாதவை. இவையெல்லாம் பகவனின் அருட்கொடைகளே. அதேபோல் மனிதபுத்தியும் ஞானசக்தியும் இயங்குவது அவன்தரும் அருளே என்பதை உணரவேண்டும். ''அவனன்றி அணுவும் அசையாது.''

இங்கு இயற்கையுலகைச் சுட்டிக்காட்டி அதிலே மயங்கி மாயாது அதை இயக்கும் இறைவன் அழைக்கும் அருள் உலகமே அவசியமானது, நிலையான இன்பம் என உணர்த்துகிறுர்.

12. துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉ மழை.

துப்பார்க்கு துப்பு ஆய துப்பு ஆக்கி -- பசியினுல் உணவை விரும்புவோருக்குச் சத்தும் துப்புரவுமுள்ள சுவையான உணவை விளைவிக்கவும் சமைக்கவும் செய்து. துப்பார்க்கு துப்பு ஆயதும் மழை -- அதை உண்பவர்க்கு பானமும் ஆவது மழைநீர்.

இச்செய்யுள் தமிழ்மொழியின் பொருள் வளத்துக்கும் திருவள்ளுவரின் தகை சான்ற சொல்லாட்சிக்கும் சிறந்த ஒரு எடுத்துக்காட்டு.

துப்பு -- து எனும் மூலத்திலிருந்து துப், துய், துவ், போன்ற அடிகள் வழியாகப் பெரிய பொருட் பரப்புடையுடைய பதம். பசி, போசனம், பானம், பொலிவு, சுவைத்தல், அருந்தல், நுகர்தல் எனவரும்.

ஆக்கி -- உணவுப் பொருட்களை விளைவிக்க மட்டுமல்ல அவற்றைச் சமைக்கவும் நன்னீர் அவசியம்.

ஆயதூஉம் என்பதிலுள்ள அளபெடை இன்னும் பல நன்மைகள் உண்டென்பதை நுதலும்.

மழை -- வான் மேகத்திலிருந்து பூமிமேற் சொரியும் நன்னீர். மழ -- மென்மை, தண்மை, வண்மை குறிப்பது.

உயிர்களின் அடிப்படைத்தேவை பசி தாகந் தீர்ப்பதே. இதைத் திறம்படச் செய்வதால் மழைநீர் சீவாமிழ்தமாகிறது. இதொரு வெளிப் படையான உண்மை. எனினும் இதைச் சுட்டிக்காட்டுவதால் மனித இனத்தின் பொதுவான சிந்தனையற்ற போக்கை வள்ளுவர் கண்டிக்கிறார். இதை மட்டுமல்ல இதன் மூலம் நியாயித்துக் காரணரான கடவுளின் கருணையை வியந்து நன்றி நவில வேண்டும். அதோடமையாது அந்த மேகம் தான் பெற்றுக்கொண்ட நீரை உலகுக்கு இலவசமாக அளிப்பது போல நாமும் இயற்கையிலே பெற்றுக் கொண்ட கொடைகளை அய லார்க்குப் பகிர்ந்தளிக்க முயலவேண்டும்.

இயற்கையின் வாரியான மழை கடவுளின் கருணைக்கு உவமை, பகுத்தறியும் மனிதரின் வாழ்வுக்கு மாதிரி.

13. விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்
துண்ணின் றுடற்றும் பசி.

விண் நின்று பொய்ப்பின் -- ஆகாயத்திலிருந்து வரும் மழை தாம தித்துப் பெய்தாலோ அல்லது பெய்யாது மறுத்தாலோ. விரிநீர் வியன் உலகத்து -- பரந்த கடல் சூழ்ந்த அதிசயமான இவ்வுலகத்திலே, பசி உள்நின்று உடற்றும் -- உதரத்தீ நிலைபெற்று உயிர்களை வருத்தும்.

விண் -- ஆகாயம், அதிலிருந்து வரும் மழை.

நின்று -- மழைமறுப்பது மட்டுமன்றித் தாமதித்தோ காலம் மாறியோ பெய்தாலும் விளைபொருட்கள் சேதமாகும்.

பொய்த்தல் -- பிழைத்தல், மறுத்தல், பிள், பொள், பொய்

விரிநீர் -- பரந்த நீர்த்திரளே கடல். அதின் உவர் நீர் விளைவுக்கோ, உணவுக்கோ, பானத்துக்கோ உதவாது.

வியன் -- விசாலமான, வியப்புக்குரியது.

உள் -- உலகத்துள் என்றோ உள்நின்று என்றோ கூட்டலாம். பொருள் அதிகம் மாறாது.

உடற்றல் -- உடல்+அற்றல் -- வருத்தல், அமிழ்த்தல்.

பசி -- உத்தரத்தீ வெறுமையை உணர்த்துவது, தேவை தெரிவிப்பது, உணவு தேடி இழுப்பது. பசியிலே பலவகையுண்டு. பாசங்களும் ஒருவித பசியே. பசிதாகம் மூலபாசமாதலால் மற்றெல்லாவற்றையும் விரட்டிவி டும். ''பசிவரப் பத்தும் பறந்துபோம்.''

உடல் வாழ்வுக்கு நீர் போல உயிர்வாழ்வுக்கு இறைஅருள் அவசியம். ஆன்மபசியைத் திருப்திப்படுத்தாவிடின் உயிர் நலிந்துஅழிந்து போம். அதனுலேயே பதிமேற் பாசங்கொள்ளும் ஆன்மாவைப் பசு என்பர். கடலிலே நீர் நிறைய இருந்தாலும் அது பாவனைக்கு உதவாதது போல மனிதன் கல்வி செல்வம் பெருமை புகழ் பெற்றுலும் இறை அருளை அடையாவிடின் அழிவுதான். எனவே, கடவுள் தந்த கொடைகளை மதிக்கவேண்டும். அகந்தைகொள்ளாது நாம் யாவரும் அவன் முன்னே யாசகர், சமனுனவர் என்ற உணர்ச்சியோடு வாழ்வது அவசியம்.

14. ஏரி னுழாஅ ருழவர் புயலென்னும்
வாரி வழங்குன்றிக் கால்.

புயல் என்னும் வாரி வளம் குன்றிக் கால் -- காற்றலைக்கும் மேகம் தரும் மழை எனும் வருவாய் தனது செல்வம் குறைந்த காலத்தில். உழவர் ஏரின் உழார் -- வேளாளர் கலப்பை கொண்டு வயலை உழமாட்டார்.

புயல் -- பெலனுன காற்று. காற்றின் அமுக்கவித்தியாசத்தாலேதான் மேகம் மாற்றமடைந்து மின்னி இடித்துப் பெருமழை பெய்கிறது. அதனுல் வரும் வெள்ளமே வாரி.

வளம் -- நிறை அளவு, அழகு. நிலம் குளிரப் பெய்தாலேதான் உழலாமென்பதால் புயலென்னும் வாரி என்றுர்.

குன்றல் -- குறைதல், கெடுதல். குன்று—குறைந்த மலை.

கால் -- காலம் இடம்,

உழவு -- உட்புகுத்திப் பிளத்தல். உழல் -- சுழலல். உழைப்பு -- வருந்துதல். உழவு பூமியைப் பண்செய்து உணவு பெறுவதனுல் மனித வாழ்வுக்கு அடிப்படையான தொழில். அதுவே உண்மையான உழைப்பு. மற்றைய கைத்தொழில் கலைத்தொழில் யாவும் அதை அண்டி அதின் பின்னரே வருவன (1033).

ஏர் -- கலப்பை, அழகு. உழவு தொழிலே அழகான தொழிலாக வள்ளுவர் காலத்திலே கருதப்பட்டது. ஏர் என்ற பதம் ஆயுதப் பொதுவாயிருந்தது. சொல்லேர், வில்லேர், என்பன அதற்கிருந்த மதிப்பைக் காட்டும். ஆரியர் என்ற சொல்லும் உழவரையே குறித்தது. மத்திய ஆசியாவிலிருந்து படையெடுத்து வந்து ஆதிக்கத்தைக் கைப்பற்றிய அந்நியர் அப்பெயரைத் தமக்கே சூடிக்கொண்டனர். பின்னர் நாலு வருணங்களை உண்டாக்கி உழவரைச் சூத்திரரென்று ஒதுக்கினர். வள்ளுவரிடம் இந்தப் பாகுபாடு கிடையாது.

உழாஅர் -- அளபெடையில் மழையின்றித் தொழில் செய்ய இயலாமை ஒலிக்கின்றது.

உணவு தேடும் முயற்சிக்கு அவசியமான மழை, மனித பண்பாட்டையும் ஆன்மீக வளர்ச்சியையும் ஊக்குவிக்கிறது. நீர் வளத்தாற்

பொருளாதாரம் மிகுந்து அதன் மூலமே நாகரிகங்கள் தோன்றுகின்றன. வரட்சியுடனே பஞ்சம் படை கொள்ளை நோய்களே பரவுகின்றன. அழிவு தொடருகிறது.

மண்ணைப் பண்செய்வதுபோல மனிதசீவியத்தையும் பண்பாக்கவேணும், அதுவேமனித இலட்சியத்தை அடைய உதவுவது. நீர் இலவசமாகக் கிடைப்பது, ஆனல் அறிவோ கல்விமூலம் வருந்திஉழைக்க வேண்டியது. ஆற்றல் பெறவோ இன்னும் பலகால் முயலவேண்டும். இந்த முயற்சியே முடிவில்லாதது. ஆயினும் தேவஆவியின் புயல்வாரி கூடினல் இலகுவாக முடியும்.

15. கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்மற் றுங்கே
எடுப்பதூஉ மெல்லா மழை.

கெடுப்பதும் -- தவறிப் பெய்து நட்டம் வருவிப்பதும். மற்று ஆங்கே கெட்டார்க்கு சார்வாய் எடுப்பதும் -- அதற்கு மாருக அதே சூழலில் நலிந்தவர்க்கு உதவியாக வந்து உயர்த்துவதும். எல்லாம் மழை -- இது போன்று பல செய்ய வல்லது மழை.

மற்று -- வினை மாற்று. எடு -- எழு+து -- உயர்த்து.

கெடு -- அழி. சார்வு -- பக்கம், ஆதரவு,

மழை நன்மையும் தின்மையும் வருவிக்கக் கூடியது. இதனல் வரும் லாப நட்டம் காலம், இடம், சூழல் பொறுத்தே கிடைக்கிறது. அது முகமன் பாராது எல்லார்மீதும் பொழிவதால் மாறி மாறியே பலரும் பலன் அடைகின்றனர். இவ்விபரம் வெயில் காற்றுக்கும் பொருந்தும்.

கடவுள் மனிதனை நடத்தும் விதத்தை இந்த ஒப்பனை விளக்குகிறது. அவர் முன் மனிதர் எல்லோரும் சமன். ஏன், தாவரம் மிருகத்தையுமே அவர் பரிவோடு பார்க்கிருர். மனிதன் தன்னைப் பக்குவப் படுத்துவதன் மூலமே அவனுடைய அனுக்கிரகங்களைப் பெற்று அனுபவிக்க முடியும். ஆதலாற்தான் அவர் நல்லவருக்கு நல்லவராகவும் துட்டருக்கு துட்டராகவும் விளங்குகிருர் என்கிறேம்.

மனிதரோ அதற்கு நேர்மாருக நடக்கின்றனர். அந்த அநீதியே உலகில் நிலவும் அமைதியீனத்துக்குக் காரணம். இயற்கை ஒழுங்கை அவதானித்தறிந்து சமாதானம் செய்வது மனிதனின் கடமை. ஒவ்வொருவருக்கும் தேவை, தகுதிப்படி உரியது கொடுபடவேண்டும்.

மழை இயற்கையின் எசமான் வைத்த ஒழுங்குப்படி செய்கிறது. அதை மனிதன் சிலவேளை குழப்பமுடியும். அதனுல் அதற்குக் குறையில்லை. சுயாதீன சித்தமுள்ள மனிதனே தனது செயல்களுக்குப் பொறுப்பாளி. தனது பகுத்தறிவின் ஒளி, இறைவன் வைத்த ஒழுங்கின் ஒலி, மனச்சாட்சி என்றே ஒருநாள் தவருது கண்டிக்கும் என்பதை மறக்கப் படாது. அறியாது செய்தாலும் அதைத்தவறென அறிந்தவுடனே திருத்த

முயல வேண்டும். இல்லையேல் வான்கருணை எம்மை எடுப்பதை விட்டுக் கெடுப்பதாகவே முடியும்.

16. விசும்பிற் றுளிவீழி னல்லான்மற் றாங்கே
பசும்புற் றலைகாண் பரிது.

விசும்பின் துளி வீழின் அல்லால் -- ஆகாயத்திலிருந்து நீர்த்துளி பெய்தாலொழிய. மற்று ஆங்கே பசும்புல் தலை காண்ப அரிது -- வேறு வகையாகப் பூமியிலே இளம் புல்லின் முளையைத்தானும் வளரச்செய்வது அருமை.

விசும்பின் துளி — ஆகாயத்திலே செறிந்த நீராவி குளிர்ந்து வரும் பனித்துளி. மழை என்பதிலும் பனி என்பதே பொருத்தமானது. பனி காலத்திலேதான் புல் துரிதமாக முளைப்பது கண்கூடு.

புல் — சிறிய ஓரறிவுயிர். அதற்குப் பனிபோதும். பெருமரங்களுக்கு எனில் மாரிமழை தேவைப்படும்.

மற்று — வினைமாற்று — மறுமுறையில், சிறிய புல்லுக்குத்தானும் குறைந்தது பனியாகிலும் தேவை.

புல் முதலான பலவித உயிரினங்களையும் கடவுள் கருணையொடு காப்பாற்றிவருவதைக் கவனித்தால் ஆறறிவுபடைத்த மனிதனை எவ்வாறு ஆதரிப்பார் என்பது தெரியும். கடவுளின் பராமரிப்பில் உணவளிக்கும் சுழற்சி அதிசயமானது. உண்டுவாழ்வதே இயற்கைமுறை. அதுவும் ஒரு உயிரை மற்றொன்று உண்டுகொல்கிறது அல்லது கொன்று உண்கிறது. அணுக்குண்டு வெடித்தபின்னரும் மண்ணுக்கு உயிரில்லையென்று எவர் தான் சாதிக்கமுடியும்? அணுவின் அதிசய இயக்கம் அதிலும் மேலான தாகவே தோன்றுகிறது. மண்ணும் புல்லும் மரமும் நுண்ணுயிரும் மிருகமும் பறவையும் மீனும் மனிதனும் ஒருவரையொருவர் மாமாறிக் கொன்று தின்று வளர்கின்றனர். இதையே மாறிமாறிப் பிறப்பதென லாம். இதற்கு வெளிச்சமும் வெப்பமும் நீரும் காற்றும் உதவிசெய்கின் றன. இயற்கையின் ஒழுங்குகளை மாற்ற முயலும் தவறுகளை இன்றைய விஞ்ஞான யுகத்திலே கண்கூடாகக் காண்கிறோம். அழிவு செய்தபின் அழுது விழுவது மனிதரின் மறு இயற்கையாகிவிட்டது. தவறைத் தவிர்ப்பதல்லவா பகுத்தறிவு.

துளியையோ புல்லையோ அணுவையோ வீணாக்காது பாவிக்க வேண்டியது மனிதனின் கடமை. கடவுள் இயற்கையிலே வைத்த ஒழுங்கை அறிந்து அதன்படி ஒழுகுவதே வாழ்வுக்குரியவழி. உயிர்களைப் பராமரித்து அனுபவிப்பதே முறை.

17. நெடுங்கடலுந் தன்னீர்மை குன்றுந் தடிந்தெழிலி
தானல்கா தாகி விடின்.

எழிலி தான் தடிந்து நல்காது ஆகிவிடின் — மேகம் தன்னையே குறைத்து நீரைக்கொடாது நின்றுவிட்டால். நெடும்கடலும் தன் நீர்மை குன்றும் — பெரும் பரப்பையுடைய கடல்தானும் தனது வளத்தை இழந்துவிடும்.

எழிலி — எழில் — அழகான மேகம், வெண்புகார்.

தடிந்து — குறைந்து. எழிலும் உருவும் இழந்து, திரண்டு, கறுத்து நீராகி.

நல்குதல் — உவந்து அளித்தல்.

தான் — மேகம் தன்னைக்குறைத்தே நீரைக் கொடுக்கிறது.

நீர்மை — தன்மை, இயல்பு. உயிர் வளங்களும் நீரின் அளவும்.

குன்றல் — குறைதல், கெடுதல்.

கடலும் — சிறப்பும்மை, தரைவளமும் அழியும் என்பதை உணர்த்தும்.

சிறிய புல் மட்டுமல்ல பெரிய கடலும் மழையைக் காத்திருக்கிறது. மேகத்துக்குக் காரணமான கடலே நீரளவு குறையாதிருக்க மழை வேண்டும். சுத்தசலம் சேராவிடில் அதின் ரசாயனப் பொருளளவு கூடி அங்கு வாழும் உயிரினங்கள் இறக்கும். மேலும், மழை வெள்ளம் தரையிலிருந்து அவற்றுக்குத்தேவையான உணவையும் வாரிக் கொண்டு வருகிறது.

கடவுள் சிறிது பெரிது பாராது எல்லாத்தையும் காக்கிருர். பூகோளப் பரப்பின் பெரும் பகுதியான கடல் தரையிலுமதிகம் திரவியங்களால் நிறைந்திருக்கிறது. எனினும் மழையின் உதவியையும் பெறுகிறது. இறையுதவியை எதிர்பார்த்து வாழ்வது வலியோருக்கும் கடனுகும், மமதை கொண்டால் அழிவே தொடரும்.

மேகத்தின் தியாகச்செயல் கடவுளின் கருணைக்கு உவமை. ஆனல் அது எப்படி எங்கு நடந்தது என்பது ஆராயவேண்டியது. வேண்டுதல் வேண்டாமையிலானுக்குத் தியாகம் பொருந்தாது. அவன் மனுவுருவில் வந்து தானே தன்னைத் தடிய முடியும்,

மறுசார் மனிதன் கடவுளின் பொருள். அவன் தியாகியாக வாழ்வது கடமை, சமுதாயமே அவனே உருவாக்குகிறது. அதனல், அதனுடைய உயர்வு அவனுக்கு உயர்வு என உணர்ந்து உழைக்கவேனும், உதவ வேண்டும்.

18. சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானேர்க்கு மீண்டு.

வானம் வறக்கும் ஏல் — வானத்தில் மழை மேகம் வரண்டுபோனல்.

வானோர்க்கும் ஈண்டு சிறப்பொடு பூசனை செல்லாது — தேவருக்கும் உலகத்திலிருந்து செல்லவேண்டிய விழாவும் பூசையும் தொடர்ந்து நடைபெறாது.

வானம் — கீழாகாயம். அழகு காணக்கூடிய பகுதி. இதிலேதான் மேகங்கள் உலாவுவன. ஏல்—எனில்.

வறத்தல் — வறு, வற்று, உலர்தல், காய்தல்.

வானோர் — தெய்வங்கள். மன்னர், வீரர், முன்னோர், முதல்வர். பத்தினிப்பெண்டிர் போன்றோர் தெய்வமாக மதிக்கப்பட்டனர். பண்பின் சின்னங்களாகவே இவர்கள் விளங்கினர். பின்னர் உருவ வழிபாடாக மாறிவிட்டது.

பூசனை — பூ, பூசு, புசி, பூசி, பூ+செய் — பூசை. பூக்கள் வைத்தல், உண்டிபடைத்தல், நெய்பூசல், ஆர்ப்பரித்தல் போன்றவை தினமும் செய்கிற வழிபாடு. அது பக்தரைப் பயிற்ற வொழியத் தேவரை வளர்க்கவல்ல. இதிலுதவும் பொருட்களெல்லாம் கமத்தொழிலாற் கிடைப்பவை என்பது உழவுக்குள்ள செல்வாக்கைக் காட்டுவது.

சிறப்பு — விசேடவிழாக்கள். வருடத்திலே சிலதரம் வரும் கொண்டாட்டங்கள். சிறப்பு வீட்டுடன் தொடர்புடையது (358). இதனால் மோட்சவீட்டை ஞாபகப்படுத்த வெடி கொடி, தூபம் தீபம், ஆடல் பாடல், வேடிக்கை விளையாட்டுகளெல்லாமிடம் பெறும். இவற்றிற்குப் பெரும் பொருள் செலவாகும்.

செல்லாது -- தொடர்ந்து நடைபெறாது. பூசைகள் திருவிழாக்களின் செலவுக்காக மானிய நிலங்கள் ஒதுக்கப் பட்டன. வரட்சிக் காலத்திலே அவற்றின் வருவாய் அருகிவிடும். அதனாற் சிறப்பும் பூசையும் ஒழுங்காக நடத்தமுடியாது போய் விடும்.

ஈண்டு — இங்கிருந்து. அதனால் ஆண்டு அவர்கள் காத்திருப்பார் என்பது பெறப்படும்

உம் -- சிறப்பும்மை. வானோர்க்குப் பூசனை செல்லாதபோது குறள் 42, 43ல் வரும் மற்றவர்களின் தாபரிப்பும் தவறிவிடும் என்பது தெளிவு.

மழைத் தெய்வம் இந்திரன். வானோர்க்கு மீண்டு எனக் கொண்டு இந்திரனுக்கு நன்றி விழா நடவாது என்றாலும் பொருந்தும். ஆனால் இப்பொருள் சிறப்பில்லை.

கடவுளின் நிழல் போன்ற வானோரை வழிபடுதல் கடமை யெனின் ஆதிபகவனை வணங்குதல் தலையாய கடன் என்பது முதலதிகாரத்திலே வற்புறுத்தப்பட்டது. சமயானுட்டானங்கள் கையூட்டுப் போன்றவையல்ல. வேள்வியிலெழுந்த ஓமப் புகையை நுகர்ந்த தேவரே மழையை அனுப்புகின்றனர் என்பது போன்ற மூடநம்பிக்கைகள் வீணானவை. கேட்டுப் படிக்கவும்சிந்தித்து தியானிக்கவும் அதன் படி நாளாந்த வாழ்வில் ஒழுகவுமே ஆலய வழிபாடு. அதன்படி நாளாந்த வாழ்வில், ஆற்றல்

பெருகாவிடில், கடவுளோடு உறவு இறுகாவிடில், வழிபாடு வெறும் வெளியாசாரமும் வீணுமாகும்.

19 தானந் தவமிரண்டுந் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின்

வானம் வழங்காது எனின் — வானம் மழையைப் பெய்யாதுவிட்டால். வியன் உலகம் தானம் தவம் இரண்டும் தங்கா — ஏற்றத் தாழ்வுகள் நிறைந்த உலக சமுதாயத்திலே தானம் தவம் என்னும் இருவித அறமும் நிலைபெறா.

வானம் — மழை மேகம் தங்கும் கீழாகாயம்.

வழங்கல் — எல்லையின்றிக் கொடுத்தல், அதாவது ஆள் இடம் காலம் கணியாது ஈதல், மரபறாது நீடித்து நடைபெறல், இவ்விருபொருளும் இங்கு பொருந்தவன.

வியன் — பரந்த, விசித்திர, சமனில்லாத சமுதாயத்திலே அநீதிகள் நிலவுவதாலேதான் தானமும் தவமும் தேவையாகின்றன.

உலகம் — அறிவுள்ள மனிதன் வாழும் சமூகம், இதிலே இயற்கையான ஏற்றத் தாழ்வுகளுண்டு. அவை வளர்ச்சிப் படிகள் முன்னேற்றப் படிகளாக அமைய வேண்டியவை. ஆனால், இன அறிவற்ற சுய நலமிகள் இவற்றை நிலையான வேறுபாடுகளாக மாற்றிவிடுகின்றனர், இந்த அநீதிகளை அகற்றவே தியாகிகள் தோன்ற வேண்டும்.

தானம் — தா, தரு, உவகையொடு பயன் கருதாது கொடுத்தல் இது இல்லறத்தில் மூதன்மையானது.

தவம் — பிறர் நன்மைக்காக தன்னை மறுத்தல் (295). இது துறவறத்திற் பிரதானமானது.

தானமுந்தவமும் மனித வாழ்வின் மையமெனலாம். சிற்றின்பந் தொடரும் இல்லறம் தானம். பேரின்பத்தைத் தொடங்கும் துறவறம் தவம். பொருள் முயற்சிகள் இவற்றின் உபகரணங்களே ஆயினும் இதற்குத் தேவையான பொருள் மழை யின்றிக் கிடையா.

தங்கல் — இவ்விருபண்புகளும் சமுதாயத்திலே நிலைபேறாக நிற்க வேண்டியவை. மழை தொடர்ந்து பெய்யாதேல் இவையும் நிலைபெற்று நிற்கமாட்டா.

வழங்குவதே கடவுளின் குணம். எல்லையின்றி மரபறாது கொடுக்கின்றார். அவரிலே தங்கினால் அவருடைய கொடைகளைப் பாவிக்க முடியும் அப்போது நீதியும் அமைதியும் தங்கும்.

20. நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்
வானின் றமையா தொழுக்கு.

உலகு நீர் இன்று அமையாது எனின் — உலகிலுள்ள உயிர்வாழ்வு

மழைநீர் இன்றிச் சரியாக நடவாதென்றால். யார்யார்க்கும் ஒழுக்கு வான் இன்று அமையாது — எல்லா மனிதருக்கும் வானிலிருக்கும் கடவுளருளின்றி ஒழுக்கவாழ்வு பொருந்தாது.

உலகு — பூவுலகம், உயிரினம் உலாவுமிடம்.

நீர் — நேராக, மட்டமாகநிற்பது. சலம், பண்பு.

அமைதல் — ஒத்துப்போதல், சரிவர இயங்கல்.

எனில் — என்பது உண்மையானால். அதையேமுன்னர் 8 குறள்களில் (12—19) விளக்கினார்.

யார் யார்க்கும் — பேதமின்றி யாபேர்க்கும். இதனால் மனித இன சமத்துவம் கடவுள் வைத்த ஒழுங்கு என்பது தெளிவு.

வான் — ஆதிமுதல்வர் வதியும்மேல்மண்டலம்.

இன்று — இல்லாமல்.

ஒழுங்கு — ஒழுக்கம், ஒழுகு — தொடர்ந்துபோதல். ஒழுங்கு, ஒழுங்கை அதே இனச் சொற்கள். அறிவுள்ள மனிதரின் வாழ்க்கை வழி, சன்மார்க்கம்.

ஒழுக்க சீவியமே திருக்குறளின் நேரிலக்கு. உலகம் நீரின் உதவியால் இயங்குகிறது. இதிலும் பிரயோசனமான பல உதவிகளையும் இறைவன் இயற்கைக்கு அளித்திருக்கிறார். அதுபோல் மனிதனின் ஆன்ம வாழ்வுக்கும் தனது கொடைகளைத் தாராளமாகத் தருகிறான். அவற்றின் இன்றியமையாமையை உணர்ந்து அதைப் பாவித்துவாழ்ந்தால் வீடு அடையலாம். நாமும் நமது வல்லமையும் நம்முடைமையாவும் கடவுள் கிருபையாற் கிடைத்தவை யென்று அறிந்து வாழ்வோமாக!

**வானகத் தந்தையின் அருளாலேதான்** நமக்குஉயிரும் வாழ்வும் அதற்கு வேண்டியயாவும் வருகின்றன. நிலமும் நீரும் கடலும் காற்றும் வெயிலும் மழையும் எமது தேவைகளை நிறைவு செய்கின்றன. இவற்றைப் பாவித்து அவனை வழிபடவேணும். தானம் தவமியற்றி ஒழுக்க நெறியில் வளர வேண்டும்.

**ஆதியாகமம் 27. 28.** கடவுள் கருணைபுரிந்து உனக்கு வானத்துப் பனியையும் பூமியின் செழுமையையும் மிகுந்த தானியத்தையும் திராட்சையையும் தந்தருளுவாராக! 39. உன் ஆசீர் பூமியின் செழுமையிலும் வானத்திலிருந்து பெய்யும் பனியிலுமிருக்கும்.

**யோபு. 5. 8.** என்னைப் பொறுத்தமட்டில் நான் கடவுளைத் தேடுவேன். 9. மாபெருஞ் செயல்களையும், ஆராய்ச்சிக்கு அப்பாற்பட்டதையும் கணக்கற்ற விந்தைகளையும் செய்கிறவர் அவரே. 10. நிலத்தின்மேல் மழை பெய்யச் செய்கிறார், வயல்களுக்குத் தண்ணீர் பாய்ச்சுகிறார். 11. தாழ்ந்தவர்களை மேன்மைகளில் வைக்கிறவர் அவர்; அழுகிறவர்களை நன் நிலைக்கு உயர்த்துகிறவர் அவர்!

பணி 14. 15. நண்பர்களே, என்ன செய்கிறீர்கள்? நாங்களும் உங்களைப்போல எளிய நிலைக்குட்பட்டமனிதர்தானே. இப்பயனற்றசிலைகளை விட்டுவிட்டு உயிருள்ள கடவுள் பக்கம் திரும்பவேண்டுமென்று நற்செய்தியை அறிவிக்கிறோம். விண், மண், கடல் யாவற்றையும் அவற்றிலடங்கிய அனைத்தையும் ஆக்கியவர் அவரே. 16. கடந்தகாலங்களில் அவர் எல்லா இனத்தாரும் தங்கள் மனம்போன போக்கில் நடக்க விட்டுவிட்டார், 17. ஆயினும் தம்மை அறிந்துகொள்ள எத்தகைய சான்றுமில்லாதபடி விட்டுவிடவில்லை. எவ்வாறெனில், வானின்று உங்களுக்கு மழையைப் பொழிந்து, செழிப்புமிக்க பருவங்களை அளித்து, உங்களுள்ளம் மகிழ்ச்சி பொங்க நிறைய உணவு கொடுத்து உங்களுக்கு நன்மை புரிந்துவந்தார்.

அருளப்பர் 7. 37. திருவிழாவின் இறுதியான பெருநாளிலே யேசு எழுந்து நின்று உரத்தகுரலில்: யாரேனும் தாகமாகயிருந்தால் என்னிடம் வரட்டும், என்னில் விசுவாசம் கொள்பவன் குடிக்கட்டும். 38. மறைநூல் கூறுவதுபோல், அவனுடைய உள்ளத்திலிருந்து உயிருள்ள நீர் ஆறுய்ப்பெருக்கெடுத்து ஓடும், என்றார். 39. தம்மில் விசுவாசம் கொள்வோர் பெறப்போகும் ஆவியானவரைக் குறித்து அவர் இவ்வாறு சொன்னார். ஆவியானவரோ இன்னும் அருளப்படவில்லை. ஏனெனில், யேசு இன்னும் மகிமைபெறவில்லை.

15. 5. நான் திராட்சைக்கொடி; நீங்கள் அதன் கிளைகள். ஒருவன் என்னுள்ளும் நான் அவனுள்ளும் நிலைத்திருந்தால் அவன் மிகுந்த கனி தருவான். ஏனெனில், என்னைப்பிரிந்து உங்களால் ஒன்றும் செய்யமுடியாது.

சங்கத் திருவுரை 5. 18. கடவுள் செல்வங்களையும் சொத்துக்களையும் எவனுக்குத் தந்தருளினாரோ அவன் அவற்றினின்று உண்டு, தன் பங்கென்று பெற்று இன்புற்று, தன் உழைப்பிலே மகிழ்ச்சியடைந்தால் அது கடவுளுடைய அருளேயாம். 19. கடவுள் அவனுடைய இதயத்திற்கு இன்பத்தைத் தந்தருளினபடியால் அவன் தன் வாழ்நாட்களை அதிகமாய் நினையான்.

சங்கீதம். 77. 22. அவர்கள் கடவுளை விசுவசிக்கவில்லை; அவரது மீட்பின் ஆற்றலில் நம்பிக்கை வைக்கவில்லை. 23. ஆனால் அவரோ வானில் உலவும் மேகங்களுக்குக் கட்டளையிட்டார், வானங்களின் கதவுகளைத் திறந்துவிட்டார். 24. உண்பதற்கு மன்னாவை மழைபோற் பொழிந்தார்; வானத்து உணவை அவர்களுக்கு அளித்தார். 25. விண்ணோரின் உணவை மனிதன் உண்ணலானான்; வேண்டிய அளவுக்கு உணவை அனுப்பினார்.

64. 9. மண்ணுலகைத் தேடிவந்தீர், அதற்கு நிறைய மழையைக் கொடுத்தீர்; அதற்கு நிறைய வளம் தந்தீர். கடவுளின் ஆறு கரைபுரண்டோடியது; தானியங்கள் நிறைய விளையச்செய்தீர். விளையச்செய்ததே

இவ்வாறு; 10. படைசால்களில் தண்ணீர் ஓடச் செய்தீர்; மண்கட்டிப் பரம்படித்து, மழையால் அதை மிருதுவாக்கினீர்; முளைத்துவரும் விதையை ஆசீர் வதித்தீர். 11. ஆண்டு முழுவதையும் உமது கருணையால் நிரப்பினீர்; நீர் செல்லுமிடத்தில் செழுமை சிந்துகிறது. 12. பாலைவெளியின் மேய்ச்சல் நிலம் கொழுமை கொண்டு விளங்குகிறது. 13. மேய்ச்சல்களில் ஆடுமாடுகள் நிரம்பியிருக்கின்றன; கணவாய்களிற் தானியங்கள் மிகுந்துள்ளன; இவையெல்லாம் அக்களிப்புடன் பாடல்கள் இசைக்கின்றன.

33. 8. ஆண்டவர் எவ்வளவு நல்லவர் என்று சுவைத்துப் பாருங்கள்: அவரிடம் தஞ்சம் புகுவோன் பேறுபெற்றவன்.

மத்தேயு 6. 25. ··· உயிர்வாழ எதை உண்பது எதைக் குடிப்பது என்றோ, உடலைமூட எதை உடுப்பது என்றோ கவலைப்பட வேண்டாம் உணவைவிட உயிரும், உடையைவிட உடலும் உயர்ந்தவையல்லவா? 26. வானத்துப் பறவைகளைப் பாருங்கள். அவை விதைப்பதுமில்லை, அறுப்பதுமில்லை, களஞ்சியத்தில் சேர்த்து வைப்பதுமில்லை. உங்கள் வானகத் தந்தை அவற்றிற்கும் உணவளிக்கிறார். நீங்கள் அவற்றிலும் மிக மேலானவர்களன்றோ? 27. கவலைப்படுவதனால் உங்களில் எவன் தன் வளர்த்திக்கு ஒருமுளம் கூட்டமுடியும்? 28. உங்கள் உடையைப்பற்றி ஏன் கவலைப் படுகிறீர்கள்? வயல்வெளி மலர்கள் எப்படி வளர்கின்றன என்று கவனியுங்கள். அவை உழைப்பதுமில்லை, நூற்பதுமில்லை. 29. ஆயினும், சலமோன்கூடத் தன் மாட்சியிலெல்லாம் இவற்றில் ஒன்றைப் போலும் உடுத்தியிருந்ததில்லை யென்று உங்களுக்குச் சொல்லுகிறேன். 30. குறைவான விசுவாசம் உள்ளவர்களே, இன்றைக்கு இருந்து நாளைக்கு அடுப்பிலே போடப்படும் வயல்வெளிப்புல்லைக் கடவுள் இவ்வாறு உடுத்துவாரானால் உங்களுக்கு எவ்வளவுதான் செய்யமாட்டார்! 31. ஆதலால், எதை உண்போம் எதைக்குடிப்போம், எதை உடுப்போம் என்று கவலைப்பட வேண்டாம். 32. ஏனெனில் புறவினத்தார் தாம் இவையெல்லாம் தேடுவர். உங்களுக்கு இவையனைத்தும் தேவையென உங்கள் வானகத்தந்தைக்குத் தெரியும். 33. ஆகவே, கடவுளின் அரசையும் அவருக்கு ஏற்புடையதையும் முதலிற் தேடுங்கள். இவையனைத்தும் உங்களுக்குச் சேர்த்துக் கொடுக்கப்படும்.

1 திமோத்தி 4. 4. கடவுள் படைத்தது அனைத்தும் நல்லதுதான். நன்றி கூறி உட்கொண்டால் எந்த உணவையும் விலக்கவேண்டியதில்லை. 5. கடவுளுடைய வார்த்தையும் நம் செபமும் அதைப் புனிதமாக்கும்.

6. 17. இவ்வுலகில் செல்வம் படைத்தவர் இறுமாப்புக் கொள்ளலாகாது. நிலையில்லாச் செல்வத்தில் நம்பிக்கை வைக்காமல், நமது இன்பத்துக்காக எல்லாவற்றையும் ஏராளமாக அளிக்கும் கடவுளில் மட்டுமே நம்பிக்கை வைக்கவேண்டும். 18. அவர்கள் நன்மை செய்து நற்செயல்

கள் என்னும் செல்வம் சேர்ப்பார்களாக. தங்களுக்குள்ளதைப் பிறரோடு தாராள மனதுடன் பகிர்ந்துகொள்ள வேண்டும். இவையெல்லாம் நீர் அவர்களுக்கு எடுத்துச் சொல்லும். 19. அவ்வாறு அவர்கள் தங்கள் வருங்கால வாழ்வுக்கான சிறந்ததொரு சேமிப்பைச் சேர்த்து வைப்பார்கள். அதைக் கொண்டு அவர்கள் உண்மை வாழ்வை அடைய இயலும்.

## அதிகாரம் 2. நீத்தார் பெருமை

* * * * * * * * *

வீட்டுப்பாலின் முதலதிகாரத்திற் கடவுளே எல்லாத்துக்கும் எல்லா வகையிலும் முதல்வன், அவனுடைய குணங்களை உணர்ந்து வணங்க வேண்டும், அவனை அடைவதே நிறைவான நீடூழி வாழ்வு என விரித்துரைத்தார். இரண்டாமதிகாரத்தில் இறைவனருளாலேதான் உலகம் வாழ்கிறது, மழைநீர் இயற்கையைச் செழிக்கச் செய்வதுபோல் அவனுடைய கிருபை உயிர்களை உயர்த்து கிறது, மனித ஒழுக்க சீவியத்துக்கு அவனுதவி அவசிய மென விதந் தோதினர். இந்த மூன்றுமதிகாரத்திலே ஒழுக்கந் தழைக்கக் கடவுள் அளித்த வழியை விளக்குகிறுர்.

மனிதர் இயற்கையாக விரும்பும் பேரின்ப வீட்டுக்கு வழிகாட்டக் கடவுளே குருவாகி வருவார் என்பது பழைய சமயங்களெல்லாவற்றிலும் உள்ள கொள்கை. இது எங்கேயோ எப்போதோ மனிதனுக்கு அறிவிக்கப் பட்டிருக்கவேண்டும். அல்லாவிடில் மீட்பரை எதிர்பார்த்த மனிதர் அந்தப்பதவிக்குப் பலரை அவசரப்பட்டு உயர்த்தியிருக்கமாட்டார்கள். பலகாலங்களிலும் இடங்களிலும் இறைவன் பெயராலே வழிகாட்டிகள் தோன்றியது சரித்திரமறிந்தது. ஆயினும் இவர்களெல்லாரும் பெலவீனமுள்ள வெறும் மனிதராகவே விளங்கினர். அவர்களை உயர்த்திவைத்த

பக்தர்கள் அவர்கள் வாயிலே இறைமை உரைகளை வைத்தாலும், அதிசய செயல்களைச் செய்ததாகச் சொன்னாலும் இம்மகான்களின் வாழ்க்கையிலுள்ள குறைகளை மறைக்க முடியவில்லை.

கடவுளின் கருணை மட்டும் பெற்ற பெரியார் மனிதனின் சிக்கலான நிலைக்குத் தீர்வுகாண முடியாது. ''நான் விரும்பும் நன்மையைச் செய்கிறேனில்லை, நான் விரும்பாத தின்மையையே செய்கிறேன்'' என்ற அவலக்குரல் மனிதனின் இயற்கையில் எற்பட்ட உடைவைக் காட்டுகிறது. பேரின்பம் விரும்புகிறவன் சிற்றின்பத்தையே தேடிஓடி நரகவேதனைப் படுகிறான். மனித ஆளுமையிலே ஒரு பிளவு ஏற்பட்டிருக்க வேண்டும். இந்த இயந்திரக் கோளாறுக்கு அதைச் செய்தவன் வந்தால் மட்டுமே சரி செய்ய முடியும். மற்றவர் தற்காலிக திருத்தம் மாத்திரம் செய்யக் கூடும்.

அந்த மீட்பர் வந்தார் என்பது வள்ளுவர் கொள்கை. அச்சம்பவம் பெருஞ் சிறப்புடையது என்று பனுவல் போற்றுகிறதாம். பெருமையுடைய கடவுள் அப்பெருமையை நீத்தார். மனிதகோலத்திற் தனது மகிமையை மறைத்தார். ஏன்? ஒழுக்கவழிகாட்ட நீத்தார். பெருமை நீத்து வந்தவர் சிறுமை துறந்தாரைச் சீடராகத் தெரிந்தார். இன்ப வீட்டையும் வழியை அவர்களுக்குக் காட்டினார். அதை எல்லா மனிதருக்கும் அறிவித்து அழைத்துவரக் கட்டளை கொடுத்தார். அவரைப்பற்றியும் அவருடைய சீடர் பற்றியும் சிறு தகவல் இங்கு கிடைக்கிறது.

21. நீத்தார் பெருமையைப் பனுவல் போற்றும்.
22. துறந்தார் பெருமை எல்லா மனிதரும் சேர்ந்த அளவு.
23. அறம் பூண்டார் பெருமையை உலகறியும்.
24. ஐந்து காப்பான் வைப்புக்கு வித்து.
25. ஐந்தவித்தான் ஆற்றலைத் தேவரும் அறிவர்.
26. பெரியர் சிறியர் செயலாலறியப்படுவர்.
27. ஐந்தின் வகை தெரிவான் உலகின் தலைவன்.
28. நிறைமொழி மாந்தர் பெருமை மறைமொழி காட்டும்.
29. குணக்குன்றேறி நின்றார் வெகுளிகாக்க முடியாது.
30. அந்தணரென்போர் செந்தண்மையுடையோர்.

வள்ளுவர் நூல் முழுவதும் அந்த ஒழுக்க முறையையே விளக்க முயலும். ஏன், அவரும் அந்த நீத்தார் மரபில் வந்தவரோ?

... என்றும்.

இறவாத வின்பத் தெமையிருத்த வேண்டிப்
பிறவாமுதல்வன் பிறந்து — நறவாருந்
தாருலாவும்புயத்துச் சம்பந்த நாதனென்று
பேரிலா நாதனொரு பேர்புனைந்து — பாரோர்தம்

உண்டியுறக்கம் பயமின்ப மொத்தொழுகிக்
கொண்டு மகிழ்ந்த குணம் போற்றி. (போற்றிப்பஃறொடை).

**21. ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவற் றுணிவு.**

ஒழுக்கத்து நீத்தார் பெருமை — மனித ஒழுக்கத்தின் வளத்துக்காகத் தனது இயற்கையான சிறப்பைத் துறந்தவருடைய பெருமையை. பனுவல் துணிவு விழுப்பத்து வேண்டும் — வேதநூலின் முடிவு உறுதியாகச் சிறப்பித்துக் கூறும்.

அத்து — சாரியை,

ஒழுக்கத்து — ஒழுக்கத்துக்காக,

ஒழுக்கம் — பகுத்தறிவுடைய மனிதர் ஒழுக வேண்டிய நெறி. அது ஆறு போலத் தடைகளைத் தாண்டி ஓட வேண்டும். சுயாதீனத்தைத் தவருகப் பாவிப்பதனுல் ஒழுக்கம் பிழைத்து விடுகிறது. ஆதலால் இறைவனே வந்து "பொய் தீர் ஒழுக்க நெறி (9) காட்டுவது அவசியமாயிற்று.,,

நீத்தார் — அர் விகுதி பெற்ற ஒருமைத் தொழிற் பெயர் (நன்னூல் 289). துறந்தார், பிரிந்தார். யாவையும் உள்ளே நின்றியக்கினும் எல்லாங் கடந்தவரான கடவுள் தனது சிறப்பை மறைத்தே மனிதனுக வேண்டும். தனது பெருமையை நீத்தவர் மனித சிறுமையைத் துறந்தவர் போல வாழ்ந்தே வழிகாட்ட வேண்டும்.

பெருமை — சிறப்பு. கடவுள் சிறப்பை மறைக்கலாம், ஆனுல் இழக்க முடியாது. கார் முகில் மறைத்த கதிரவன் போல அவருடைய பிரகாசம் விரைவிலே வெளிவரும்.

விழுப்பத்து — அருமையிலருமை, விழு — விரும்பு, விழை, விழுப்பம் பெருஞ் சிறப்பு (131) விழுமம் — பெருந் துன்பம்.

பனுவல் — நூல், ஏடு. பன்னு+அல் — இழைப்பது. இதில் முதனூல் "வினையினீங்கி விளங்கிய அறிவின் முனைவன் கண்டது,, (தொல் காப். 3.9.96.). இது எழுத்தில்லை. எனினும், மனிதரின் மனச்சாட்சியில் ஏலவே எழுதப் பட்டிருக்கிறது. வழிநூல் மனிதரியற்றுவது. அது முதனூலின் விழுப்பமான ஒழுக்கத்தையே அறம்பொருளின்ப மெனப் பகுத்துரைக்கும். திருவள்ளுவர் அதையே தமது அரிய நூலில் வரைந்து தருகிருர். எனவே இது சார்பு நூல் போலும்.

துணிவு — ஆராய்வின் முடிவு.

வேண்டும் — கட்டாய மென வற்புறுத்தும். வேள் — விருப்பம். எனவே, பனுவல் விரும்பும், வாழ்த்தும், வற்புறுத்தும்.

கடவுள் மனிதருக்குப் பொய் தீர் ஒழுக்க நெறி காட்டவந்து பொறி வாயில் ஐந்தவித்துத் தந்தார் (6). அவரே நீத்தாரென்பது இவ்விரு அதிகாரங்களிலும் வள்ளுவர் பாவிக்கும் பதங்களாலும் உணர்த்தும் பொருளாலும் தெரிகிறது.

அருவமான இறைவன் தனது மகிமை வல்லமையை நீத்தது மனிதர் அதைப் பின்பற்றுமாறே. இல்லறமே மனிதனுக்கு இயற்கையான நிலை ஆனாலும் நம்முடைய தவறிய சுபாவநிலையில் உடலும் உலகும் உயிரை உயரவிடாது தடுக்கின்றன. அதனால், இன்பம், பொருள் மேல் நம்மை ஈர்க்கும் பற்றைத் துறந்து தவத்திலும் தியானத்திலும் ஈடுபடல் அவசியமாகிறது. அதினால் அன்பு முதிர்ந்து உயிர்கள் மீது அருளாகிக் கடவுளடி சேரத் தயாராகும்படி நீத்தாரைப் பின்செல்பவரே உண்மையான துறவியராவர்.

### 22. துறந்தார் பெருமை துணைக் கூறின் வையத்து இறந்தாரை யெண்ணிக் கொண் டற்று.

துறந்தார் பெருமை துணை கூறின் — துறவு பூண்டவரின் பெருமையை மதிப்பிட்டுக்கூற விரும்புவது. வையத்து இறந்தாரை எண்ணிக் கொண்டு அற்று — இந்த உலகிலே இறந்தவர்களை எண்ணிக் கணக்கெடுப்பது போலாகும்.

அற்று — போன்றது.

துறந்தார் — நீத்தாரின் வழி நின்று சிற்றின்பந் துறந்து அருள்வழி நிற்பவர். இவர்கள் மனிதஇன வளர்ச்சிக்காக உழைப்பவர். அதன்மூலம் பேரின்பத்துக்குத் தயார் செய்பவர்.

துணை — அளவு, மதிப்பு, ஒப்பனை. செயலின் மதிப்பு அதின் இலக்கைப் பொறுத்தது. வழிவகை அதற்குத் தகுந்ததாக அமைய வேண்டும்.

வையம் — வைப்பிடம், நிலையானது, இவ்வுலகம்.

இறந்தார் — கடந்துபோனவர். மனித உடல் அழியும் கூறு; உயிர் அழியாத கூறு. மரணத்தால் உடலைவிட்டு உயிர் கடந்துபோகிறது. ஆனால் மனித இனம் உலகிலே நிலைத்து நிற்கிறது.

எண்ணிக்கொள்ளல் — பெருந் தொகையைக் குறிக்கக் காட்டின் இலைகளையோ கடற்கரையின் மணலையோ கடல்நீர்த் துளியையோ உவமையாக்குவது மரபு. துறந்தார் பெருமையை மட்டிட வள்ளுவர் இறந்தார் தொகையைக் கணிக்கிறார். உலகிலே மனிதர் வாழ்ந்த கால அளவையே அறியோம். புதைபொருளாராய்ச்சி ஆக 6,000 ஆண்டுகளுக்கே நம்மை அழைத்துச் செல்கிறது. இறந்தவர் தொகையைக் கணக்கிட நமக்கு வழியில்லை. அதனால், துறந்தார் சிறப்பையும் மதிப்பிட முடியாதெனலாம்.

எனினும், மனிதனின் இவ்வுலக வாழ்வு ஒரு ஆயத்தகாலம் மட்டுமே. உண்மையான வாழ்வு இறந்தபின்னர் என்பதே நீத்தார் படிப்பினை. அதற்கு மக்களை ஆயத்தஞ் செய்யும் துறந்தார் அவர்களைக் கணக்கிடுவது இயல்பே. அவர்களை எண்ணிக் கொள்ள நம்மால் முடியாதெனினும் நீத்தாராய் வந்தகடவுள் அவர்கள் ஒவ்வொருவரையும் கட்டாயம் அறிவார். முக்காலமும் அவர் முன்னேஒருங்குஒளிர்கின்றன. அவர் பெருமை அவர்களுடைய

பாக்கியத்திலேதான் பிரசித்தமாகும்.

23. இருமை வகை தெரிந் தீண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற் றுலகு.

இருமை வகை தெரிந்து—இம்மை மறுமை யெனும் இருநிலையின் தன்மையை அறிந்து. ஈண்டு அறம் பூண்டார் பெருமை — இவ்வுலகிலே புண்ணிய சீவியத்தை மேற் கொண்டவரின் பொருமையால். உலகு பிறங்கிற்று —உலகம் பிரகாசிக்கிறது.

இருமை--இம்மை மறுமை, இல்லறம் துறவறம், இன்பம் துன்பம், நன்மை தின்மை என பல இரட்டைகளைக் குறிப் பிடலாம். நீத்தார் ஈண்டு அறம் பூண்டதால் ஆண்டும் அறிந்தவர் என்பதே பொருத்தம். ஒழுக்க வழிகாட்டுபவர் கதியை, இலக்கை அறிந்தவராயிருத்தல் வேண்டும். எனவே வீடறிந்த கடவுளே வரவேண்டுமென்பது தெளிவு.

வகை -- தன்மை. பகுதி, பிரிவு, குணம். நித்திய வாழ்வின் தாற்பரியம் தெரிந்தால் மாத்திரமே இவ்வாழ்வை வளமாக்க முடியும்.

ஈண்டு — இங்கு. அதனுல் ஆண்டு — அங்கு பெறப்படும்.

அறம் — நீத்தார் இல்லத்தில் வாழ்ந்து துறவறம் அனுசரித்துக் காட்டினர். மனித இயற்கைப்படி சீவிப்பதே அறம். வீடு நோக்கி இனம், சமூகம், குடும்பம், தான் என ஊழியஞ் செய்வதே அறவாழ்வு.

பூண்டார் — பூண் — அணிகலன். பாதுகாப்புக்கும் அழகுக்கும் பாவிப்பது. நீத்தாரின் இவ்வுலக வாழ்க்கை அவருக்கல்ல நமக்கே அணிகலனுக அமைந்தது.

உலகு — உயிரினம் உலாவுமிடம்.

பிறங்கல் — இலங்கல், ஒலித்தல். ஒளியும் ஒலியும் பரவுதல். நீத்தாரின் மாதிரியும் போதனையும் அவருடைய சீடர்களால் உலகின் பலவிடங்களிலும் பரப்பப்பட்டது. இன்னும் அது நிலவவேண்டும். அதை யாவரும் அறிய வேண்டும். திருக்குறளும் அதையே விரித்துரைக்கிறது.

பேதை மனிதர் இவ்வுலகிலோர் இன்பவனத்தை நிறுவமுயலுகின்றனர். சடத்தை நம்பிச் சித்தை மறப்பதனுல் நாமுலாவுமிடம் உலத்துப் போகிறது. நமது நிரந்தரவீடு மறுமையே. அதை அறிந்தவர் இங்கு வந்து வழிகாட்டியது பெருமைக்குரியது. அதை அறிந்து அமைவது அவசியம்.

24. உரனென்னுந் தோட்டியா னோரைந்துங் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து.

உரன் என்னும் தோட்டியால் — மனவுறுதி எனும் அங்குசத்தால். ஒரு ஐந்தும் காப்பான் — ஐம்புலனென்னும் யானையை ஒரே வழியில் நடத்துபவன். வரன் என்னும் வைப்புக்கு ஒரு வித்து — தலைவனை அடையும் இன்ப வீட்டுக்கு ஒப்பற்ற வித்தாவான்.

உரன் — மனவுறுதி, அறிவுத்திட்பம், வீரம். (136, 597, 600, 888. 1263)

உரம் — பசளை, உரமூட்டுவது.

ஐந்து — ஐம்புலன்கள், இவற்றுலெழும் தன்னல அவா. இந்த இச்சைகள் மக்களை அலைக்கின்றன. இதை அடக்குவதே பகுத்தறிவின் வேலை,

தோட்டி – அங்குசம். வலிமைமிக்க யானையை அடக்கவேண்டியதாகையால் எஃகினுற் செய்யப்படுவது. ஐந்து என்பதாற் புலன்களும் தோட்டி என்பதால் மதயானையும் பெறப்பட்டன. இதனுல் அரும் பொருள் புதைந்த உருவகம் மனத்திரைமுன் சித்திரமாகத் தோன்றுகிறது.

ஓர்--ஒரு, ஒப்பற்ற அருமைவாய்ந்த. யானை நடப்பிப்பது போல ஐம்புலன்களைப் பகுத்தறிவுப் பாதையிலே செலுத்தவேண்டியதால்.

காப்பான்--புலன் அவாக்களை அறுத்தழிக்க முடியாது. அவை தேவையானவை; கடவுளின் அருங்கொடை. அவற்றைச் சுதந்திர சக்தியால் அடக்கி, மெய்யறிவுப்படி நடத்தவேண்டும். அதனுற் தனது சீவியமும் சமூக, இன வாழ்வும் வளமடையும்.

வரன்--வரம், வாரி, மணமகன், விரும்புவது. இதற்கு வான் என்ற பாடபேதமும் உண்டு.

வைப்பு--வைத்தல், நிலம், நிதி, களஞ்சியம், வீடு. பேரின்ப வீடு உயிர்களின் வைப்பிடம் எனலாம். அங்குதான் வருங்கால இன்பவாழ்வு தொடரும்.

வித்து--கருமூலம், வீட்டுக்குப் பயிர்தருவது. ''இவ்வுலகத்தில் வேட்கைவேர் வீழ்த்து முற்றிக் காதலுங் களிப்புமென்னுங் கவடுவிட்டவலம் பூத்து மாதுயர் இடும்பை காய்த்து மரணமே கனிய நிற்கும் விதையன்று.'' ''மேலுலகத்திற் பற்றுன் பற்றினைப்பற்றிப் பேரின்பக் கவடுவிட்டு அறம் பூத்து அன்புகாய்த்து அருளே கனிய நிற்கும் விதையென்பார் 'வான் எனும் வைப்புக்கோர் வித்து' என்றுர்.'' (சொ. தண்டாயுதபாணிப் பிள்ளை).

புலனறிவெனும் யானைகள் வாழ்க்கையெனும் புலத்தை அழிக்கின்றன. அதனுற் தனிவாழ்வும் சமுதாய சீவியமும் சிதைகின்றன.

காய் நெல் அறுத்துக் கவளங் கொளினே
மா நிறை வில்லதும் பன்னுட்டு ஆகும்
நூறுசெறு ஆயினும் தனித்துப் புக்குணினே
வாய்புகு வதனினும் கால்பெரிது கெடுக்கும்;
மெல்லியன் கிழவன். ஆகி வைகலும்
வரிசை அறியாக் கல்லென் சுற்றமொடு
பரிவு தப எடுக்கும் பிண்டம் நச்சின்
யானைபுக்க புலம் போலத்
தானுமுண்ணுன், உலகமுங் கெடுமே--புறம் 148.

ஐம் புலன்களால் வரும் சிற்றின்பத்தைக் காத்துப் பேரின்பம் பெற வேண்டும். ஐந்தவித்தான் (6) அதின்வரன். அவரே வித்தாகவும் வந்தார் (24). வித்து இனத்தைப் பெருக்குவது போல மீட்பரும் சிற்றின்பத்தை வென்று பேரின்பஞ் சுகிப்போரைப் பெருகிப் பலுகச் செய்கிறார்.

25. ஐந்தவித்தா னாற்ற லகல்விசும்பு ளார்கோமான்
இந்திரனே சாலுங் கரி.

ஐந்து அவித்தான் ஆற்றல்—ஐம்புலன்களைப் பலியாக்கியவருடைய வலிமைக்கு. அகல் விசும்பு உளார் கோமான் இந்திரனே சாலும் கரி—அகன்ற வானுலகத்தில் வாழ்வோரின் அரசனான இந்திரன் சிறந்த சாட்சியாவான்.

சாலும்--சிறந்த. கரி--சாட்சி.

ஐந்து--சடஉடலின் பொறிகளோடு இணைந்த புலன்கள். இவை ஐம்பூதியங்களோடு தொடர்புடையன. சித்தான புத்தியே ஆறுவது அறிவு.

அவித்தான். அவி—வேள்விப்பொருள்.

அவித்தல் -- மாற்றல், பதப்படுத்தல், பக்குவமாக்கல். முனைப்புக் கடுப்பு அழித்து ஆற்றலைக்கூட்டல்.

ஆற்றல்--பெருவலிமை. ஒருவரின் வீரத்துக்குச் சாட்சி சொல்லக்கூடியவர் அவருடைய எதிரிதான். மற்றவர் அதைப் பரீட்சித்தறியமுடியாது.

அகல்--நீங்குதல். அதனாற் பரந்து விசாலமாதல்.

விசும்பு--ஆகாயம். சுவர்க்கம், கைலாயம் அங்கு என்பது புராண மரபு.

விசும்பு உளார்—அங்கு வசிப்பவர், தேவர், தூதர், புனிதர். இவர்கள் கடவுளைச் சேர்ந்த முத்தர்.

ஆரிய தெய்வங்கள் மனிதபண்பூட்டிய இயற்கை ஆற்றல்கள். தமிழ்த் தெய்வங்களோ இயற்கைப்பண்பூட்டிய மனித முதல்வர்கள். மத்திய ஆசியாவிலிருந்து படையெடுத்து வந்தவர்கள் தங்களைத் தேவர் (சுரர்) என்றும் எதிர்த்த இந்தியமக்களை அசுரர் (யக்கர், நாகர்), தங்களுக்குப் பணிந்தவர்களை நரர் (நரகர்?) என்றும் அழைத்தனர். இந்திய தெய்வங்களை உருமாற்றித் தமக்கே சொந்தமாக்கிக்கொண்டனர். சிலமூல மரபுகள் மக்கள் மொழியான பாளி, பாகதம் பாவித்த புத்த சமண நூல்களிலுண்டு. வழங்கா மொழியான சங்கதத்தில் வரைந்த புராணகாரர் மூலமரபுகளை திரித்தே அளித்திருக்கிறார்கள்.

கோமான் இந்திரன்—அரசனான இந்திரன்.

இந்திரன் -இன்+திறம்—இனியநிலை, பாக்கியம். எனவே, இந்திரன் முத்தர் தலைவனுக்குப் பெருத்தமான பெயர்.

தொல்காப்பியத்தில் இவன் 'வேந்தன்' எனும் தமிழரின் மருதநிலத் தலைவன். ஆரிய சேனைத் தலைவனுடன் கலந்து இமையவர் கோனானன். சங்ககாலத்தில் இந்த மேகங்கள் போன்ற படைகளின் தளபதி மழைத்

தெய்வமாகிவிட்டான். வருணனின் செல்வாக்கையும் விரைவிலே பற்றிக் கொண்டான். சிலப்பதிகார காலத்தில் இந்திரன் தமிழ்நாட்டின் தேசிய தெய்வமாகிவிட்டான். தொல்காப்பியர் கற்ற ஐந்திர வியாகரணம் இயற்றியவன் ஒரு இந்திரன். பூம்புகாரிற் புத்தவிகாரம் அமைத்தவனும் ஒரு இந்திரன்தான். இவ்வாறு இந்திரர் பலர். எல்லாரும் சிறப்புடைய தேவராக மதிப்படைந்தவர்.

புராணகாலத்திலே சிவன், திருமால், முருகன் போன்ருேர் இந்திரனேடு முதலிடத்துக்குப் போட்டிபோடுகின்றனர். இந்திரனைக் கவிழ்க்கவே புராணகாரர் ஈனமான கதைகளைக் கட்டிவைத்தனர். திருவிளையாடற் புராணத்திலே இதிற் சிலதைக்காணலாம்.

அகலிகையின் கதை இங்கு பொருந்தாத பொருள். நீத்தாருக்கு இந்திரனல்லக் கௌதமரே ஒருவேளை ஒப்பனையாகலாம். இந்திரன் கௌதமரை அணுப்பியது துறவியரைப் பரிகாசஞ் செய்வதாகும். அணுப்புண்ட முனிவர் சினந்தது அவருக்கே அவமானம். இந்திரன் பெற்ற சாபம் அருவருப்பானது. அதை மாற்றவேண்டி நடந்த நாடகம் பெரிய இிலிசகேடு. இதனுற் தேவர், முனிவர் ஆற்றலல்லப் பெலவீனமே புலனுகிறது.

திருவள்ளுவர் அறிந்த மரபிலே இன்னுமொரு இந்திரனைத்தேடவேண்டும். பெருமைநீத்து ஐந்தவித்து ஒழுக்கநெறி அளித்தவருக்குச் சான்று கூறக் கூடியவர் அவர். அவரை உரைகாரரே அறியாது திண்டாடுவதைக் காண்கிருேம். புராணக்கதையின் கவர்ச்சியாலே உண்மை மரபு மறைந்விட்டது. நீரிலே மாழ்பவர் துரும்பை எட்டிப்பிடிப்பது போல அவர்கள் பொருந்தாக் கதையையே காட்டி உளறினர்.

மீட்பரின் பெருமையை மண்ணவர் அறியார். விண்ணவர் அறிவர். அவர்களின் அரசன் அவருக்குச் சான்று சொல்லக் கட்டாயம் முடியும். அவன் நீத்தாரின் எதிரியானுல் அச்சான்றை எவரும் ஏற்கவேண்டும். எதிரி சாத்தானும் ஒரிதாங்கி லுசிப்பரும் இன்பநிலைஇந்திரனும் ஒருவர் தானே என ஆராய்ந்து மகிழலாம்.

26. செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்குரிய செய்கலா தார்.

செயற்கு அரிய செய்வார் பெரியர்—செய்தற்கு அருமையானவற்றைச் செய்வோரே பெரியாராவர். சிறியர் செயற்கு உரிய செய்கல் ஆதார்—சிறியவரோ கடமையானதையும் யெய்ய முயலாதவராம்.

ஆதார்--ஆதர்—அறியாதவர், முயலாதவர்.

பெரியர்--மேலானவர். திண்ணியர் (666) கற்புடையோர் (54) நோற்பார் (160) போன்ருர் மதிப்புக்குரியவர். அவர்கள் சமுதாயத்தை இயக்குபவர் இனத்தை உயர்த்துபவர். மற்றவர்களுக்காகத் தம்மையே தியாகஞ் செய்பவர். மற்றவர்களுக்கு இயலாததையும் செய்பவர் என்பதால்

அவர் வெகு சிலரே என்க.
சிறியர்—ஈனர், கயவர்.

இவ்விருசாராருக்கிடையிலேதான் பெரும் பகுதியான பொதுமக்கள் உளர். அதனால் வள்ளுவரின் இரண்டாம் வாசகம் செயற்குரிய என்றே இருக்கவேண்டுமென்பர் ஆ. பெ. விசுவநாதம். நூற்றுக்குத் தொண்ணூறு வீதமான மக்களைக் கயவர் என்று வள்ளுவர் அழைக்கமாட்டார் என்பது நிசமே. எழுதுவோர் தவறும் படிப்போர் கவனவீனமுமே குழுக்குக் கவரக் காரணமென்க.

கருத்துப்பிழையான வாசகத்தை நலிவிசையாலும் படுத்தலோசையாலும் மாற்றமுடியாது. ஓசை புலனைக்கவர்ந்து பொருள் காணும் புத்திக்கு உதவுவது. ''காதுகேளாதவர் கண்ணில் காண்பதையே கூறுவது போல ஓசைக்கூறு காணுதவர் பொருட்கூறு மட்டும் கண்டு அதற்கேற்ப மூலமாற்றிக் கூறுகின்றனர் என்னலாம்'' (கா. அப்பாதுரை). பொருள் பிழையானுல் ஓசை ஏதுக்குதவும்? இங்கு கண்ணுக்கும் காதுக்கும் சம போட்டியல்லப் புத்திக்கும் புலனுக்கும் புரியும் பொருளே வேண்டப்படுவது. அரிய செய்வோர் பெரியர், அரிய செய்யாதவர் சமானியர். (இவர் உரியன செய்வோர்). உரிய செய்யாதார்தான் சிறியர் எனவேண்டும்.

''நாகரீக சமுதாயத்தின் பொதுநிலை இந்த இரண்டுக்கும் இடைப்பட்டது''. ''முடியாத காரியத்தை முடியாதெனவே முயலாமல் விட்டு விடுபவர்கள் நாகரிக சமுதாயத்தில் வாழத்தக்க மனிதரே ஆகமாட்டார்கள். அவர்கள் சிறியவர்கள். மாவுடன் மாக்களாக எண்ணப்படும் ஐந்தறிவு உடையவர்கள் அவர்கள்—பொருட்பாலின் கடைசி அதிகாரம் குறித்த கயவர் அவர்களே.'' செயற்கரிய செய்யாதவர் நிலை இதுவேயாயின் இதை எழுதியவர், வள்ளுவர் கொள்கைப்படி, பெரியரா, சிறியரா என வினவவேண்டும்.

இயலாதது, முடியாதது பற்றி இக் குறளிற் பேச்சே கிடையாது. அரியது, பிரயாசையானது செய்வோரே மெச்சற்குரியர். அதற் கெதிராக இலகுவானது, சுகமானது செய்வோர் உள்ளன ரென்பது அவாய் நிலையாகக் கொள்ளப்பட வேண்டியது. இங்கு இகழப் படுவோர் இதிற் கீழானவர். இலகுவானதையும் செய்யாதவர். கடமையானது ஒரு போதும் கடினமில்லை சிரமமானுல் முன் செய்ய வேண்டிய ஆயத்தமில்லையென்பதே பொருள். பாடம் படிக்காதவர் பரீட்சை எழுதுவது எப்படி? இல்லாததைச் செய்ய முயல்வது இயற்கைக் கெதிர், மதியீனம், காலிழந்தவன் நடக்க முடியுமா? தடியாலோ ஊர்த்தியாலோ போதல் நடத்தலில்லையே!

நீத்தார் வேறெவர்க்கும் செற்கரியது செய்தார். ஒரைந்தும் காத்தது மட்டுமல்லப் பொறிவாயில் ஐந்தவித்து வைப்புக்கு வித்தானுர். குற்றவாளிகளை மீட்கக் குற்றமில்லாதவர் கொலையுண்டு மன்னிப்படையும் வழிகாட்டினுர். அவரைப் பின் சென்றே சிறியர் தானும் பெரியராகி வீடு அடைய வேண்டும.

**சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின்**
**வகை தெரிவான் கட்டே யுலகு**

உலகு— உலகில் வாழும் மனித இனம். சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்று— ''கண்டு கேட்டுண்டுயிர்த்து உற்றறிதல்'' எனப்படும். ஐந்தின் வகை தெரிவான் கட்டே— ஐம்புலன்களின் கூறுபாட்டை ஆராய்ந்த றிபவனுலே ஆக்கம் பெறும்.

வகை— பகுதி, வரயறை, தத்துவம், பிரயோகம்.
தெரிதல்— பிரித்து ஆராந்து அறிதல்.
கட்டு— இடம். ஏ —தேற்றேகாரம்.

ஐந்து— புலன்கள். தொல்காப்பியத்தில் இவற்றின் ஒழுங்கு வேருக ஊறு சுவை நாற்றம் ஒளி ஓசை என வருகின்றது. உயிரினங்களை இதின் படியே ஐந்து பிரிவாக வகுக்கிருர். ஆனுல் அந்தப் பிரிவு விஞ்ஞானத் துக்கு ஒத்துவரவில்லை. மிருக அறிவின் செறிவுப்படி சுவை யூறு மணம் கேள்வி காட்சியென்றே வரவேண்டும். அறிவுப் படியாயின் அதற்குமாறு பாடாக வரும்,

சுவை— நாவிலே பொருள் கரைவதால் ஏற்படும் இனிப்புப் புளிப்பு, உவர்ப்புத் துவர்ப்புக், கார்ப்புக் கைப்பு என்பன.

ஊறு—பொருளைத் தொட்டு உணரும் வெட்பம் தட்பம், மென்மை வன்மை போன்றவை.

மணம்—பொருளின் துகள் மூக்கிற் படுவதால் உண்டாகும் நாற்றம்.

கேள்வி— 5 விஞடியில் ஒருமைல் விரையும்ஒலி அலைகள் காதிற் படுவதால் எழும் ஓசை

காட்சி— 1 விஞடியில் 186, 000 மைல் பாயும் ஒளி அலைகள் கண் ணில் படுவதாலெழும் வெளிச்சம்.

கீழான மூன்றிலும் பொருள் உடலிலே பட்டுப்படிந்து கரைந்து உணர்ச் சியை யுண்டாக்குவன. மேலான இரண்டும் பொருளைக் கண்டு கேட்டு உணர்வன. ஆருவதறிவு மனத்திலே பகுத்தறிவது, நியாய புத்தியென்பது மதுவே.

பொறிகள் புலனுணர்ச்சியின் வாயிலும் உபகரணமும் மட்டுமே. உணர்ச்சியறிவு மூளையிலேதான் நடைபெறுகிறது. மிருகத்துக்கு வெளிப் புலனைந்தோடு உட்புலன்களும் நான்குண்டு. இவற்றைப் பொதுணர்வு, ஞாபகம், ரூபிகரம், மதிப்பு என்பர். இவையோடு இயல்பூக்கங்கள் நாட் டங்கள் என்று அறிவு வரையறைகளுண்டு.

இவற்றின் மேலாக மனிதனிடமுள்ள புத்தி நியாயிக்கும் சக்தியுடை யது. உட்பொருளை ஆய்ந்து அறியவும் தான் செய்வதைத் தெரிந்தெடுக் கவும் கூடியது. இதையோ வேறெதையோ, செய்யவோ செய்யாது விடவோ வல்லது. இச்சுயாதீனமே மனிதனை மிருகத்திலும் மேலான பிற வியாக்குவது.

மிருகம் சடவாழ்வு மட்டுமுடையது. இவ்வுலகோடு அதின் சீவியம் முடிந்துவிடுகிறது. மனிதனுக்கோ காலத்திலும் பரப்பிலும் கட்டுப்படாத சித்து வாழ்வுண்டு. அது அழியாதது. நித்தியத்துக்கும் நிலைத்திருக்கக் கூடியது. ஆகவே, மனிதன்தன் புலனறிவு உள்ளறிவு பகுத்தறிவு சுய நிர்ணயம் யாவையும் பாவித்து உயிர் வாழ்வை வளர்க்க வேண்டும். அவனிலுள்ள மிருகம் மனிதனுக மாறித் தேவனுக முதிர்வது அவனது முயற்சியாலாகும். உண்மையான கடவுளை அறிந்து அவன் காட்டும் நன்மையான வழியிலே நடந்து கடைசிக்கதியான அவனேடு ஒன்றிப்பதே மனித வாழ்க்கையின் இலட்சியமாகும்.

புலனின்பம் பேரின்பம் வரைவளரவேண்டும். புலனடங்கி உளமொடுங்கி உயிர் வளர்வதே அதற்கு வழி. ''கடுப்பும் முனைப்பும் மிக்க மனிதரின் புலன்களின் அறிவுகள் நுகர்வுகள் அவாக்களை பதனுறுவிக்கவே'' நீத்தார் தம்மை அவியுணவாக்கினர். அவரைப் பின்பற்றி அடக்க ஒடுக்கம் அனு சரிக்கும் துறவிகளே அறிவிலும் ஆற்றலிலும் உயர்ந்து உலகின் கண்கள் போல விளங்குவர்; மக்களை வழிநடத்தி இன வளம் விளைவிப்பர்.

### 28. நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
### மறைமொழி காட்டி விடும்.

நிறைமொழி மாந்தர் பெருமை--நிறைவான வார்த்தைகளையுரைத்த நீத்தாரின் மகிமையை, நிலத்து மறைமொழி காட்டிவிடும்--இவ்வுலகிலே வேதவாக்கியம் பகிரங்கப்படுத்தும்.

மொழி—பேச்சு, வாய்ச்சொல், மனக்கருத்தை வெளிக்காட்டும் ஒலி அடையாளம். ஒலியும் கருத்தும் சேர்ந்தாற்தான் மொழி.

நிறைமொழி--நிறைவானது, எடையுள்ளது. கனமான வாழ்விலி ருந்தே நல்லெண்ணங்களுதிக்கும். அதிலிருந்து நிறைமொழி தொடரும்'

நிறைவாழ்வுடைய கடவுளிடம் மட்டுமே நிறைமொழி இருக்கமுடி யும். அவருடைய அறிவிப்பின் மூலம் மனிதன் தற்காலிகமாக நிறை மொழி கூறமுடியும்.

மாந்தர்--மா, மக+அந்தர்=பெருமை, அழகு உடைய தந்தை, தலை வர். ஒருமனிதர் நிறைமொழி பேசுவதானல் அவர் கடவுளாகவே இருக்க வேண்டும். பலரை விளங்கினல் அவர்கள் அவருடைய தூதுவராயிருக்க லாம்.

பெருமை--சிறப்பு. பெருமம், பெருமான், பிரமன் இதிலிருந்து வந் தவையே.

நிலத்து--உலகிலே, மனிதரிடையே. மனிதர் மட்டுமே மொழிமூலம் கருத்தறிவிப்பவர்கள்.

மறைமொழி--மந்திரம். ''நிறைமொழி மாந்தர் ஆணையின் கிளக்கும்

மறைமொழிதானே மந்திரமென்பர்.'' (தொல்காப். 3. 8. 171). மன்+ திறம், நிலையான வல்லமையுடையது. பழைய புலவரே வேதம் தந்தவ ரென்றும் அதிலுள்ள மந்திரங்கள் சுயசக்தியுடையவையென்றும் மக்கள் நம்பினர். ஆனால், வேதமொழியின் வல்லமை அதின் ஒலியிலல்ல, ஆதி முதல்வனோடு அதுகொண்ட தொடர்பினால் என்க. அதின் இரகசியம் அதின் வாய்ப்பாட்டைப் பொருள் விளங்காவிடினும் உச்சரித்து ஓதுவதால் வரும் சக்தியென்று மக்கள் அஞ்சி வணங்கினர். ஆனால் அதின் பொரு ளையுணர்ந்து அதின்படி நடப்பதால் உண்டாகும் அன்பும் அருளும் கட வுளைக் கண்டுகளிக்கும் பகுதியுமே மந்திரத்தின் சித்திக்கு அடையாளம். முனிவரின் ஆசியுரையோ சாபமோ பலிப்பதென்பது மந்திர சக்தியாலல்ல. முதியோரிடம் காந்தசக்தி போன்ற மனோசக்தியுண்டு. அதனால் அவர்கள் மற்றவர்களுடைய மனத்திலும் உடலிலும் தாக்கம் உண்டாக்கமுடியும். கண்ணூறு வாயூறு என்பனவும் இதனாலேதான் என்பது மனோதத்துவ விஞ்ஞானமறிந்தது.

காட்டி—காட்டு, காண்.
விடும்—எண்பிக்கும், முடிவுகட்டும்.

நீத்தார் மானிட சட்டைசாத்திய கடவுளாயின் அவரை நிறை மொழி மாந்தர் என்பது பொருத்தமே. கடவுளிலே மறைந்திருந்த உண் மையை அவர் உலகிலே சீடருக்கு அறிவித்தார். அவர்கள் அதை எல் லாருக்கும் அறிவித்தனர். அதனால், நீத்தாரின் பெருமை வேதவாக்கியத் தின் மூலம் உலகிலே பரவிற்று. மறைமொழி மூலம் மனிதஇனம் கட வுளை அடையவும் வழி திறந்தது.

**29. குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி**
**கணமேயுங் காத்த லரிது.**

குணம் என்னும் குன்று ஏறி நின்றார் வெகுளி—நற்பண்புகளின் உயர்நிலை அடைந்து அதில் நிலைத்தவர்களின் சினத்தை. கணம் ஏஉம் காத்தல் அரிது—எவராலும் ஒரு நொடிநேரந்தானும் தாங்க முடியாது.

குணம்—தன்மை, பண்பு. மனுப்பண்புகள் முதிர்ந்து தேவதன்மை யடையும் போது குணமாகும். அதுவே மெய்யுணர்வு.

குன்று—குவடு, மலையின் முகடு, மழைகுறைத்த மலை.

ஏறி--உயர முயன்று செல்லல். பண்பிலே வளர்வது பிரயாசையான வேலை.

நின்றார்--சான்றோர் தம் நிலை தளம்பாது நின்றால் மாத்திரமே மற் றவரை உயர்த்த முடியும்.

வெகுளி--சீற்றம் போன்றது. முனிவு, வெகுளி என்பவற்றிலே சுய நல நோக்கில்லை. அதை அவிகாயம் எனலாம். பொது நன்மை கருதி முயல்வோர் மற்றவர் செய் தவறு கண்டு வருந்துவர், மனமுடைவர்.

பிழைகளிலே பிடிவாதமாயிருப்பவர்மேல் வெறுப்புணர்ச்சி யுண்டாகி வெகுளுவர். அது சிறியோரைப் பாதிப்பது அனுபவம். பெரியார், சான்றோர் அதிக மனோசக்தி வாய்ந்தவராதலால் அவர்களின் வெறுப்பைத்தடுக்க முடியாது, தாங்க இயலாது சிறியோர் துவள்வர். ''மாதா மனமெரிய வாழாய் ஒரு நாளும்'' என்பதும் அதே காரணத்தாற்தான்'

கணம்--கண்ணிமைப் பொழுது, சிறுகாலம்,

ஏ--தேற்றம். உம்--இடைச்சொல், தானும். எவராலும் என்பது அவாய் நிலை. நீத்தார் நிலை எய்திய பெரியார் பொது மக்களை மட்டுமல்ல ஆளுநரையும் நடத்துவர். அதிகாரத்தினாலல்லப் பண்பின் செல்வாக்கினால் அவர்கள் யாவரையும் திருத்தி வழிநடத்துவர்.

அரிது—தாங்கத் தடுக்க முடியாத வெகுளி விலக்கப்படல் வேண்டும். புத்தியைப் பாவிக்கப் பழகினால் அவர்கள் விரும்புவதையே செய்வோம். வெகுளி வராது.

ஒழுக்கவழி காட்டவந்த இறைவனே நற்குணங்களின் கொடுமுடியானவர். அவர் பின்னே மேல் நோக்கி நடப்பது அறிவுள்ள மனிதனின் கடமையாகும். கோபம் கடவுளுக்குப் பொருந்தாது. அவர் மாறாத குணக்குன்று. பிழை செய்யும் மனிதன் இயற்கையிலே உள்ள தண்டனையைத் தன் மேல் வருவித்துக்கொள்கிறான். அறியாமை, உணராமை அதைத் தடுக்கமுடியாது. அதையே தேவகோபம், முனிவு என்கிறோம். மனிதர் நியமிக்கும் தண்டனை பிழையைத் திருத்த வழியாக வேண்டும். பழி• வஞ்சம் தீர்ப்பதாயின் அதனாற் பயனேதுமில்லை. நீத்தார் ஒரு கணமேனும் கோபம் கொள்ளார், குறைகளை மட்டும் கண்டிப்பார். அவருடைய எச்சரிக்கையை ஏற்கவிரும்பாதோர் இயற்கையின் தண்டனையை ஒரு நொடி நேரமேனும் தாங்கமாட்டார்.

நம்மவருடைய புராணங்களிலே தோன்றும் முனிவர் சினக்குன்றுகளாகவே காட்சியளிக்கின்றனர். அவர்கள் அளிக்கும் வரங்கள் விபரீதமாயும் சாபங்கள் அநியாயமாயும் இருப்பதை நியாய புத்தியைப் பாவித்துப் படிக்கும் எவரும் அறிவர். கற்பனைக் கவர்ச்சியாலும் செய்யுட்சிறப்பாலும் அஞ்சப்புண்டு புராணங்களிலுள்ள தெல்லாம் உண்மையென்று பலர் நம்புகின்றனர். அம்முனிவர் மாதிரிமனிதர் என ஏற்று அழிகின்றனர்.

30. அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான்.

அறவோர்—புண்ணியசீலர். எவ்வுயிர்க்கும் செம்தண்மை பூண்டு ஒழுகலான்—ஒவ்வொரு உயிர்மேலும் கருணை கொண்டு நடப்பதால். அந்தணர் என்போர்—அந்தணர் என்று புகழப்படுவர்.

மற்று—வினைமாற்று. இன்னுமதிகம், அறத்தோடு அருளும் அனுசரிப்பர் என்பதால்.

அறவோர்—இல்லறதுறவறத்தில் அன்பும் அருளும் அயலெல்லாம் பரப்புபவர்.

செந்தண்மை — செம்மை + தண்மை — உண்மையும் நன்மையும் சேர்ந்த கருணையுள்ளம்.

எவ்வுயிரும் — ஒவ்வொரு உயிரும், எல்லா உயிரும். மனிதர் மட்டுமல்ல, மிருகம் தாவரமும் கூட.

பூண்டு -- பூண் -- அணிந்து, கைக்கொண்டு.

ஒழுகல் -- தொடர்ந்து பாய்தல், வாழ்தல்.

அந்தணர் -- அம் + தண் + அர் -- இன்பநலம் வாய்ந்த அருட்பாசக் கனிவுடையவர். அந்தம் + அண் + அர்—முடிவைக் கிட்டினோர். வீடடையத் தகுதி பெற்று அங்கு போகத் தயாராயிருப்பவர்.

என்போர்—சிறப்புப் பெயரால் அழைக்கப்படுபவர். பார்ப்பார், பிராமணர் சாதிப்பெயர். அந்தணர் என்பது பண்புப்பெயர்.

பிறப்புரிமையாற் பூணூல் அணிபவர் அல்ல அந்தணர். உயிர்கள் மீது தண்ணளிகொண்டவரே உண்மையான அந்தணர். சாதிப் பிராமணர் அந்தப்பெயரையும் அபகரித்துக் கொண்டனர். அவர்கள் ஆக்கித்தந்த நால்வேதம் ஆதிமுதல்வனை கடவுளோடு தொடர்பு காட்டவில்லை. அதைத் தொடர்ந்த பிரமாணங்கள் உபநிடதங்களும் அவனை அறியவில்லை. அவனுடைய குணங்களைச் சொல்லி அவன் பெயரால் அநேகரை ஆக்கி வைத்தனர். எனவே, திருவள்ளுவர் வேறொரு அந்தணரைப் பின்செல்ல வேண்டியதாயிற்று. நீத்தாரின் சீடர் செய்த மறைநூலிலே கடவுள், மனிதன், உலகம் பற்றிய போதனை உண்டு. வள்ளுவரும் தமது அறநூலில் அந்தப் பிரமாணங்களின் படி மனிதன் உலகில் எவ்வாறு ஒழுகிக் கடவுளை அடைய வேண்டுமென்று படிப்பிக்கிறார்.

வணங்குவாய் செகசோதி ஒருவனாகி
  மானிலத்தை ஒருநொடியில் வகுத்தே மண்ணில்
குணமான மனிதரையும் படைத்தபின்பு
  குவலயத்திற் தானுதித்துக் குருவாய் வந்து
சன்மான சமுசார மொன்றில்லாமல்
  சந்நியாசி போலிருந்து தவத்தைக் காட்டி
அன்பான சித்தர்களை இருத்திப் போட்டு
  அகன்ற தலம் சென்றவரை அண்டுவாயே.

— அகத்தியர் ஞானம் 23.

கடவுள் தன் மகிமையை மறைத்து மனிதனாய் வந்து ஒழுக்கநெறி காட்டினார் என விவிலிய பனுவல் படிப்பிக்கிறது. வள்ளுவர் நீத்தார் பெருமையில் நவிலும் சிக்கலான கருத்துகள் அதிலே தெளிவாகத் தோன்றுவது அதிசயமே.

பிலிப்பியர் 2. 5. கிறிஸ்து யேசுவில் இருந்த மனநிலையே உங்களிலும் இருப்பதாக. 6. கடவுள் தன்மையில் விளங்கிய அவர் கடவுளுக்கு இணையாயிக்கும் நிலையை விடாமல் பிடித்துக்கொண்டிருக்க வேண்டியதொன்றாகக் கருதவில்லை. 7. ஆனால் தம்மையே வெறுமையாக்கி அடிமையின் தன்மைபூண்டு மனிதருக்கு ஒப்பானார். 8. மனித உருவில் தோன்றித் தம்மைத்தாழ்த்திச் சாவை ஏற்கும் அளவுக்கு, அதுவும் சிலுவைச் சாவையே ஏற்குமளவுக்கு கீழ்ப்படியலானார். 9. ஆதலாற்தான் கடவுள் அவரை எல்லாருக்கும் மேலாய் உயர்த்தி எப்பெயர்க்கும் மேலான பெயரை அவருக்கு அருளினார்.

அருளப்பர் 3. 31. மேலிருந்து வருபவன் எல்லாருக்கும் மேலானவன் மண்ணிலிருந்து உண்டானவன் மண்ணுலகைச் சார்ந்தவன். அவன் மண்ணுலகைச் சார்ந்தவனாகவே பேசுகிறான். விண்ணுலகிலிருந்து வருபவரோ எல்லாருக்கும் மேலானவர். 32. தாம் கண்டதையும் கேட்டதையும் குறித்தே அவர் சாட்சியம் பகர்கின்றார். ஆனால், அவருடைய சாட்சியத்தை எவனும் ஏற்றுக் கொள்ளுகிறதில்லை. 33. அவருடைய சாட்சியத்தை ஏற்றுக் கொள்வதோ, கடவுள் உண்மையானவர் என்பதற்கு அத்தாட்சி தருவது போலாகும். 34. ஏனெனில், கடவுள் அனுப்பியவர் கடவுளின் சொற்களைக் கூறுகிறார்; ஏனெனில் கடவுள் அவருக்கு ஆவியை அளவுபார்த்துக் கொடுப்பதில்லை. 35. தந்தை மகன் பால் அன்பாகி அனைத்தையும் அவர்கையில் ஒப்படைத்துள்ளார்.

1 கொரிந்தியர் 15. 20. ஆனால் உள்ளபடி, இறந்தோரிடமிருந்து கிறிஸ்து உயிர்த்தெழுந்தார்; துஞ்சினோரின் முதற்கனி அவரே. 21. மனிதன் வழியாய்ச் சாவு உண்டானது போல, மனிதன் வழியாகவே இறந்தோர்க்கு உயிர்த் தெழுதலும் உண்டு. 32. ஆதாமில் அனைவரும் இறந்தது போல, கிறிஸ்துவில் எல்லாரும் உயிர்பெறுவர்.

ஆதியாகமம் 3. 14. அப்பொழுது ஆண்டவராகிய கடவுள் பாம்பைப் பார்த்து: நீ அவ்வாறு செய்ததால் பூமியிலுள்ள எல்லாப் பிராணிகளிலும் சபிக்கப்பட்டதாய், உன்வயிற்றினால் ஊர்ந்து, உயிரோடிருக்கும் வரை மண்ணைத் தின்பாய். 15. உனக்கும் பெண்ணுக்கும், உன்வித்துக்கும் அவள் வித்துக்கு மிடையே பகையையுண்டாக்குவோம்; அவள் உன் தலையை நசுக்குவாள்! நீயோ அவளுடைய குதிக்காலைத் தீண்டமுயலுவாய் என்றார்.

1 அருளப்பர் 3. 4. பாவஞ் செய்கிற எவனும் திருச்சட்டத்தைமீறுகிறான். ஏனெனில் திருச்சட்டத்தை மீறுதலே பாவம். 5. பாவங்களைப் போக்குவதற்காகவே அவர் தோன்றினார் என்று உங்களுக்குத் தெரியும்.

அவரிடமோ பாவமென்பதில்லை. 6. அவருள் நிலைத் திருக்கிற எவனும் பாவத்தில் வாழ்வதில்லை. பாவத்தில் வாழும் எவனும் அவரைக் கண்டதுமில்லை, அறிந்ததுமில்லை. 9. கடவுளிடமிருந்து பிறந்தவன் பாவஞ் செய்வதில்லை. ஏனெனில் அவரிட்ட வித்து அவனுக்குள் நிலைத்திருக்கிறது. அவன் பாவத்தில்வாழ முடியாது; ஏனெனில் அவன் கடவுளிடமிருந்து பிறந்திருக்கிறான்.

ஞானகமம். 2. 12. நீதிமானை நாம் மடக்கப் பார்ப்போம், ஏனெனில் அவன் நமக்குத் தொல்லையாயிருக்கிறான். நம் நடத்தைக்கு அவன் பகையாளியாயிருக்கிறான். திருச் சட்டத்திற்கு எதிராய் நாம் செய்யும் பாவங்களைக் கண்டிக்கிறான். நமது பயிற்சிக்கு ஏதிரான பாவங்களை நம் மேல் சுமத்துகிறான். 13. கடவுளைப் பற்றிய அறிவு தனக்கிருப்பதாகச் சொல்லிக்கொள்கிறான். ஆண்டவரின் குழந்தை என்று தன்னைக் கூறிக் கொள்கிறான். 14. நம் சிந்தனைகளின் நடமாடும் கண்டனவுரையாயிருக்கிறான். 15. அவனைக் காண்பதே நமக்குத் தாங்கமுடியாததாய் இருக்கிறது; ஏனெனில் அவன் நடத்தை மற்றவர்களின் நடத்தை போலில்லை. அவனுடைய போக்கே தனிப்பட்டது. 16. ஈனர்கள் என்று நம்மை அவன் எண்ணுகிறான். அசுத்தானவை என்று நம் நெறிகளை அவன் விலக்குகிறான். நீதிமான்களின் கடைசி முடிவை ஆவலாய்த் தேடுகிறான். கடவுள் தன் தந்தை என்று சொல்லி இறுமாந்திருக்கிறான். 17. அவனுடைய சொற்கள் உண்மையா என்று பார்ப்போம். அவன் வாழ்வின் முடிவில் என்ன நடக்குமென்று சோதித்தறிவோம். 18. ஏனெனில் நீதிமான் கடவுளின் மகனாயின், அவனுக்கு அவர் துணை செய்வார், மாற்றார்கையினின்று அவனை விடுவிப்பார். 19. அவனுடைய சாந்தத்தை அறிந்துகொள்ளவும் பொறுமையைச் சோதித்துப் பார்க்கவும் அவனை நிந்தை வேதனைப் படுத்திப் பார்ப்போம். 20. வெட்கத்துக்குரிய சாவுக்கு அவனை ஆளாக்குவோம் ஏனெனில், அவன் சொற்படி அவனுக்குத் தான் கடவுளின் துணையிருக்குமே. 21. பொல்லாதவர்கள் இவ்வாறு எண்ணி ஏமாந்துபோயினர். ஏனெனில் அவர்களின் தீய எண்ணமே அவர்களைக்குருடாக்கிவிட்டது. 22. கடவுளின் மறை பொருட்களை அவர்கள் அறியார்கள், தூய வாழ்வுக்குக் கைமாறு உண்டு என்பதில் அவர்களுக்கு நம்பிக்கையில்லை. 23. ஏனெனில், அழியாமைக்கென்றே கடவுள் மனிதனைப் படைத்தார், தமது காலங்கடந்த தன்மையின் சாயலாகவே அவனை உண்டாக்கினார். 24. ஆனால் பசாசின் பொறாமையால் சாவு உலகில் நுழைந்தது. 25. அவன் பக்கம் சேர்கிறவர்கள் அதை நுகர்வார்கள்.

அருளப்பர் 10. 14. நல்ல ஆயன் நானே. தந்தை என்னை அறிவது போலவும் நான் தந்தையை அறிவது போலவும் என் ஆடுகளை நானறிவேன்; அவையுமென்னை அறிகின்றன. 15. என் ஆடுகளுக்காக என்

உயிரைக்கொடுக்கிறேன். *16.* இக்கிடையைச் சேராத வேறு ஆடுகளும் எனக்கு உள்ளன. அவற்றையும் நான் கூட்டிச் சேர்க்க வேண்டும். அவை என் குரலுக்குச் செவிகொடுக்கும். ஒரே ஆயனும் ஒரே மந்தையுமுண்டாகும். 18. எனதுயிரை என்னிடமிருந்து பறிப்பவன் எவனுமில்லை. நானுகவே என்னுயிரைக் கையளிக்கிறேன். உயிரைக்கையளிக்கவும் எனக்கதிகார முண்டு. அதனை மீண்டும் பெற்றுக்கொள்ளவும் எனக்கு அதிகார முண்டு. இதுவே என் தந்தையிடமிருந்து நான் பெற்றுக்கொண்ட கட்டளை, என்ருர்.

மத்தேயு 28. 2· இதோ பெரிய நில நடுக்க முண்டாயிற்று. ஆண்டவரின் தூதர் வானில் நின்று இறங்கிவந்து, கல்லைப் புரட்டி, அதின் மேலமர்ந்தார். 3. அவருடைய தோற்றம் மின்னல் போன்றும் உடை உறை பனிபோல் வெண்மையாயுமிருந்தன. 4. காவலர் அவரைக் கண்டு அஞ்சிநடுங்கிச் செத்தவர் போலாயினர். 5. வானதூதர் பெண்களை நோக்கி; அஞ்சாதீர்கள், சிலுவையில் அறையுண்டயேசுவைத் தேடுகிறீர்கள் என்று அறிவேன். 6. அவர் இங்கேயில்லை. தாம் கூறிய படியே உயிர்த்து விட்டார். வாருங்கள், ஆண்டவரைக் கிடத்திய இடத்தைப் பாருங்கள். 7. விரைந்து செல்லுங்கள், அவர் இறந்தோரிடமிருந்து உயிர்த்து விட்டாரென்று அவர் சீடருக்குச் சொல்லுங்கள். இதோ! அவர் உங்களுக்கு முன் கலிலேயாவுக்குப் போகிருர் அங்கே அவரைக் காண்பீர்கள். இதோ, உங்களுக்குச் சொல்லிவிட்டேன், என்று சொன்னுர். 8. அவர்களும் அச்சத்துடனும் மிகுந்த மகிழ்ச்சியுடனும் விரைவாகக் கல்லறையை விட்டகன்று அவருடைய சீடருக்கு அறிவிக்க ஒடினுர்கள்.

எபேசியர் 2. 2: ஒருகாலத்தில் வான்வெளியின் தலைவனுக்கு அடங்கி இவ்வுலகப் போக்கின்படி பாவ வழியில் நடந்தீர்கள். இறைவனுக்குக் கீழ்ப் படியாத மக்களிடையே இப்பொழுது செயலாற்றும் அந்த ஆவிக்குப் பணிந்து இருந்தீர்கள்

அருளப்பர். 1. 1. ஆதியிலே வார்த்தை இருந்தார். அவ்வார்த்தை கடவுளோடு இருந்தார். அவ்வார்த்தை கடவுளாயுமிருந்தார். 14. வார்த்தை மனுவுருவானுர்; நம் மிடையே குடிகொண்டார். அவரது மாட்சிமையை நாங்கள் கண்டோம். தந்தையிடமிருந்து அவர் பெற்ற இம்மாட்சிமை ஒரே பேறுன அவருக்கு ஏற்ற மாட்சிமையே. ஆகவே அவர் அருளும் உண்மையும் நிறைந்து விளங்கினுர்.

லூக்கா.2 2 19. மேலும் அப்பத்தை எடுத்து, நன்றி கூறி, பிட்டு அவர்களுக்கு அளித்து: இது உங்களுக்காக அளிக்கப் படும் என் உடல், இதை என் நினைவாகச்செய்யுங்கள், என்ருர். 20. அவ்வாறே உணவு அருந்திய பின் கிண்ணத்தை எடுத்து; இக்கிண்ணம் உங்களுக்காகச் சிந்தப்படும் என் இரத்தத்தினுலாகும் புதிய உடன் படிக்கை. 21. என்னைக்

காட்டிக் கொடுப்பவன் இதோ என்னோடு பந்தியிலமர்ந்து உண்ணுகிறான். 22, மனுமகன் தேவ ஏற்பாட்டின்படி போகத்தான் போகிறார். ஆனால் அவரைக் காட்டிக்கொடுப்பவனுக்கு ஐயோ கேடு, என்றார்.

1. 47. என் மீட்பராம் கடவுளை நினைந்து என் இதயம் களிகூருகின்றது. 48. ஏனெனில், தாழ் நிலை நின்ற தம் அடிமையைக் கடைக்கண் நோக்கினார். இதோ இந்நாள் முதல் எல்லாத் தலைமுறைகளும் என்னைப் பேறுடையாள் எனப் போற்றுமே. 49. ஏனெனில், வல்லமை மிக்கவர் எனக்கு அரும்பெரும் செயல் பல புரிந்தார். அவர் பெயர் புனிதமாமே.

68. இஸ்ராயேலின் கடவுளான ஆண்டவர் போற்றி ஏனெனில் தம் மக்களைத் தேடிவந்து விடுவித் தருளினார்.

7. 28. நானுங்களுக்குச் சொல்லுகிறேன்: பெண்களிடம் பிறந்தவர்களுள் அருளப்பருக்கு மேலானவர் யாருமில்லை. ஆயினும் கடவுளுடைய அரசில் மிகச் சிறியவன் அவரினும் பெரியவன்.

1 இராயப்பர் 1. 17. நீங்கள் தந்தை என அழைக்கும் இறைவன், ஆளைப்பார்த்துத் தீர்ப்புக் கூறாதவர்; அவனவன் செயல்கள்படி தீர்ப்புக் கூறுபவர். ஆதலால், நீங்கள் இவ்வுலகில் அந்நியராய் வாழும் காலமெல்லாம் அவருக்கு அஞ்சிநடந்து கொள்ளுங்கள். 18. உங்கள் முன்னோரிடமிருந்து வழி வழியாய் வந்த பயனற்ற நடத்தையினின்று உங்களை விடுதலை ஆக்குவதற்குக் கொடுக்கப்பட்ட விலை என்னவென்று உங்களுக்குத் தெரியும். 19, அது அழிவுறும் பொன்னும் வெள்ளியுமன்று மாசு மறுவற்ற செம்மறிபோன்ற கிறிஸ்துவின் விலை மதிப்பில்லாத இரத்தமே. 20. உலகம் தோன்று முன்னே முன்னறியப் பெற்ற இவர் உங்களுக்காக இந்த இறுதிக்காலத்தில் வெளிப்பட்டார். 21. இறந்தோரினின்று அவரை உயிர்ப்பித்து மகிமைப் படுத்திய கடவுள் மீது நீங்கள் விசுவாசம் கொள்வது அவரால் தான். இதனால் உங்கள் விசுவாசமும் நம்பிக்கையும் கடவுள் மீது ஊன்றியிருக்கின்றன.

வெளிப்பாடு 21. 2. அப்போது புதிய யெருசலேம் ஆகிய பரிசுத்த நகரம் கடவுளிடமிருந்து விண்ணினின்று இறங்கிவரக் கண்டேன். மணமகனுக்கென அலங்கரிக்கப்பட்ட மணமகளைப் போல் அது மலர்ந்தது. 3. பின் அரியணையிலிருந்து ஒரு பெருங்குரலைக் கேட்டேன். அக்குரல்: இதோ, கடவுளின் இல்லம் மனிதரிடையே உள்ளது; அவர்களோடு அவர் குடிகொள்வார். அவர்கள் அவருக்கு மக்களாயிருப்பர்; கடவுள் தாமே அவர்களோடிருப்பர். 4. அவர்களுடைய கண்ணீரனைத்தையும் துடைத்து விடுவார்; இனிச் சாவில்லை, புலம்பலில்லை, அழுகையில்லை, நோவில்லை, முன்னிருந்தவை மறைந்து போயின என்றது.

உபாகமம்: 18. 17. ஆண்டவர் என்னை நோக்கி: இவர்கள் சொன்ன தெல்லாம் சரியே, 18. உன்னைப் போல் ஒரு இறை வாக்கினரை நாம் அவர்களுக்காக அவர்களுடைய சகோதரரின் நடுவிலிருந்து தோன்றச் செய்து, நம் வார்த்தைகளை அவருடைய வாயில் வைப்போம். நாம் கற்பிப்பதையெல்லாம் அவர் அவர்களுக்கு சொல்லுவார். 19. நமது பெயரால் அவர் சொல்லும் வார்த்தைகளுக்குச் செவி கொடாதவனை நாம் தண்டிப்போம்.

2 அரசர். 5. 13. அந்நேரத்தில் அவனுடைய ஊழியர்கள் அவனை அணுகி, தலைவ, இறை வாக்கினர் இதைவிடப் பெரிய காரியத்தைச் செய்யக் கட்டளையிட்டிருந்தாலும் நீர் அதைக் கட்டாயம் செய்திருப்பீர். அவர், குளிக்கப் போம்; சுத்தமாவீர் என்ற போது தாங்கள் எவ்வளவு மரியாதையாய்க் கேட்டுக்கொள்ள வேண்டியவராயிருக்கிறீர்? என்றனர். 14. எனவே, நாமான் புறப்பட்டுச் சென்று கடவுளின் மனிதர் தனக்குக் கட்டளையிட்டிருந்தபடி யோர்தான் நதியில் ஏழுமுறை குளித்தான். இப்படிச் செய்ததால் அவனது உடல் நலம் பெற்று ஒரு சிறு குழந்தையின் உடலைப்போல் மாறினது; அவனும் முழுதும் தூய்மையானான்.

ரோமர் 9. 22. தமது சினத்தைக் காட்டவும், தமது வல்லமையைத் தெரியப்படுத்தவும் அவர் விரும்பியபோதிலும், அழிவுக்கும் அவருடைய சினத்துக்கும் இலக்கான கலன்கள் மட்டில் கடவுள் மிக்க பொறுமையாய் இருந்தாராயின், யார் என்ன சொல்ல முடியும்? 23. அதன் மூலம் தம்மாட்சிமையையும் இரக்கத்தையும் பெறுமாறு அவர் தயாரித்திருந்த கலன்கள் மட்டில் தமதுமாட்சிமையின் வளத்தைத் தெரியப் படுத்த விரும்பினார். 24. அந்தக் கலன்கள் யூதர்களிடையிலிருந்து மட்டுமன்று, புறவினத்தாரிடையிலிருந்தும் அவரால் அழைக்கப் பட்ட நம்மையே குறிக்கின்றன.

எபிரேயர் 12. 25. எனவே, இறைவனின் குரலொலியைச் செவி மடுக்க மறுத்துவிடாதபடி பார்த்துக் கொள்ளுங்கள். இவ்வுலகில் தேவ வார்த்தையைப் பேசியவருக்குச் செவிசாயக்க மறுத்த அவர்கள் தப்பிக்க முடியவில்லை யென்றால், விண்ணிலிருந்து பேசுபவரைப் புறக்கணித்தால் நாம் எப்படித்தான் தப்பமுடியும்? 28. ஆதலால் அசையாத அரசைப் பெற்றுக்கொண்ட நாம் கடவுளுக்கு நன்றி செலுத்துவோமாக, இந்நன்றியுணர்ச்சியில் பயபக்தியோடும், அச்சத்தோடும் கடவுளுக்கு ஏற்ற முறையில் வழிபாடு செய்வோமாக. 29. ஏனெனில், நம் கடவுள் சுட்டெரிக்கும் நெருப்பாக இருக்கிறார்,

மத்தேயு 5, 1, யேசு திரளான கூட்டத்தைக் கண்டு, மலை மீது ஏறிஅமர, அவருடையசீடர்கள் அவரை அணுகினர். 2. அவர் திருவாய் மலர்ந்து போதிக்கலானார். 3. எளியமனத்தோர் பேறுபெற்றோர். ஏனெனில் விண்ணரசு அவர்களதே,

1 அருளப்பர் *3. 16.* கிறிஸ்து நமக்காத் தம் உயிரைக் கொடுத்தார்; இதனுல் அன்பு இன்னதென்று அறிந்தோம். ஆகவே, நாமும் நம்முடைய சகோதரர்களுக்காக நம்முயிரைக் கொடுக்க வேண்டும். *18.* அன்புக் குழந்தைகளே, நம் அன்பு சொல்லிலும் பேச்சிலும் இராமல் செயலில் விளங்கும் உண்மையான அன்பாய் இருக்கட்டும்.

அருளப்பர் *3. 16.* தன்மகனில் விசுவாசங்கொள்ளும் எவரும் அழியாமல், முடிவில்லா வாழ்வைப்பெறும் பொருட்டு அந்த ஒரே பேருன மகனையே அளிக்கும் அளவுக்கு கடவுள் உலகின் மேல் அன்பு கூர்ந்தார். *17.* கடவுள் தம் மகனை உலகிற்கு அனுப்பியது அதற்குத் தீர்ப்பு அளிக்கவன்று. அவர் வழியாக உலகம் மீட்புப்பெறவே.

2 கொரிந்தியர் 4. 4. கடவுளுடைய சாயலான கிறிஸ்துவினுடைய மாட்சிமை விளங்கும் நற்செய்தியின் ஒளியை அவர்கள் பார்க்காதபடி இவ்வுலகத்தின் தெய்வம் விசுவாசமற்றவர்களின் அறிவுக்கண்களைக் குருடாக்கிவிட்டது.

## அதிகாரம் 4. அறன் வலியுறுத்தல்.

படைப்பெல்லாம் ஆக்கிக் காக்கும் கடவுள் மனிதனின் கதியாகவுமிருக்கிருன். அவன் குணங்களையறிந்து அவனை அண்டுவதே வாழ்வின் வேலையென்று முதலதிகாரத்திலறிவித்தார். இகவாழ்வு நமக்கு இலவசமாகக் கிடைத்தது. நாமதை வேண்டாமென்று சொல்ல நாமிருக்கவில்லை. ஆனுல் வான் எனும் பரவாழ்வு இலவச கொடையாயினும் நாமதை விரும்பியடைய வேண்டியது. மனிதன் ஏன் அதை நினைக்கிருனில்லை, விரும்புகிருனில்லை யென்பதே மனித சுதந்திரத்தின் மர்மம். எனினும் அறியாமையே இதின் அடிப்படை நியாயமாதலால் அதை நீக்கும் பொருட்டு இறைவன் நல்லவர் என்பதை இரண்டாமதிகாரத்தில் விளக்கினுர். பாக்கியத்தைத் தரும் பரமன் அதை அடையும் வழிகளையுந் தருகிருன். மழை நீர் போல அருளை அளிப்பதோடமையாது அவ்வாலறிவன் வழிகாட்ட மனு உருவிலே வந்து அந்தணனுக அறநெறி வாழ்ந்து காட்டினுரென்பதே மூன்ருமதிகாரத்தின் கருப் பொருள். இருப்பவர், நன்மை தருபவர், உண்மையை அறிவித்தபின் அதை அறிய, அமைய மறுப்பவன் புத்தியைப் பாவியாத முழுமுட்டாள். அவனும் திருந்தி வாழ்வு பெறவேண்டுமென்ற ஆவலினுல் அறத்தின் அவசியத்தை இந் நாலாமதிகாரத்தில் வற்புறுத்துகிருர்.

பரன் தரும் பேரருளுக்கு உவமையான நீர் இயற்கைப் படி பாய்ந்தோடும் போது மண்ணை அரித்து அறுத்துப் பாய்கிறது. அதனுல் தனக்கே வரையறை செய்து கொள்கிறது. அறம் என்பது மனித வாழ்க்கை சிதறிச் சிதையாது இலக்கு நோக்கி நகர வரையறை செய்கிறது. ஓடும் நீர் ஆற்றலுடையது. அதன் வலிமையைப் பாவித்தே நாமின்று மின்சா

ரம் பெறுகிறோம். அதினின்று ஒளியும் அனலும் ஆக்குகிறோம். அறம் கடவுளை அடையும் வலிமையை அளிக்கின்றது. ஆன்மா வலிமை உறுவது மட்டுமல்ல, அறத்தின் ஆற்றலால் வேறு ஆன்மாக்களுக்கும் அதை உறுத்துவது. மற்றவர்க்கு அறத்தின் ஆற்றலை வற்புறுத்துவதே வள்ளுவரின் நோக்கம். அதின் காரணங்களை அதிகாரத் தொனியில் உரைக்கிறார்.

1. அறம் சிறப்பும் செல்வமுமீனும்.
2. அறித்தினுங்காக்கமில்லை.
3. அறவினை ஓயாது செய்க.
4. மனத்து மாசிலனாதல் அறம்.
5. நான்கும் இழுக்காதியன்ற தறம்.
6. அறம் பொன்றுத்துணை.
7. சிவிகையின் பாடம் அறத்தாறல்ல.
8. அறன் வாழ்நாள் வழியடைக்கும்.
9. அறத்தான் வருவதே இன்பம்.
10. செயற்பாலது அறம் உயற்பாலது பழி.

செயல், உயல் எவை யெவை யென்று தொடரும் முப்பாலிலும் விரித் துரைப்பதால் இவ்வதிகாரமே குறள் நூலின் பொருட்பாயிரமென்க.

31. சிறப்பீனுஞ் செல்வமு மீனு மறத்தினூஉங்
காக்க மெவனோ வுயிர்க்கு.

சிறப்பு ஈனும் — பேரின்பம் பெற்றுத்தரும். செல்வம் உம் ஈனும் — அதற்குவேண்டிய பொருளையும் பெற்றுத்தரும். உயிர்க்கு அறத்தின் ஊங்குஆக்கம் எவன் — மனிதருக்கு அறத்திலும் மேலான நிறைவு தருவது வேறேது.

ஓ — ஐயக்குறி. வேறேதுமில்லை

சிறப்பு — இங்கு புகழ், அங்குவீடு.

ஈனும் — பெற்றுத்தரும், பெருக்கம் கருதி விலங்குகளுக்கே பாவிக்கும் பதம்.

செல்வம் — இவ்வாழ்வுக்கு வேண்டியவை யாவும், பொருட்கள் பாவித்த பின் கழித்து விடவேண்டியவை. அதனாற் செல்வன.

உம் — கூட்டு. கருதிச் செய்வது இன்பமானாலும் அறச் செயலாற் செல்வமும் இயல்பாகக் கைகூடும். இன்றைய சமுதாய நெறிகேட்டினால் இது நிறை வேறுவது அருமையாகிறது.

அறம் — நியாய புத்திக் கொத்த ஒழுக்கம், தன்ஆள், குடும்பம், சமுதாயம் செய்ய வேண்டியவை, தவிர்க்க வேண்டியவை.

ஊங்கு — மேலான, ஓங்கு. அகற் செதிர் தூங்கு.

ஆக்கம் — ஆ, ஆக்கு — உயர்வு, நிறைவு. சிற்றின்பமும் பேரின்பமும் பெற்றுத் தரும் பண்பாற்றல்.

எவன் — எது, எங்கு.

உயிர் — சிறப்பும் செல்வமும் எய்துவதற்குரியவர் மனிதர் மாத்திரமே. மற்ற உயிர்களுக்குப் பெருந்தாது.

இலக்கின்றி ஓட்டமில்லை. மனித வாழ்க்கை வான்வீட்டை நோக்கியே விரைகிறது. அதனால் முதலிற் பெருஞ் சிறப்பான பேரின்பத்தை வைத்தார். செல்வம் சிற்றின் பத்துக்குச் சார்பானது. பொருட்களுக்கு அடிமையாகாது பாவிக்கும் பண்புண்டானால் உலக செல்வம் மோட்ச வெறுக்கைக்கு வழியாகும், இகபர நன்மை தரும் அறத்தினும் மேலானதொன்றை மனிதன் நினைக்க முடியுமோ என வள்ளுவர் வினவுகிறார்.

32. அறத்தினூஉங் காக்கமு மில்லை யதனை
மறத்தலி னூங்கில்லைக் கேடு.

அறத்தின் ஊங்கு ஆக்கம் இல்லை — மன்னுயிர்க்கு நன்மை செய்வதின் மேலான ஆதாயம் கிடையாது. அதனை மறத்தலின் ஊங்கு கேடு இல்லை — அதோடு அதை மறப்பதிலும் மேலான நட்டம் வேறில்லை.

உம் — வேறும் உண்டு. வாழ்வில் ஆக்கமும் அழிவும் கலந்து வருவன. ஆனால் அறம் அழிவை மாற்றும் வல்லமையுடையது.

இன் — ஒப்பு உணர்த்தும்.

ஊங்கு — மேலான, மிக்க. அளபெடை உயர்வை வற்புறுத்தும். கேடுபெரிது ஆக்கமோ அதிலும் பெரிது,

கேடு — கெடுஎனும் அடியிலிருந்து. அழிவு, அழிக்கும் பண்பு.

ஆக்கம் — வருவாய், படைப்பு, அதின் நன்மை, அழகு. வாழ்வு, அதின் வளர்ச்சி, திருத்தம்.

அதனை -- அறத்தை.

மறத்தல் — நினையாது விடல். மனிதன் புத்தியைப் பாவிப்பது கடன். நினையாது விட்டால் நாம் மிருகத்திலும் கீழ். நினையாத பிழையினால் எழுவது பழி. மறம் பகுத்தறிவைப் பாவிக்க மறப்பதால் உண்டாவது. அது அறத்துக்கு மாறுபட்டதல்ல வேறு பட்டது. செயல் முறையில் சரிக்கும் பிழைக்கும் இடையிலே வேறொன்றில்லை.

முந்திய குறளில் எழுப்பிய வினாவுக்கு நேரான விடை கிடைக்கிறது. — அறத்தின் மேலான ஆக்கம் இல்லை. அது மட்டுமன்று, அறஞ் செய்ய மறப்பது மறன், மிகப் பெரிய கேடு. அதனாற் பராக்காயிருப்பது

பெரிய பிழை என்கிருர் வள்ளுவர். வாழ்வு பெற்றவன் வாழவேண்டும். மற்றவர்கள் வாழ உதவ வேண்டும். மூச்சு விடமறப்பது உயிருக்கு ஆபத்து. இங்கு நமக்குச் சுதந்திரமே கிடையாது. செய்வன திருந்தச் செய் என்பது போலவே செய்வதை விரும்பிச் செய் என்பது சுயாதீனம். தவறுசெய்ய நமக்கு உத்தரவில்லே. வேண்டியதைச் செய்யாது விடுவது தவறு. சும்மா இருக்க முடியாது. உயிருள்ளது எப்போதும் ஏதோ செய்துகொண்டேயிருக்கிறது. அச்செயல் சரியானுல் ஆக்கம், பிழையானுற் கேடு.

அறச் செயல் 32 இலக்கியத்திலுண்டு. அவற்றிற் பல சாதாரணமான கடமைகளே. அறம் அருகியதாற் பட்டியலாக்கப் பட்டது போலும். இன்னும் பல அவற்ருேடு சேர்க்கலாம். காலம், இடம், சூழலுக் கேற்பச் செய்வதே அறத்துக்குப் பிரதானம்,

33. ஒல்லும் வகையா னறவினே யோவாதே
செல்லும்வா யெல்லாஞ் செயல்.

அறவினே — நற்செய்கைகளே, ஒல்லும் வகையான் — இயன்ற வகை வழிகளில். ஓவாது — இடையீடின்றி. செல்லும் வாய் எல்லாம் செயல் — வாய்த்த இடம் சூழலிலெல்லாம் மனிதர் செய்யட்டும்.

மனிதர் அவாய் நிலே. 31ல் உயிர் என்பதினுல்.

செயல் — செய் + அல். இங்கு அல் சாரியை இடைச் சொல், தொழிற்பெயர் விகுதியல்ல. எனவே செய் ஏவல்வினேமுற்று.

அறவினே — தனக்கும் பிறர்க்கும் நன்மை செய்வது. செயல் முடிந்த பின்னும் அதின் பயன்தொடரும். உயர்வுந்தாழ்வும் அதனுலே தான் உண்டாகின்றன.

ஒல்லும் — கைகூடும், இயலும். இயற்கையாக வரும் வாய்ப்புகள்.

வகை — அளவு, வழி. இவை சூழ் நிலேக் கேற்ப மாறுவன.

ஓவாது — ஓ = ஒய்தல், இடையீடு. அறம் ஓருபகரணம் மட்டுமல்ல அதுவே வாழ்வு. மூச்சுவாங்குதல் இதயம் துடித்தல் போல ஒய்வின்றிச் செய்ய வேண்டிய கடமை.

ஏ — அசை நிலே.

வாய் — இடம், சந்தர்ப்பம், வசதி.

செல்லும் வாய் — இவ்வசதிகள் இயற்கையாய் வருவன மட்டுமல்ல நாமும் ஏற்படுத்தக் கூடியவையும். முயன்று தேடிச் செய்தால் ஆக்கமதிக மாகும்.

மனிதன் பகுத் தறிவைப் பாவித்து வாழ வேண்டும். புத்தியைப் பக்கத்தே வைத்துவிட்டு மிருகம் போல வாழ உரிமையில்லை. முன்னே, மேலே போக எப்போதும், எங்கும், எல்லா வழியாலும் முயலவேண்டும். இப்போது உள்ள வல்லமைக்குத்தக்கது எது சிறந்ததோ அதை விரும்பிச் செய்வதே மனித பண்பு. எல்லாம் நல்லது, இது அவசியமில்லை என்னும் சாட்டுச் சொல்லும் சோம்பல்தான் மனிதனின் பெரிய சத்துராதி. நமக்கு அவசிய மில்லை யாயினும் நமது சேவை பிறர்க்கவசிய மானது. அதோடு நாமடைய வேண்டிய இலக்கு மிக உயர்ந்தது. அதை அடைய முழுமுயற்சி தேவை. எமது சக்தி சாதுரியம் எவ்வளவென்று இறைவன் அறிவான். அவனுடைய உதவிக்கரம் அவ்வளவிலே நீட்டிய படி நிற்கும். அதை எட்டிப்பிடிக்க முயற்சி வேண்டும். அப்போது தான் அவன் எம்மை எடுத்துத் தன் வீட்டில் வைப்பான், ஆதலாற் தான் வள்ளுவர் செய் என்று கட்டளை கொடுக்கிறார்.

34. மனத்துக்கண் மாசில ளுதல் லனைத்தறன்
ஆகுல நீர பிற.

மனத்து கண் மாசு இலன் ஆதல் — ஒருவன் தன் மனத்திலே குற்ற மில்லாமல் இருப்பது. அனைத்து அறன் — எல்லா நற்சிரியைகளின் தொகுப்பாகும். பிற ஆகுல நீர — அஃதின்றி மற்றப் பண்புகள் வீண் ஆரவாரம் போன்றன.

மனத்துக் கண் மாசு — சிந்தனையிலே குற்றம். அதையே பாவம் என்கிறோம். சொல்லும் செயலும் அதைத் தொடர்வன, நன்மை தின்மைக்குச் சிந்தனையே காரணம்.

அனைத்தறன் — எல்லாப் புண்ணியங்களுடைவும் திரட்டு, கருப் பொருள்.

மாசிலன் — மறுவின்றித் தூய்மையாயிருத்தல்.

ஆதல் — ஆகுதல் வியங்கோள் வினைமுற்றுவிகுதி. மாறல், வளர்தல். மாறும் பொருளிலே மாசு படிவது இயல்பு, அதை நீக்கி வளர, வளம் செய்ய முயல்வதே அறம்.

பிற — வேறு அறச்செயல்கள், மற்ற ஆட்டோட்டங்கள்.

ஆகுலம் — ஆரவாரம். பிறர் பார்த்து மெச்சும்படி செய்வன யாவும் நற் கருத்தில்லாமையால் வீணும்.

நீர — சமன், போன்றது, தன்மையுடையது. இக்குறளில் அறத்தின் வரையறை கூறப்படுகிறது. மனித இயற்கைக்கு முரணுன சிந்தனையே மனத்தை மாசு படுத்துவது. நியாய புத்தியால் மனிதர் எதுசரியான தென அறிகிறோம். ஆயினும் பிழையானதைச் செய்கிறோம். அதன்பின்

அதை மறைக்க முயல்கிறோம். இதுவே மனித சுதந்திரத்தின் விபரீதம், உண்மையெது நன்மையெது அதை நேர்மையுடன் கடைப்பிடிப்பதே மனத் தூய்மையாம், அதனுற் படைத்தவன் மனத்தோடு ஒத்துப் போகிறோம். பகவன் மனத்துக்கு முரணுனதை விரும்புவது இயற்கையைக் குழப்புவதாகும். ஏன் அவனேயே அழிக்க முயல்வதாகும். எனவே, நன்மையை விரும்பும் பண்பே மாசிலாமனம், அதுவே அறம். நன்மையை விருப்புவோன் நிறை நன்மையான கடவுளை விருப்புகிறுன், அதுவே அறத்தின் நோக்கம். அதை மறந்து உலக வெகுமதிக்காகச் செய்வதெல்லாம் புஸ்வாணம் போலப் புகையாய் மறைந்துபோம்.

35. அழுக்கா றவாவெகுளி யின்னுச்சொன் ஞன்கும்
இழுக்கா வியன்ற தறம்.

அழுக்காறு அவா வெகுளி இன்னுச் சொல் -- பிறர் ஆக்கம் கண்டு பொருமைப் படுதல், புலன்கள் மேற் செல்லும் சுயநல ஆசை, பேராசையால் வருங்கோபம், இதனுல் எழும் கடுஞ்சொல். நான்கும் இழுக்கா இயன்றது அறம் -- இந்த நான்கிலும் சறுக்காது செல்வதே புண்ணியம்.

நான்கும் -- நேர்மைமை நாசஞ் செய்யும் பாவங்கள் நான்கு. இதிலொன்றே மனத் தூய்மையைக் கெடுக்கப் போதுமானது. எனவே தான் இவற்றைக் கடியத் தனித் தனி அதிகாரம் திருக்குறளிலே ஒதுக்கியிருக்கிறுர்.

அழுக்காறு -- அழுங்கல், புழுங்குதல். பிறர் நலம், மேம்பாடுகண்டு மனம் வருந்தல். அழுக்கு + ஆறு — அகத்தை அழுக்காக்கும் நெறி. இதுவே சுயமையின் கொடுமுடி.

அவா -- அவாவுதல், அளவு கடந்த தன்னலப்பற்றுல் யாவையும் கதுவுதல்.

வெகுளி — கடுஞ்சினம். இது பண்புடையோர் சிற்ற மாயினும் கேடு விளைவிப்பதால் விலக்க வேண்டியது.

இன்னுச் சொல் -- தீமை பயக்குஞ் சொல், அகமும் புறமும் சுடும் சொல், துன்பந்தரும் சொல். சொல் சிந்தனையையும் செயலையும் இணைக்கும் பாலம். அதனுல் அவற்றையும் கெடுக்கும்.

இழுக்கா -- வழுக்காது. இழுக்கு -- தவறு, சறுக்கு, மாழ்வு. சேறு, அளறு, நரகம் -- இவற்றுள்ளே போனுல் மீளமுடியாது. பிறருதவி கிடையாவிடில் மாழ வேண்டியதுதான்.

இயன்றது -- இயல்பானது. இயற்கை காட்டும் வழியிலே செல்வது. இந்நான்கும் மிருக சுபாவத்துக்கு இயல்பானவை, மனிதனில் அவை

அளவு கடந்து போவதாற் தீயவை ஆகின்றன. எனவே, இளையோரைத் திருத்தி வழி நடத்துவது முதியோரின் கடமை.

இச்செய்யுளில் மனத் தூய்மையைக் காக்கும் வழிகூறினர்.

புட்டிபாலினுள் இட்ட சொட்டுவிடம் அதைக் கெடுப்பதுபோல ஒருதுர்க்குணம் பல பண்புகளையும் நாசமாக்கிவிடும். ஆதலால் மேற் சொன்ன நான்கு தீக்குணங்களான சேற்று நிலத்திலே மிதிக்கவும் வேண்டா மென்றுவள்ளுவர் எச்சரிக்கிறார்.

36. அன்றறிவா மென்னா தறஞ் செய்க மற்றது
பொன்றுங்காற் பொன்றாத் துணை. .

அன்று அறிவாம் என்னாது அறம் செய்க -- முடிவு வரும் நாளில் யோசிப்போம் என்று சொல்லாது நாடோறும் நற்கிரியைகளைச் செய்யுங்கள். அது பொன்றும் கால் பொன்றா துணை -- ஏனெனில் சாவுவரும் நாளில் அதுதான் அழியாத துணையாக உடன்வரும்.

அன்று -- வேறுநாள், பொன்றும் கால், ஆனல் வாழ்வு முடியும் வேளை அறிவு மங்கிவிடும், நேரமும் கிடையாது. ஆதலால் இன்று செய்யவேண்டும் என நுதலினர்.

அறிவாம் -- ஆராய்ந்தறிந்து முடிவு செய்வோம். அதற்கு அவசிய மான அறிவு அனுபவம் அநேகரிடமில்லை. ஆதலால் மூத்தோர் சொற் கேட்டு அமைவதே சிறந்த வழி.

என்னாது -- எண்ணாது, சொல்லாது.

செய்க -- மக்கள் அவாய் நிலை, செய்வார்களாக.

மற்று -- வினைமாற்று, அறம் காலந்தாழ்த்த முடியாத வேலை. அவசியமான பொருள், அழியாத பொருள், ஆதாயம் பெருக்கும் பொருள், அதை உடனே பெற்றுக்கொள்வதே புத்தி.

பொன்றும் -- பொள், உட்டுளையுள்ளது. ஆதலால் அழியும், சாகும். காற்றடைத்த சவ்வுபோல் இலகுவில் உடைந்தழிவது. ஆயுள் முடியும் நேரம் தெரியாது, திடீரெனவரும். எனவே துணை எப்போதும் தேவை.

கால் -- காலம், நேரம்.

துணை -- உதவி. அறப்பயன் காலம், இடம் கடந்தது, உயிருடன் ஒன்றித்து நிலைப்பது.

நற்செயல்களால் ஆன்மா பக்குவமடைகிறது. தினமும் வளர வேண்டிய உயிருக்கு அறச்செயலென்னும் பசளைநீரை வார்க்காவிடில் அது வாடி வதங்கிப் போம். அதன் பின் களை தெளியக் கனகாலமெடுக்

கும், அதற்குள் முடிவு வந்து விடலாம். அறம் இம்மைக்கும் மறுமைக் கும் உணவு. இங்குள்ள இல்லம் நாம் வளரும் வீடு. அங்குள்ள வீடுதான் நிரந்தரமாக வாழுமில்லம். வளர்ந்தால் மட்டுமே வாழ்வுகிட்டும். அறத்தின் மூலம் நித்திய வாழ்வுக்கு வேண்டிய பக்குவம், தகுதி அடைகி ரோம். மறுமை என்பது புராணங்களிலே உள்ள துறக்கம், சுவர்க்கமல்ல. அங்கு ஆன்மா தன்னைப் படைத்த கடவுளைக் கண்டு களிக்கும். அதுதான் நீடூழி வாழ்வு, இங்குபயிற்சி. அங்குதான் முயற்சி, இங்கு கரும, ஞான, பக்திவழிகள். அங்கு வீட்டிலே யோகம், ஒன்றிப்பு. ஆகவே, காலந்தாழ்த் தாதே, பிரதான வேலையை முதலிலே கவனி, செய் என்று கட்டளை விடுக்கிருர்.

அத்தமும் வாழ்வுமகத்துமட்டே விழியம் பொழுக
மெத்திய மாதரும் வீதிமட்டே விம்மிவிம்மியிரு
கைத்தலை மேல்வைத்தழு மைந்தரும் சுடுகாடுமட்டே
பற்றித் தொடரு மிருவினைப் புண்ணிய பாவமுமே.

(பட்டினத்தார்.)

37, அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானே டூர்ந்தா னிடை.

சிவிகை பொறுத்தான் ஒடு ஊர்ந்தான் இடை — பல்லக்கைச் சுமப் பவனுடைய வாழ்வுக்கும் அதிலே சவாரி செய்பவனின் வாழ்வுக்கு மிடையே யுள்ள முரண்பாட்டை அறிவோம். இது அறத்து ஆறு என வேண்டா -- இதுதான் புண்ணிய பாவ பலனுக வருவது என எண்ண வேண்டாம்.

ஆறு -- வழி. பெருவெள்ளம் மண்ணையும் கல்லையும் அறுத்துப் பாய்வாதால் உண்டாவது. நடைமுறை, வாழ்க்கை நெறி.

என — எனல், சொல்லல், நினைத்தல்.

வேண்டா — வேண்டாம். வேண்டும் என்பதின் எதிர்.

சிவிகை — சிறு பல்லக்கு. ஒருவர் இருக்க நால்வர் சுமப்பது.

பொறுத்தல் — ஏற்றல், சுமத்தல்.

ஒடு — ஒடு, உடன். தொடர்பு, ஒற்றுமை ஒப்பனைகாட்டும்.

ஊர்தல் — இவர்தல், சவாரி செய்தல்,

இடை — நடுவே. உயர்ந்தவர் தாழ்ந்தவர்க்கிடையே பெரும்பா லான பொதுமக்கள் உள்ளனர்.

நன்றே செய்ய வேண்டும், அதையும் இன்றே செய்ய வேண்டுமென்று வற்புறுத்தியபின் அதின் ஆட்சேபனையை நுதலுகிறுர். இருவித கடாவுக்கு இங்கு விடைகொடுக்கிறுர்.

வள்ளுவரே, முதல் மூன்று செய்யுளிலும் அறம் செய்யவேண்டுமென்று வாதித்தீர். ஆனுற் சிறப்பும் செல்வமும் ஊழ் வினையால் உண்டாவதென்பதே நமது மரபு. அந்த வினையின் விதியை எதிர்ப்பது வீணும். அதைக்குழப்பாது அமைதி அனுசரிப்பதல்லவா நிர்வாணமடையும் நெறி ?

மேலும், அடுத்த மூன்று பாக்களில் உடனே செய்மின் என்றீர். ஏன் அவ்வளவு அவசரம், ஊழ்வினை அழிய வேண்டுமென்ற விதியை நிறைவேற்ற மறு பிறவிகளுண்டே. 84 நூருயிரகோடி யோனிபேதங்களுண்டென நிகண்டு நவிலுமே. 7 வகை உடலிலும் மாறிமாறிப் பிறந்து ஊழ் வினையகற்றப் போதிய அவகாசமுண்டே. நீரும் மரநிழலில் ஆறி அமர்ந்து ஆனந்த மடையும். துரிதம் தேவையில்லை.

இயந்திர வாகனங்கள் நடைமுறைக்கு வருமுன் எங்கும் கண்டகாட்சியையே வள்ளுவர் உதாரணமாகத் தெரிகிறுர். விடையின் விளக்கத்தைப் பாவிக்கும் சொற்களுள்ளே பொதிந்து தருகிறுர்.

சிவிகைமேல் வருகிறவரை உலகத்தோர்பெரியவர் என்று மரியாதை செய்கின்றனர். அதைச் சுமப்பவரைவோ சிறியர் என்று செறுக்கின்றனர். இது சரியா, முறையா, தருமமா என்ற வினு மனிதரை மருட்டிக் கொண்டேவருகிறது. துட்டர் தழைக்கிறுர்கள், தண்டனைக்குத் தவறுகிறுர்கள். நேர்மையாக உழைக்க முயலுவோர் துன்பம் வேதனைப் படுகிறுர்கள். இவ்வுலகிலே நீதியைக் காணேம் அதற்கு மருந்து வேறெங்காவது உண்டா? இந்தியரும் எகிப்தியரும் இதற்கு விடைகொடுக்க முயன்றனர். நமக்கெட்டிய புத்த சமண மரபு நூல்கள் வைதிக புராணங்களுக்கு முந்தியவை. அதனுல் இந்த வித்தக விடையைத் தந்தவர் புத்தரே என்று பலர் கருதுகின்றனர்.

மனிதரிடையே உயர்வு தாழ்வுக்குக் காரணம் வினைப்பயன். ஒருவன் செய்யும் நன்மையும் தின்மையும் அவனைப் பற்றிக்கொள்ளும். அந்தப் பற்றை அறுத்தகற்று மட்டும் அமைதி கிடையாது. அதற்காகப் பல தரம் உடல்களிலே பிறந்து பிராயச்சித்தம் செய்யவேண்டும். இதனுல் உலகிலே காணப்படும் உயர்வு தாழ்வுக்குப் நியாயமான விடைகிடைக்கிறது, நீதியான கூலிகொடாமலும் கொள்ளைலாபமடித்தும் பணம்தேடும் தனவந்தர் பட்டுடுத்துப் பல்லக்குமெத்தையிலே வீற்றிருக்கிறுர். அடிமை வேலை செய்து மெலிந்த நாலாண்டிகள் அதைச் சுமந்து போகின்றனர். இந்த வித்தியாசத்தின் காரணம்? ஊழ் வினை. முற் பிறவியிலே செய்த நன்மை தின்மையின்படியே அவர்களுடைய விதி இப்பிறவியிலே அவர்

களை இந்நிலையில் வைத்திருக்கிறது. இதை மாற்ற முடியாது. இதுவே நீதி, தேவர்களும் அதையே ஆதரிக்கின்றனர். தருக்கம் தெரியாத பொது மக்கள் இவையே கடவுள் விதித்தது என நம்பிப் பொறுதியோடு ஏற்றுக்கொண்டனர்.

வள்ளுவருடைய ஊழ் வினையும், விதியும், மறு பிறவியும் வேறு பொருளுடையவை. குறளிலே எதிரிணை இரண்டு வருகின்றன. அறத்தாறு எனவேண்டா; பொறுத்தானோடூர்ந்தான். அறமும் பொறுத்தானும் முதலிடத்தில், வேண்டாவும் ஊர்ந்தானும் பின் வருவன. இதனால் இந்திய சமயங்கள் ஊழ்வினை, மறுபிறவி மூலம் கடவுளே விதித்ததென்று கட்டியெழுப்பிய கோட்டை கவிழ்ந்து விழுகிறது. பொறுப்பவன், உழைப்பவன், இவனே அறஞ்செய்வோன். இவனே பெரியவன், கடவுட் தன்மையுடையன். ஊர்ந்தானோ சிறிய ஊர்வன, உண்ணி, அட்டை போன்றவன். அவன் வேண்டா. அவனை மதிக்க வேண்டாம், தள்ளி அகற்றிவிடு. சொற்களின் பொருளும் ஓசையும் உண்மையெதென உரைக்கின்றன.

மனிதருடைய அறியாமையும் அநியாயமுமே உலகில் உயர்வு தாழ்வுக்கு உரிய காரணம, அதைக் காணும் கடவுள் தடுப்பதில்லை. அதுதான் மனித சுதந்திரத்தின் சிறப்பு. மனிதன் தவறு செய்யலாம். ஆனால் அவனே பொறுப்பாளி. மாணவன் வருடமுழுவதும் மற்றவர்களை அணுப்பலாம், விளையாடித் திரியலாம். ஆனாற் பரீட்சைவரும் போது தான் நீதி கிடைக்கும். அதுபோலவே வாழ்க்கைப் பரீட்சையிலும் நடக்கும். இதை நினைப் பூட்டவே நீத்தார் வந்தார், அநீதியை விலக்கி அறத்தைச் செய்யும் வழி காட்டினர். சுயநலமும் சோம்பலும் இவ்வுலக வாழ்விலே வெல்லலாம், ஆனால் அது சாவோடு முடிந்துவிடும். மறு வாழ்வு உண்டு. அங்குதான் நீதி.

வினைப் பயன் அல்லது ஊழ் வினை என்பது பரவணி என்று நவீன விஞ்ஞானம் விளம்புகிறது. மனிதன் செய்யும் ஒவ்வொரு கிரியையும் அவனுடைய உடலையும் உளத்தையும் பாதிக்கிறது. மனித அறிவும் ஆற்றலும், ஒளியும் அனலும்போலப் பிரிக்க முடியாதவை. உண்மை, நன்மையை அறிந்து விரும்பிச் செய்வதே மனித பண்பு. செயலாலே பழக்கமுண்டாகிறது. அது அடுத்த செயலுக்குப் பாதகமாகவோ சாதகமாகவோ அமைகிறது. தனிவாழ்வில் மட்டுமல்லப் பொதுவாழ்விலும் இது சுவறுகிறது. ஒருவர் செய்வதைக் கண்டு, சொல்வதைக் கேட்டே மற்றவர் செயலாற்றுவது மனித இயல்பு. எனவே, குருட்டு வினைப் பயனல்ல அறிந்து விரும்பிச் செய்வதால் ஊழ் வினை யுண்டு என்பது ஏற்கக் கூடியது.

இது சந்ததியையும் பாதிக்கிறது. உளவியல் இதை ஏலவே வற்புறுத்திவந்துள்ளது. இன்றைய உடற் கூற்று விஞ்ஞானம் உடலணுவிலுள்ள ஜீன்களை ஆராய்ந்து அவற்றிலே மூதாதையரின் குணங்குறி

களைக் காண்கிறது. பெற்றோரின் உருவம் பண்பு எப்படித் தொடர்கின்றன என விளக்குகிறது. அதனுற் பெயர், பேரன் என்ற சொற்களின் தொடர்பு தெளிவாகிறது. பெயர் ஆளுக்குச் சமன். இறந்த பெயரனின் பிரதியே பேரப்பிள்ளை, அந்த ஆளல்ல. இதை மறு பிறவி என்பது பொருந்தும். எமது உடலும் உளமும் மாறினபடியேயிருக்கின்றன. அதுவும் மறுபிறவிதான். ஆனுற் சந்ததி அதிலும் பிரதானமானது.

பெற்றோர் பெற்றுக்கொண்ட, தேடிக்கொண்ட நன்மையும் தின்மையும் பிள்ளைகளைப் பாதிக்கின்றன. அதனுல் அவர்களுடைய வாழ்வையோ தாழ்வையோ விதிப்பவர் பெற்றோரே. அறவாழ்விஞலே தமது உளத்தையும் உதிரத்தையும் உயர்த்தட்டும். தமக்கு விதிப்பதே தம் மக்களின் விதி என உணரட்டும். அநீதியால் வருவதல்ல அன்பினுல் வருவதே அறத்தாறென விளங்கட்டும். பிறப்பிலும் வளர்ப்பிலும் பிள்ளைகளுக்குப் பண்பைப்பகிரட்டும்.

38. வீழ் நாள் படாஅமை நன்றுற்றி னஃதொருவன்
வாழ் நாள் வழியடைக்குங் கல்.

ஒருவன் வீழ் நாள் படாமை நன்று ஆற்றின் — அறிவுள்ள மனிதன் ஒருநாளாவது வீண்போகாது நன்மை செய்தால். அது வாழ் நாள் வழி அடைக்கும் கல் — அது சீவிய பாதையைக் கட்டியெழுப்பும் கல்லு எனலாம்.

ஒருவன் — மனித புத்திப்படி நடப்பன்.

வீழ்நாள் — அறஞ்செய்யாது தவறுந் தினம்.

படாமை — அழியாது. அளபெடை தொடர்ந்து கவனமாயிருக்க வேண்டிய கடமையை உணர்த்தும்.

நன்று — நன்மையானது. அதுவே அறத்துக்கின்றியமையாதது.

ஆற்றின் — ஆறு போலத் தொடர்ந்து ஒழுகினுல்.

அஃது — அது, அத்தகைய வாழ்வு.

வாழ் நாள் — ஆயுட்காலக் கெடு. வீடுநோக்கிமுன்னே, மேலே நடப்பது.

வழி அடைக்கும் — சதுப்பு நிலத்திலே கல்லைப்பரப்பி முன்னேறுவது போல அல்லது மேலேறும் படிக்கட்டுப்போல. மறுபிறப்பைப் புகுத்தும் உரை இங்கு வேண்டாதது. ஆறு அறத்துக்கும், வழி, வாழ்வுக்கும் பொருந்துவன.

கல் — உறுதியான, கடினமான பொருள். படிக்கல், வீதிபாவும் கல்.

வாழ் நாளுக்கும் வீழ் நாளுக்குமிடையில் வேறு நாள் கிடையாது. அதனுல் 36ம் செய்யுளின் கருத்தையே மீண்டும் வற்புறுத்துகிருர். தினமும் அறவாழ்வில் முன்னேற வேண்டும்.

மனித சீவியம் இறைவனை நோக்கிநடக்கும் பயணம். அது முன்னே மட்டுமல்ல மேலேயும் போகவேண்டும். சதுப்பு நிலத்திலே கல்லை அடுக்கி அதிலே மிதித்துக் கொண்டு முன் போகலாம். சுவரிலே கல்லை அடுக்கி அதிலே மிதித்துக் கொண்டு மேலே போகலாம். சீவியத்தின் ஒருநாள் ஒருகல்லுப் போன்றது. பின்னே, கீழே சறுக்காதபடி அதை அடுக்கிக் கொண்டு போக வேண்டும். நன்மை செய்யாத நாள் வீண் நாள், வீழ் நாள், விழலான நாள், மேலே போக உதவாத நாள். நமது பாதையை, நமது கோபுரத்தை நாமே கட்டிக் கொண்டுபோகிருேம்.

இந்த முயற்சிக்கு வேண்டிய யாவையும் கடவுள் நிறைவாக இயற்கையிற் கொடுத்திருக்கிருர். அதை எடுத்துப் பாவிப்பது மனிதனின் பொதுவான பொறுப்பு. எனினும் வழிகாட்டிகள், சொல்லாலும் செயலாலும் இவ்வாழ்நாள் வழியடைக்கும் வேலையில் மாதிரியாய் விளங்க வேண்டும்.

39. அறத்தான் வருவதே யின்ப மற்றெல்லாம்
புறத்த புகழு மில.

அறத்தால் வருவதே இன்பம் — நற்செயல் மூலம் வருவது மட்டுமே இன்பம். மற்று எல்லாம் புறத்த — மற்றயாவும் துன்பத்துக்கு வழி. புகழுமில — புகழும் பெறமாட்டா.

அறத்தான் — இறைவன் இயற்கையிலே வைத்த ஒழுங்குப்படி வாழ்வதால். இந்த நியமத்தைச் சான்றோர், அந்தணர் போன்றவர் அறிவிப்பர்.

வருவது — கைகூடுவது, இயற்கையாக வருவது. எது அறமென நிட்சயிக்கச் சாதாரண மனிதருக்கு அறிவு அனுபவம் போதாது. ஆதலால் அவர்கள் பெரியாரைத் துணைக்கொள்ள வேண்டும்,

இன்பம் — ஒத்தியங்குவதாலுண்டாகும் நிறைவு. மையத்தைச் சுற்றிச் சக்கரம் போலச் சுழல்வதே அமைதிக்கு வழி. எனவே, கடவுள், இனம், சமூகம், தனிஆள் என்ற ஒழுங்குப் படி சேவை பெற வேண்டும். தனிஇன்பம் தற்காலிகமானது, இனிப்புப் போன்றது. மாருத இன்பம் கடவுளோடு ஒன்றிப்பதாலாவது, நித்தியமானது, சத்துணவுபோன்றது.

மற்று — வினைமாற்று. பிறிதான, வேறு.

எல்லாம் — அறத்தோடு ஒவ்வாத முயற்சிகள் யாவும். இவை போலிகள். தீயவை சிலவேளை நன்மைக்குச் சந்தர்ப்பமாகலாம், காரணமாகா.

புறத்த — வாழ்வுக்குப் புறம்பு, உதவாதவை.

புகழும் — பிறர் பாராட்டுமட்டுமல்ல வளமும் தகுதியும்.

இல — அறத்தோடு இயற்கையாக வரும் புகழும் ஊழும் கிடைக்கமாட்டா. இன்பங்கருதிச் செய்யும் நற் கிரியையாற் புகழும் துணைப் பொருளாகவரும். அறத்தாற் தகுதிவளர, அத்தகுதியால் அறம் மேலும் பெருகும்.

மனித வாழ்வின் இலக்கு வீடு அல்லது பேரின்பம். அதை அடையும் வழி ஒழுக்க சீவியம். இல்லறம் உடலோடும் உலகோடும் முயலவேண்டியது. துறவறம் நாடுவது உயிரும் பரமும். இக வாழ்வு முற்றும் இலவசமாயினும் நிபந்தனையுடையது. கிடைத்ததைப் பாவித்தால் மேலும் கிடைக்கும். உயிரையும் உடலையும் உலகையும் கெடுக்கவோ அழிக்கவோ கடவுள் கொடுக்கவில்லை. பாவித்துப் பயன் பெறவே தந்தான். இங்கு கிடைப்பது சிற்றின்பமும் புகழும், அங்கு அடைவதோ பேரின்பமும் தகுதியும். பெற்ற பகுத்தறிவைப் பாவித்துப் பயனடைவதே அறம், அதுவே புத்தியும் சுதந்திரமுமாகும்.

40. செயற்பால தோரு மறனே யொருவற்
குயற்பால தோரும் பழி.

ஒருவற்குச் செயல்பாலது அறன் — புத்தியுள்ளமனிதன் செய்ய வேண்டியது அறம். உயல் பாலது பழி — தவிர்க்க வேண்டியது பாவம். ஓரும் — இதை ஆராய்க, தெளிக.

ஒருவற்கு — ஒருவன் + கு — ஆளுமைச் சொல். செயல் உயல் இரண்டுக்கும் பொருந்துவது.

ஓரும் — ஓர், தேர், தெளி. ஆழ்ந்து ஆராய்ந்து அறியுங்கள். இதை வினையெச்சமாகக் கொள்வதிலும் வினை முற்ருகக் கொள்வதே பொருத்தம்.

அறன் — நற்செயல். பல புண்ணியங்களால் அறம் ஆகும்.

ஏ — தேற்றம் — அறம்தான், பிரிநிலை — வேறில்லை.

உயல் + பால் + அது — தப்பும் பக்கத்து உள்ளது.

உயல் — உய் — சாவினின்று தப்பிப் பிழைத்தல், விலகு.

பால் — பங்கு, பக்கம். ஒருபகுதி கெட்டால் முழுப் பொருளும் பழுதாகும். ஆதலாற் தீமையைத் தொட்டும் பார்க்கப்படாது.

பழி — பழிப்புக்குரியது, தீச்செயல். பல பாவங்களாற் பழி உண்டாகும்.

இச்செய்யுள் மனச் சாட்சியின் கட்டளையை விளம்புகிறது. நன்மை செய் தின்மை தவிர், இவற்றில் வரிசையுண்டு, சிலர் தின்மையை நன்மையால் மூடிவிட முயல்கின்றனர் அது போதாது. பெற்றோரைத் தாபரியாது கோவிலுக்குத் தானம் கொடுப்போர், வேலைக்கு வேதனங் கொடாது மடங்கள் கிணறுகள் அமைப்போர் உரிய பயனைப் பெறுவதில்லை. சுவரைக் கூட்டி எழுப்புவது வேறு வெட்டிய கிடங்கை நீரப்புவது வேறு. ஆதலால் மேலான நன்மையை நோக்கி முயலவேண்டும். வாழ்வில் நன்மையும் தின்மையும் கலந்து வருவதாற் செயலும உயலும் நாடோறும் செய்யவேண்டியவேலையாகும்.

புண்ணியமாம் பாவம்போம் போனநாட் செய்தவவை.
மண்ணிற் பிறந்தார்க்கு வைத்த பொருள் — எண்ணுங்கால்,
ஈதொழிய வேறில்லை யெச்சமயத்தோர் சொல்லும்.
தீதொழிய நன்மை செயல். — நல்வழி ..

## விவிலியம்.

இறைவன் அந்தணனாய் வந்து ஐந்தவித்துப் பொய்தீர் ஒழுக்க நெறி தந்தான். அதன்படி ஒழுகுவதே அறன். அதனால் மனிதர் கடவுள் மக்களாகி விண்ணரசைச் சுதந்தரிப்பர்.

மத்தேயு. 5. 3. எளியமனத்தோர் பேறுபெற்றோர், ஏனெனில் விண்ணரசு அவர்களதே. 8. தூய உள்ளத்தோர் பேறு பெற்றோர், ஏனெனில், அவர்கள் கடவுளைக் காண்பர். 9. சமாதானம் செய்வோர் பேறு பெற்றோர், ஏனேனில், அவர்கள் கடவுளின் மக்கள் எனப்படுவர்,

2 இராயப்பர் 1. 5. இதைமனதில்வைத்து. முழு ஊக்கங்காட்டி, உங்களிடம் விசுவாசத்தோடு நற்பண்பும், நற்பண்போடு அறிவும், 6. அறிவோடு தன்னடக்கமும், தன்னடக்கத் தோடு மனவுறுதியும், மனவுறுதியோடு இறைப்பற்றும், 7. இறைப் பற்றோடு சகோதர

நேசமும், சகோதர நேசத்தோடு அன்பும் இணைந்திருக்கும்படி பார்த்துக் கொள்ளுங்கள். 11. இங்ஙனம், நம் ஆண்டவரும் மீட்பருமான யேசுக் கிறித்துவின் முடிவில்லாத அரசில் நுழையும் பேறும் உங்களுக்குத் தாராள மாய் அருளப்படும்,

பிலிப்பியர் 4. 8, இறுதியாக, சகோதரர்களே, உண்மை எதுவோ, கண்ணியமான தெதுவோ, நீதி எதுவோ, தூயதெதுவோ, இனியது எதுவோ, எதெல்லாம் நற்பண்புடையதோ, எதெல்லாம் புகழ்ச்சிக்குரிய தோ, அவற்றையே மனத்தில் கொள்ளுங்கள். 9. நீங்கள் என்னிடம் கற்றுக்கொண்ட போதனைகள், பெற்றுக்கொண்ட படிப்பினைகள், என் னிடம் கேட்டறிந்தவை, என் வாழ்க்கையில் நீங்கள் பார்த்தவை அனைத்தையும் கடைப் பிடியுங்கள். அப்போது சமாதானத்தின் ஊற்றுகிய கடவுள் உங்களோடிருப்பார்.

பழமொழி 3. 27. நன்மைபுரிய முயல்கிறவனை நீ விலக்காதே. உன்னுல் இயலுமாளுல் நீயும் நன்மை செய். 28. நீ அந்நேரமே தருமஞ் செய்யக் கூடியவனுயிருக்கையில், போய்த்திரும் பிவா, நாளைக்குத் தருவே னென்று உன் நண்பனுக்குச் சொல்லாதே. 29. உன்பாற் தன் நம் பிக்கையை வைத்திருக்கும் நண்பனுக்குத் தீமை புரியக் கருதாதே. 30. ஒருவன் உனக்கு யாதொருதீங்கும் புரியாதிருக்கையில் அம் மனித னுக்கு விரோதமாய் வீணே வழக்காடாதே. 31, அநீதனைக் கண்டு பாவியாதே, அவன் வழிகளையும் பின்பற்ருதே. 32, ஏனென்ருல் சூதுள் ளவன் எவனே அவன் ஆண்டவருக்கு அருவருப்பாயிருக்கிருன். நேர்மை யாளரோடுதான் அவர் உரையாடுவார். 33. அக்கிரமியின் வீட்டிற்கு அவர் வறுமையை அனுப்புவார். நீதிமான்களின் உறைவிடங்களை ஆசீர் வதிப்பார். 34. கபடுள்ளோரைப் புறக்கணித்துச் சாந்தமுடையோருக்குத் (தமது) அருளைத்தந்தருள்வார். 35. ஞானிகள் மகிமை பெறுவார்கள். அறிவிலிகளின் உயர்வோ இழிவேயாம்.

எசக்கியேல் 18. 5. எவனெருவன் நீதிமானுயிருந்து சட்டம் சொல் வதையும் சரியானதையும் செய்வானுயின் —அதாவது, 6. மலைகளின் மேற் படைக்கப் பட்டதை உண்ணுமலும், இஸ்ருயேல் வீட்டின் சிலைகளை நோக்கிப் பாராமலும், அயலான் மனைவியைத் தீண்டாமலும், தீட்டுள்ள பெண்ணேடு சேராமலும், 7. பிறனை ஒடுக்காமல், கடன் வாங்கின வனுக்கு அடைமானத்தைத் திரும்பக் கொடுத்தும், கொள்ளையிடாமலும், பசித்தவனுக்குத் தன் அப்பத்தைப் பகிர்ந்தளித்தும், ஆடைன்றியிருப் பவனுக்கு ஆடைகொடுத்தும், 8. வட்டிக்குப் பணம் கொடாமலும் தான் கொடுதத்தற்கு அதிகமாய் வாங்கமலும், அக்கிரமத்திலுட்படா மலும், ஒருவரொருவருக்கிடையே உண்டான வழக்கை நியாயமாய்த்

தீர்த்தும், 9. நம் கற்பனைகளைக் கடைப்பிடித்தும், நாம் வகுத்த முறைமைகளின்படி நடந்தும் வந்தால் — அவனே நீதிமான்; அவன் வாழ்வானென்பது உறுதி, என்கிறார் ஆண்டவராகிய இறைவன்.

சங்கீதம் 4. 4. அச்சமுறுங்கள், பாவத்தை விடுங்கள், இரவிலும் உள்ளத்தில் இறைவனைத் தியானித்து அமைதியாயிருங்கள். 5. நேரிய மனத்தோடு பலியிடுங்கள், கடவுளை நம்புங்கள்.

*106. 21.* ஆண்டவருடைய இரக்கத்தை நினைத்து அவருக்கு நன்றி சொல்வார்களாக; மனுமக்களுக்காக அவர் செய்த வியத்தகு செயல்களை நினைத்துக் கொள்வார்களாக. 22. புகழ்ச்சிப் பலிகளை அவருக்குச் செலுத்துவார்களாக; அக்களிப்போடு அவர் செயல்களைச் சாற்றுவார்களாக.

இசையாஸ் 58 .6. அக்கிரமத்தின் சங்கிலிகளை அறுத்துவிடு, அழுத்தியிருக்கும் நுகத்தடிகளை இறக்கு; ஒடுக்கப் பட்டவர்களை உரிமை மக்களாய் விடுதலை செய், சுமையானதை யெல்லாம் உடைத்தெறி. 7. பசித்திருப்பவனுக்கு உனது அப்பத்தைப் பகிர்ந்துகொடு; ஏழைக்கும் அந்நியருக்கும் உன் வீட்டிற் தங்குவதற்கு இடங்கொடு; ஆடையில்லாதவனைக் கண்டால் அவனைப் போர்த்து; உன் இனத்தானை அவமதிக்காதே. இதுவன்றோ நாம் விரும்பும் மேலான நோன்பு. 8. அப்போது உன் ஒளி காலைக் கதிரவன்போலத் தோன்றும், விரைவிலுனக்கு நலன் கிடைக்கும்; உன் நீதி உன்முன் நடக்கும், ஆண்டவருடைய மகிமை உன்னைப் பின் தொடரும். 9. அப்போது ஆண்டவரைக் கூவியழைப்பாய், அவரும் உன் மன்றாட்டைக் கேட்டருள்வார்; அவரை நோக்கிக் கூக்குரலிடுவாய், அவரும்: இதோ இருக்கிறோம், என்பார்.

சங்கத் திருவுரை 8. 14. பூமியின் மேல் இன்னொருபாடும் உண்டு. அதாவது: புண்ணியவான் தான் அக்கிரமம் செய்ததுபோல் அக்கிரமிக்கு வரும் வாதையை அனுபவிக்கிறான்; அக்கிரமியோ தான் புண்ணியம் செய்ததுபோல் நீதிமானுக்கிருக்கும் அமைதியான வாழ்வை அனுபவிக்கிறான். ஆனால், இது வெளித்தோற்றம் என்று கருதுகிறேன். 15. அதைப் பற்றிச் சூரியன் முகத்தே உண்டுகுடித்து இன்பமாயிருப்பதைவிட மனிதனுக்கு வேறு நன்மையில்லை யெனக்கொள்ளும் மகிழ்வை நான் புகழ்ந்தேன். உள்ளபடி சூரியனுக்குக் கீழே கடவுள் அவனுக்குக் கொடுத்த வாழ் நாட்களில் அவன் பட்ட தொல்லையின் பயன் அதுவேயன்றி (இவ்வுலகில்) வேறென்னதான் இருக்கிறது. 16. நான் ஞானத்தையறியவும் மனிதர்கள் வருந்தி நாடும் கதி இன்னதென்று கண்டுபிடிக்கவும் தீர்மானித் திருந்தேன். மனுமக்களிலே சிலர் இரவு பகல் தூக்கமில்லாது ஓயாமல் உழைத்து வருகிறார்கள். 17. இறுதியாகச் சூரியன் முகத்தே

கடவுள் செய்து வருகிற செயல்களின் காரணங்களை மனிதன் கண்டு பிடித்தல் இயலாதென்றும், மனிதன் அதைக் கண்டுபிடிக்க எவ்வளவுக்கு முயல்வானோ அவ்வளவுக்குக் கண்டு பிடியாதிருக்கிறானென்றும் கண்டேன். அது எனக்குத் தெரியும், என்று ஞானி சாதித்தாலும் அவன் கண்டுபிடிக்க மாட்டான் என்று கண்டேன்.

12. 1. துயர நாட்கள் வருமுன்னே, உன் வாலிப நாட்களில் உன்னைப் படைத்த கடவுளை நினை, ஏனென்றால், நல்லதன்று என்று நீசொல்லப் போகிற காலம் அண்மையிலிருக்கும், 2. சூரியனும் சந்திரனும், வெளிச்சமும் விண் மீன்களும் இருண்டுபோகு முன்னும் மழைக்குப் பின் மேகங்கள் திரும்பத் திரும்ப வருமே — அதற்கு முன்னும் (கடவுளை நினை) ... 7. மண்ணால் ஆனதுதான் தோன்றிய பூமிக்கே மறு படியும் போகுமுன்னும், ஆவியதனையளித்த கடவுளிடம் திரும்பச் சேருமுன்னும் - நீ உன்னைப் படைத்தவரை (நினைக்கக் கடவாய்).

கொலோசியர் 3. 12. ஆதலால், கடவுளால் தேர்ந்து கொள்ளப் பட்டு அவரால் அன்பு செய்யப் பட்ட இறை மக்கள் நீங்கள். இரங்கும் உள்ளம், பரிவு, தாழ்ச்சி, சாந்தம், பொறுமை ஆகிய பண்புகளை அணிந்து கொள்ளுங்கள். 13 ஒருவரை யொருவர் பொறுத்துக் கொள்ளுங்கள். ஒருவர்மீது ஒருவருக்கு ஏதாவது முறையீடு இருந்தால், மன்னித்து விடுங்கள். ஆண்டவர் உங்களை மன்னித்தது போல நீங்களும் மன்னியுங்கள். 14. இவை யெல்லாவற்றிகும் மேலாக அன்பை அணிந்து கொள்ளுங்கள். அதுவே எல்லா நற்பண்புங்களையும் பிணைத்து நிறைவு அளிப்பது.

★ ★ ★ ★

இவ்வுலகில் வளமாக வாழும் வழியைத் தமிழனுக்குக் காட்ட முன் வந்த வள்ளுவர் மனித வாழ்வின் காரணமுங் கதியும் அதை யடையும் முறையும் முதலிற் கூறினார். ஒழுக்கம் நியாய புத்தியுடைய மனிதனுக்கு மட்டுமே உரியது. நன்மை செய் தீமை தவிர் என்பதற்கு அளவுகோல் வேண்டும், ஆதாரம் அவசியம். நமது காரணரான கடவுளே நன்மைக்கு அளவு. நமது கதியான அவனே அதற்கு ஆதாரம். அவன் விருப்பமே நமது நன்மை. அதைச் செய்வதே அக்கதியை அடையும் வழி. இந்தத் தத்துவமே வேதத்தின் சாரம். படைத்தவனுக்கும் நமக்கு மிடையே உள்ள தொடர்பு பாயிரத்திலே நிறுவப்பட்டது.

கடவுள் படைப்புக்கு முதல்வன். அவனுடைய சாயலாகப் படைக்கப்பட்ட மனிதனில் அவனது குணங்கள் பிரதிபிம்பிக்கின்றன. அவை

மூலம் அவனை அறிந்து பணிதல், வணங்கல், அண்மித்தல், அவன் காட்டும் வழியில் நடத்தல் இவையே சீவியத்தின் வேலை. யாவையும் மனிதனுக்காக ஆனால் மனிதனைத் தனக்காகவே படைத்தான் இறைவன். அவனை அடைவதே பிறவியின் நிறைவு, நீடிய வாழ்வு.

படைத்த எல்லாவற்றையும் பகவன் தனதருளாலே காப்பாற்று கிறான். மனிதனுடைய உடலும் உளமும் உயிரும் வளர வேண்டிய யாவும் இயற்கையிலே ஒழுங்காக அமைந்துள்ளன. மேலிருந்து இலவசமாகக் கிடைப்பதை எடுத்துப் பாவிப்பதே மனித ஒழுக்கம், கடவுள் அறிவாற் றலாற் படைத்து அருள் மாரியாற் காப்பாற்றுவதை மனிதன் அறிந்து ஏற்கவேண்டும். ஆனால் மனித சரிதைப்படி அவனதை மறந்து அவலப் படுவதையே காண்கிறோம். ஆதலால் அவனே மனுவாக மண் மீது வந்து வழிகாட்ட வேண்டியதாயிற்று. அவரே நீத்தார், துறந்தார், அவித்தார், செந்தண்மை பூண்டார். ஒழுக்க வழிகாட்டவந்த அவரே அற வேந்தன். அவரைப் பின் பற்றி மனிதர் பெருமை யடையலாம், அந்தணராகலாம்.

பாயிரத்தின் முதல் மூன்று அதிகாரங்களும் கடவுளை மூன்று கோணங்களிலே நின்று படம் பிடித்துக் காட்டின. வல்லமை, அருள், அறிவு அவனிலேதானுண்டு. அவனைப் பற்றிக் கொள்வதே வாழ்வு. அதுவே அவசியமான அறவாழ்வு. நாலாமதிகாரம் அறத்தின் தன்மை யையும் அதின் வலிமையையும் வற்புறுத்தியது. வீட்டின் வழிக்குப் போ, பழிக்குப் போகாதே என்பது வள்ளுவர் தரும் அறிவுரை. எனவே, பாயிரம் இறைவணக்கமும் செய்யப்படுபொருளும் மட்டுமல்ல வேத விளக்கமும் செப்புகிறது. அதனால் திருக்குறள் முறையான வாழ்வின் ஒழுக்கநூல் மட்டுமல்ல நித்திய வீட்டுக்கு வழிகாட்டும் வேதநூலு மென்பதுதெளிவு.

# II. அறத்துப் பால்

மழை நீர் நிலப்பரப்பிலே அறுத்துப் பாய்வது போல மனிதவாழ்வும் காலத்திலே கழிந்தோடுகிறது. அதனால், ஆறும் அறமும் ஒரே கருத்திலுதித்த பதங்கள். ஆறு நிலத்தினியற்கையைப் பின்பற்றிக் கடலை நோக்கி ஒடுகிறது. மனிதனின் அறமும் பகுத்தறிவின் இயற்கைப் படி நெடுவாழ்வை நோக்கி விரைய வேண்டும். எனவே, அறம் ஒழுக்கம், வாழ்க்கைமுறை, உண்மை, நீதி, ஈகை, பணிபோன்ற பல இயற்கைக் கடமைகளைக் குறிக்கிறது. வள்ளுவர் தமது நூலில் நமக்களிப்பது மனித வாழ்க்கைத் திட்டம்.

தனிமனிதனே வாழ்கிறான். ஆனால் அவன் தனியாக வாழ்வதில்லை. முழு இயற்கையோடும் சிறப்பாக மற்ற மனிதரோடும் இணைந்தே வாழ்கிறான். உலகிலே குடும்பம் சமுதாயம் இனம் என்ற வரையுறையுண்டு. ஆயினும் இவற்றைப் பிரிக்க முடியாது. சீவியம் இவற்றினூடாக ஏககாலத்தில் ஓடிக்கொண்டிருக்கிறது. இகத்திலே தனிமனித வாழ்வு விரைவிலே முடிகிறது. மற்றவை தொடர்கின்றன. பரத்திலோ இனத்தின் தனி ஆட்களே நிலைப்பவர். இங்குள்ள கட்டுக் கோப்புகள் அங்கு பொருந்தா. இங்கு பயிற்சியும் பரீட்சையும் நடைபெறுகின்றன. அங்கு நிலையான வாழ்வும் மகிழ்ச்சியும் காத்திருக்கின்றன.

இறைவனை அறிந்து விடும்புவதே அறவாழ்வின் சாரம். பொருளுமின்பமும் உடலையுமுயிரையும் வளர்க்கக் கடவுள் தந்த கொடைகள். நாமெடுத்து நன்றியொடு பாவிக்க வேண்டியவை. கொடுத்தவனைக் கவனியாது படைப்பெலாம் தனக்குச் சொந்தம்போல வீணுக்குவது மனிதரின் மதியீனம். பொருளிலும் அதனால் வருமின்பத்திலும் பேராசை கொண்டு அவற்றை அபகரிக்க மனிதர் முயலுவதாலே உலகில் அநீதி மலிந்து மனித சமுதாயம் கெட்டழிகிறது. கடவுள் எதையும் எமக்கு அறுதியாகக் கொடுக்கவில்லை. எல்லாம் பாவனைக்கே, இரவல் எனலாம். நமது உயிர் தானும் நமக்குச் சொந்தமில்லை. அதற்கும் நாம் படைத்தவனுக்குக் கணக்குக் கொடுக்க வேண்டும். கடவுள் நியமித்த வேலையைச் செவ்வனே செய்யாது, அவன் தந்த உதவியை விரயமாக்கிநிர்ப்பாக்கிய மடைவது பரிதாபம்.

பிறப்புமுதல் இறப்பு மட்டான மனித ஆயுள் ஒருசக்கரம் போலச் சுழல்கிறது. அது முடியு முன் வேறு ஆட்கள் பிறந்து தொடர்கின்றனர். ஆள்முடிந்தாலும் சமுதாயம் தொடர்கிறது. இதை ஒரு திருகேணிக்கு ஒப்பிடலாம், மேல் மாடிக்கு ஏறப் படிகளும் தளங்களுமுண்டு. தனியாட்கள் மேல்நோக்கிப் படிகளிலேறுகிறார்கள். சமுதாயம் ஒவ்வொரு சந்ததியிலும் ஒவ்வொரு தளம் மேலேற வேண்டும். தங்கி நின்றால் அழிவு. உலக சரித்திரம் இதையே காட்டுகிறது. சடப்பொருட்களை அதிகம் திரட்டி அவை மூலம் சிற்றின்பங்களிலீடுபட்ட சனர் அறநெறியை மறந்தனர். அதனால் அழிவு விரைவில் வந்தது. படை, பஞ்சம், கொள்ளை, நோய், சூறவளி போன்ற கேடுகளால் மாண்டனர். இவ்வித கேடுகளை விலக்க வேண்டுமானால் அறத்தை அனுசரிப்பதிலே முதற் கண்ணாயிருக்க வேண்டும். மிருகபுலன்கள் இழுக்கும் வழியே இழியாது பகுத்தறிவு காட்டும் பரவாழ்வை நினைந்து நடக்க வேண்டும்.

அறத்தை இருதளங்களாகப் பிரிப்பது மரபு, இல்லறமே தமிழருக்குப் பொதுவானது. துறவு இல்வாழ்வின் முதிர்கனி. இல்லத்துக் கடமைகளை அனுசரித்து அதின் பொறுப்பை மக்களிடம் ஒப்படைத்தபின் பொது ஊழியத்திலீடுபடும் சிறப்பான பகுதி. மடங்களில் ஒதுங்கி வாழ்வதோ யாசித்துச் சீவிப்பதோ வள்ளுவர் மரபிலில்லை. இவை புத்தர் சமணர் போன்றவராற் தமிழகத்துட் புகுத்தப்பட்டவை. குடும்பத்தில் அன்பு அனுசரித்து அருள் அளவுக்கு வளர்ந்தவரே துறவு மேற்கொண்டு சமுதாயத்தை இயக்குவோராகவும் இனவளம் வளர்ப்போராகவும் வாழ்ந்து வீட்டுக்குத் தயாராயினர்.

## இல்லறவியல்

மனிதன் வசிப்பது இல்லத்திலேதான். இல்லறமென்பது இகபர இன்பம் விரும்பினோர் இவ்வுலகவாழ்வில் கற்பொடு சேர்ந்து நடத்தும் சீவியம். அது துறவறத்துக்கும் ஆதாரமாதலால் முதலில் வைக்கப்பட்டது. நாலடியார் இயற்றிய சமண ஆசிரியர் துறவையே முதலில் வைத்தார். வள்ளுவரோ இல்வாழ்வுக்கு முதலிடம் கொடுக்கிறார். இயற்கையான அந்நிலையையே அவரும் அனுசரித்தாரென்பது ஐதிகம்.

மிருகத்தோடு பொதுவான காமஇச்சையாற் கவரப்படுவது களவு. அதோடு மனிதபண்பான காதல்சேர்ந்து சம்மதமுண்டாயின் அது கற்பாக மாறும். மனமொருமித்த தலைவனும் தலைவியும் ஒருமனையில் வசித்துக் குடும்பக்கடமைகளை அனுசரிப்பர். கடவுளைப் பின்பற்றுவதே இல்லறத்

தின் நோக்கம். அன்பே அதின் அடிபடைப் பண்பு. அண்மையானவரை ஆதரிப்பது அதின் பிரதான வேலை. இங்கு இருவருடைய காதல் உற்றார் மீது அன்பாக மலர்கிறது. இது முதிர்ந்து பரந்து பின்னர் அருளாக மாறும்.

இல்லமே வாழ்க்கையின் மையம். குடும்பத்துக்கே சமுதாயத்தில் உரிமைகள். தனியாளுக்குத் தமிழகத்திலே உரிமை இல்லை, அதனாலே தான் குடியாட்சியென்ற பெயரும் மதிப்பும். மன்னன் குடும்பத் தலைவர்களால் நியமிக்கப்பட்ட ஊழியன். ஆனால் அவன் அதிகாரத்தை ஆக்கிரமித்துக் கொள்வது வழக்கமாகிப் பின்பு மரபாகிவிட்டது. குடும்பக் கடமையைச் செவ்வனே செய்து முடித்த சான்றோர், துறவியர், அந்தணர் எனப்படுவோரே ஆட்சியை இயக்குவோராயிருந்தனர். இவர்கள் இல்லறத்துக்கு ஆக்கமும் ஊக்கமு மளித்துச் சமுதாயத்தில் நேர்மையையும் மக்களிடையே அறிவையும் பண்பாட்டையும் வளர்த்தனர்.

இவ்வாறு இல்லத்திலுதித்து வீட்டிலே குதிக்கும் மனிதன் இளமையில் அன்பு அனுசரிக்கிறான். தான், இல்லம், சமுதாயம், இனம் என்றமுறையில் அவனுடைய ஊழியம் நிகழும். முதுமையிலோ ஒழுங்குமாறி, இனம், சமுதாயம், குடும்பம், தான் என்பன சேவைத்தளங்களாகும். இதுவே துறவியரின் அருள் வாழ்வு. இத்தகைய சூழலில் இல்லம் நித்திய வீட்டின் முன்றிலாக மிளிர்வது இயல்பே.

இல்லறவியலின் 20 அதிகாரங்களை இவ்வாறு பகுக்கலாம் —

1. குடும்பம்: தலைவன் (5) தலைவி (6) மக்கள் (7) அதின் பண்பு அன்பு (8).

2. இல்லத்திலனுசரிக்க வேண்டிய புண்ணியங்கள் : விருந்தோம்பல் (9) இனியவைகூறல் (10) செய் நன்றியறிதல் (11) நடுவு நிலைமை (12) அடக்கமுடைமை (13) பொறையுடைமை (16) ஒழுக்கமுடைமை (14). பொறையுடைமையைப் பிறனில் விழையாமைக்குப் பின் உரைகாரரே தள்ளினர் எனலாம். கற்பைப் பற்றிய தவறான கருத்தே அதன் காரணமென்பது கூடாவொழுக்கம் (28) பற்றிய விளக்கத்தால் வெளியாகும். குறட்பாக்களின் வரிசை மாறுமாதலால் அதிகார எண்களை இனிமேல் மாற்றமுடியாது.

3. இல்லத்திற் தவிர்க்க வேண்டிய பாவங்கள்: பிறனில் விழையாமை (15) அழுக்காறாமை (17) வெஃகாமை (18) புறங்கூறாமை (19) பயனில சொல்லாமை (20) தீவினை யச்சம் (21).

4. மேலும், வாழ்வு நிறைவுபெறச் செய்வன: ஒப்புரவறிதல் (22) ஈகை (23).

5. இல்வாழ்வினாலெய்தும் பயன்: புகழ் (24).

# அதிகாரம் 5. இல்வாழ்க்கை.

அறம் அனுசரிக்கும் அரங்கம் இல்லமாகும். அதுவே தனி மனிதன் சமுதாயத்துக்கும் இனத்துக்கும் தொண்டாற்றும் தளம். தனிமனிதன் முழுஆளல்லக் குறைஆள். துணையும் மக்களும் சேர்ந்தே நிறைவு பெறுகிறான். எனவே குடும்பமே சமுதாயத்தின் அணு. அதுவே முழு ஆள். மன்குடியாட்சி நிலவிய தமிழகத்திற் குடும்பத்துக்கே உரிமைகளிருந்தன. தனியாள் அதை இயக்கி நன்மை பெறுவதே முறை.

குடும்பத்தை இயக்குபவன் ஆண். இல்லத்தரசி பெண் ஆனாலும் சமுதாயத்தின் முன் ஆணே பிரதிநிதியாவான், அதனாற்தான் இவ்வதிகாரத்தில் ஆண்பால் சிறப்பிக்கப்படுகிறது. மனைவியோடு கூடிச் செய்ய வேண்டிய கடமைகள் பெறவேண்டிய சிறப்புகள் விளக்கம் பெறுகின்றன,

மனிதபுத்திப்படி வாழ்வதே அறமாகும். ஆகவே முழுச்சீவியமும் அதின் பாற்பட்டது. வாழ்வின் தளமான இல்லமும் அதின் பரிசான மோட்சமும் தமிழ் மொழியில் வீடு எனப்படுவது அருமை. இவ்வுலக முயற்சி இங்கு முடிந்துபோகாது; தொடர்ந்து வானில் நீடிக்க வேண்டியது. அறமென்பது கடவுளை நோக்கி நடப்பது. அவனை அடைவதோடு அது முடிகிறது. இகஇல்லமும் பரவீடும் மனிதவாழ்வின் ஒரே இடமென்பது முழுநூலையும் விரவிநிற்கும் பொருள். சிற்றின்பமான காதலிற் தொடங்குமில்லம் பேரின்பமான அமைதியில் முடிய வேண்டுமென்பது வள்ளுவருடைய கொள்கை.

இவ்வதிகாரப் பொருளை இவ்வாறு சுருக்கலாம்.

இல்வாழ்வான் உதவிபெறுவோர் : இயல்புடைய மூவர் (41)<br>
வறியவர் மூவர் (42)<br>
ஐம்புலத்தார் (43)

அவன் உதவிசெய்யும் முறை : பகுத்துண்ணல் (44)<br>
அன்பும் அறனும் அனுசரித்தல் (45)<br>
நிறைவுக்கு அதுவே போதும் (46).

குடும்பவாழ்வின் சிறப்பு : முயல்வாருள் அவன் தலை (47)<br>
நோற்றலின் மேலானது (48)<br>
இல்வாழ்வும் அறமும் ஒன்று (49)

அதின் இலக்கு : மனிதன் தெய்வமாதல் (50).

வீரம், வலிமை, துணிவு போன்ற ஆண்மைக் குணங்களை அனுசரித்து அறநெறி முறையே வாழ்ந்து இறைஇலட்சியம் பெறவேண்டும்.

41, இல்வாழ்வா னென்பா னியல்புடைய மூவர்கும்
நல்லாற்றி னின்ற துணே.

இல்வாழ்வான் என்பான் — குடும்பாக மனேவியுடன் வசிப்பவன் என்று சிறப்பிக்கப்படுபவன். இயல்புடைய மூவர்க்கும் — ஒரே சுபாவ முடைய மூன்று ஆட்களுக்கும். நல் ஆற்றின் நின்ற துணே— சன்மார்க்க வாசலில் உதவியாக நிற்பவன்.

இல்வாழ்தல் — மனேவியுடன் ஒருவீட்டில் வசிப்பது. இதுவே கற்பெனப்படுவது; ஒருவருக்கொருவர் பிரமாணிக்கமாயிருப்பது. இந்த வீடு வரப்போகிற வீட்டுக்கு ஆயத்தமாக அமைய வேண்டும். அங்கு நிலவும் ஒழுங்கு, அமைதி இங்கு பயிலப்படல் வேண்டும், வாழ்வது சும்மா இருப்பதுஅல்லச் சிறப்பு, வளம் பெற முயல்வதாம்.

இயல்புடைய மூவர் — இச்சொற்றெடர் அநேக உரைகாரரை அலேத்துலேத்திருக்கிறது. நால்வருணத்து மற்ற மூவர் என்பர் சிலர். ஆனுல் ஆரிய பிராமணரின் வருண வகுப்பை வள்ளுவர் ஏற்கவில்லே. அங்கு சொல்லப்படுவோர் அடுத்த செய்யுட்களில் வருகின்றனர். எனவே சிலர் தெய்வத்தன்மை யடைந்த துறவோர், நீத்தோர், என்பர், இதுவும் இங்கு பொருந்தக்காணேம்.

''மூவராகிய கடவுள்'' தமிழ் மரபிலுண்டெனப் பரிமேலழகர் ஞாபகப் படுத்துகிருர். ஏன், இக்கொள்கையின் நம்பக்கூடிய தடங்கள் இந்துநதி நாகரிகத்திலேயுண்டென்பர் கேராஸ் அடிகள். ''மூண் ஒண் முதல்வன்'' மொகெஞ்சடாரோ முத்திரைகளிலும் தோன்றுகிருன். இதைப் புரிந்து கொள்ள முடியாது இடர்ப்பட்ட புராணகாரர் முதலிடத்துக்குத் தம்மிடையே போட்டி போடும் மூவரைத் தேடிப்பிடித்து ஆட்வைத்தது அதிசயமில்லே. ஆனுலது புத்திக்கு ஒத்துவராது.

ஒரு இயல்புடைய மூவர் ஒருவர் என்பது எமது அற்பபுத்திக்குள் அடங்காத உண்மை. புலன்மூலம் நியாயித்தறிவது மனிதபுத்தி. புலனறிவுக்கு அளவுண்டு. ஒரு குறிப்பிட்ட வரையறைக்கு மேலும் கீழும் அவை கிரகிக்கமாட்டா. பல ஒலிஅலேகள் ஒளிஅலேகளே இயந்திர உதவியாலேயே நாமறிகிறேம். நவீன விஞ்ஞானத்தின் படைப்புகளேக் கண்டு அதிசயிக்கும்போது நாமறிய முடியாத ஆயிரம் காரியங்களே உணரவேண்டும். பல உண்மைகளே நாம் கேட்டே அறிகிறேம். அவற்றைப் பரீட்சிக்கப் போதிய அறிவிருந்தும் நமது சோம்பலினுல் அந்தக் கடமையைச் செய்யாது மற்றவரை நம்பி நமக்குத் தெரியும் என்று

பொய்சொல்வது மரபாகிவிட்டது. மனிதர் சொல்வதை ஏற்கும் நாம் கடவுள் நம்முட்சிறந்தவர்மூலம் அறிவிப்பதை ஏற்கமுடியாதா ?

ஒரு இயல்புடைய மூன்று ஆட்கள் ஒருகடவுள் என்பதை இங்கு விளங்காவிடினும் அதன் சாயலைப் போதியளவு சிருட்டிகளிலே காணலாகும். இயற்கையிலே பற்பல இடங்களில் மூன்றும் ஒன்றும் பொருந்துவதைக் காண்கின்றோம். அதை இலக்கியத்திலும் பாவிக்கின்றோம். இந்த நிழலின் முதற் பொருளைத்தான் நித்திய வீட்டிலே கண்டு களிக்கப் போகின்றோம். அதற்காக நமது அறிவைத் தீட்டி ஆற்றலை பெருக்குவதே இவ்வாழ்வின் முக்கிய வேலை.

இந்த இயல்புடைய மூவரையும் திருவள்ளுவர் தமது பாயிரத்திலே அறிமுகப் படுத்தி அவரையடைய வழியையும் விளம்பினார். அந்த வீட்டுக்கும் இந்த இல்லத்துக்கும் உள்ள தொடர்பு நூலின் முதற் செய்யுளிலே கிடைக்கிறது. இல்வாழ்வான் மூவர் தந்த வேலையைச் செய்து தேவ தன்மை அடைய வேண்டியவன். அவ்வேலையைச் செய்யும் தளமே குடும்பம். அதிற் செவ்வையாக வாழ்ந்தாற் தேவனாகிறான் (50).

முழுமுதற் கடவுள் மூவர் என்பதைப் பாயிரத்திலே காட்ட முயன்றார். முதலதிகாரத்திலே கடவுளின் ஆற்றலை விளக்கினார். அவர் அறவாழி அந்தணன், பொறிவாயிலைந்தவித்தான், பொய்தீர் ஒழுக்க நெறி தந்தார், முதல்வன், அடைய வேண்டியகதி; வாழ்பவன், வாழ்வழிப்பவன், வாழ்த்தப்பட வேண்டியவன்.

இரண்டாமதிகாரத்திலே அவனுடைய அருள் அறிமுகமாயது. அவன் யாவையும் தந்துசிறப்பிக்கும் வான் (இறை அருட்சக்தி) அவன் இன்றி அமையாது (இயற்கை, மனித ) ஒழுக்கு.

மூன்றாமதிகாரத்திலே அவனுடைய அறிவை விளம்பினார். யாவும் அறிந்தவன் தன்னை அறிவிக்க மனுவாக மண் மீது வந்த பெருமை பிரசித்தம்: அவரே நீத்தார், அந்தணர், ஐந்தவித்தான், நிறை மொழி மாந்தர். இவ்வாறு யாவையும், சிறப்பாக மனிதனை, உண்டாக்கிக் காப்பாற்றிக் கதிசேர்க்கும் மூவர்ஒருவர் மனிதனைத் தனது பிரதி நிதியாகக் கொள்வது அதிசயமே! இத்தகைய உரிமையை ஏற்று நிறைவேற்றுவது பெருமை. இதையே நாம் கடமை யென்கிறோம்.

(தொடரும்.)

# பிழை திருத்தம்.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| V | 30 | , | . |
| VI | 17 | முன்று | மூன்று |
| | 20 | முன்ருவது | மூன்ருவது |
| VII | 31 | யாழ்பாணத் | யாழ்ப்பாணத் |
| IX | 27 | சேக்கிளார் | சேக்கிழார் |
| | 34 | ஒமுக்க | ஒழுக்க |
| X | 35 | பேராசின் | பேரரசின் |
| XIII | 24 | ஒத்துத்போவது | ஒத்துப்போவது |
| | 25 | மொவ்வென்றும் | மொவ்வொன்றும் |
| XIV | 27 | வேளான்மை | வேளாண்மை |
| XV | 15 | ஆசிரியர் | ஆரியர் |
| XVIII | 10 | ஐந்துவித்து | ஐந்தவித்து |
| | 17 | தொடர்புகளிருந்து | தொடர்புகளிலிருந்து |
| | 36 | வறுபாட்டில்லீடு | வழிபாட்டிலீடு |
| XIX | 24 | இிறேத்த | திறேத்த |
| | 32 | அவர்ளுடைய | அவர்களுடைய |
| XX | 13 | உயித்தெழுந்து | உயிர்த்தெழுந்து |
| 5 | 26 | சுாக்க | காக்கா |
| 14 | 19 | தன | தனது |
| 19 | 16 | ...கெல்லாம | ...கெல்லாம் |
| 32 | 27 | பொய் | பொய். |
| 33 | 21 | காலம் | காலம், |
| 37 | 29 | வானோர்க்கு | வானோற்கு |
| 46 | 6 | பொருமையால் | பெருமையால் |
| 50 | 32 | பெருள் | பொருள் |
| 65 | 18 | நற்சிரிகை | நற்கிரியை |
| 69 | 32 | தாழ்வுக்குப் | தாழ்வுக்கு |
| 71 | 32 | வழி, | வழி |
| 74 | 11 | கூட்டி | கட்டி |
| | 13 | செயலும | செயலும் |
| 75 | 35 | வாங்கமலும் | வாங்காமலும் |
| 78 | 16 | அதிகாரங்களும் | அதிகாரங்களும் |

# பகுத் தறிவு

பல்லவி : பகுத்தறிவைப் பாவிக்கப் பழகு — தம்பி
வெகுத்துவரு தீமைகள் விலகுமே நம்பு — பகுத்

அனுபல் : இகத்துறை மாந்தர் பெற்ற
இலட்சியத்தை இழவாமல்
மகத்துவ மிக்க உம்பர்
மன்னுல கெய்தி வாழப் — பகுத்

சரணம் : 1. கல்வி நன்று கற்குங்காலம்
காலென விரைந்து போகும்
அல்லலென்று ஏங்கிடாது
நல்லறிவைத் தேடவேண்டும் — பகுத்

2. நன்மைதின்மை தேர்ந்துணர்ந்த
உண்மைவழி உரிமையிங்கு
இன்மைசெய்யு மிச்சைமார்க்கம்
பண்புமல்லப் பலனுமில்லைப் — பகுத்

3. அன்பு செய்வ தின்பம், வேறு
வன்பு தரும் துன்பம் வேண்டாம்
சான்ருேன் என்ற சீரடைந்து
ஆன்ருேராசி பெற்றுவாழ்வாய் — பகுத்.

அன்பளிப்பு

சுப்பிரமணியம் அருள்பிரகாசம்

நினைவாக

“ கோகனதை வாசம் ”
சுதுமலை (மத்தி)
மானிப்பாய்.

பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னுஞ்
செம்பொருள் காண்ப தறிவு. (358)

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு. (453)

ஏவவுஞ் செய்கலான் றான்றேரா னவ்வுயிர்
போஒ மளவுமோர் நோய். (848)

கிடைக்குமிடம் :

புனித விசேந்தி அச்சகம்,
மக்கோனை.

கத்தோலிக்க புத்தக சாலை,
கொழும்பு 11.

புனித வளன் கத்தோலிக்க அச்சகம்,
யாழ்ப்பாணம்.

விலை, ரூபா, 5. 00.